பக்கங்கள்: முப்பத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 10 சனிக்கிழமை (26.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 365



14 பூக்களில் மிளிரும் மருத்துவம்



27 7 ஆயிரம் பேரை சிறை வைத்த கிளர்ச்சியாளர்கள்



29 அஸ்வின் அழித்தார் சதம் சமநிலை நோக்கி ஆட்டம்

## கார்த்திகை 27 மாவீரர்தினத்தில் ஆண்டவனுக்குக்கூடத் தடையா?

### நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. உணர்ச்சி மயம்

கொழும்பு, நவ.26

நவம்பர் 27 இல் (நாளை) அனுஷ்டிக்கப்படும் தமிழர்களின் ஒரே ஒரு பெருவிழாவான மாவீரர் தினத்தில் கோயில்களில் மணியடித்துப் பூஜை செய்வதற்கு - அந்த ஆண்டவனுக்கே தடை விதிக்கப்படுகிறது. போரில் மடிந்த வீரர்களுக்கு பூ வைக்க முடியாமல் துயிலும் இல்லங்கள் அடியோடு அழிக்கப்பட்டிருக்கின்றன.

- இவ்வாறு நாடாளுமன்றில் உணர்வு கொப்பளிக்கத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

நாடாளுமன்றில் நேற்று வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்குகூறியவை வருமாறு:-

ஒரே தீவில் இரண்டு தேசிய இனங்கள் வாழுகின்ற போதிலும், அவர்கள் தமக்குரிய அரசியலையும் பொருளாதாரத்தையும் வெவ்வேறு அடிப்படையில் கொண்டுள்ளனர். இந்த உண்மைகளை அனுசரித்து ஏற்கனவே நடந்திருந்தால் இலங்கை பொருளாதாரத்தில் அபிவிருத்தியை எட்டுவதில் எந்தவிதப் பிரச்

பக். 31

## ஆலய மணி ஒலிக்க வன்னியிலும் தடை

### மாவீரர் தினத்தையொட்டி

நெடுங்கேணி, நவ.26

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள பெரு ஆலயங்களில் மணி ஒலி எழுப்புவதற்கும் சிறு ஆலயங்களில் பூசை செய்யவும் மணிகளை ஒலிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்தத் தடை உத்தரவுகள் நேற்றைய தினம் தொடங்கி நாளைவரை நீடிக்கும் என்று படையினர் அறிவித்துள்ளனராம்.

ஆரம்பத்தில் இந்த மூன்று தினங்களும் இங்குள்ள சகல ஆலயங்களிலும் பூசைகள் நடத்தவும் மணிகளை ஒலிக்கவும்

பக். 31

# அமெரிக்காவிடம் கூட்டமைப்பு வழங்கிய அறிக்கையின் நகல் அரசிடம் சிக்கியது

### கொழும்பு அரசியலில் பரபரப்பு; தீர்வு முயற்சி பாதிக்கப்படும் அபாயம்

கொழும்பு, நவ.26

அமெரிக்கப் பயணத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சிடம் ஒப்படைத்த விசேட அறிக்கையின் ஒரு பிரதி இலங்கை அரசின் கைகளில் சிக்கியிருப்பது கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒக்ரோபர் மாத பிற்பகுதியில் அமெரிக்காவிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த தமிழ்க் கூட்டமைப்பினர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சிற்குச் சென்று அங்கு உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர். அத்துடன், இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவை தொடர்பிலான அரசின் செயற்பாடுகள் என்பன பற்றிக் குறிப்பிட்டு விசேட அறிக்கை ஒன்றையும் கூட்டமைப்பினர் ராஜாங்கத் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்த அறிக்கையின் ஒரு பிரதியே இப்போது இலங்கை அரசின் கைகளில் சிக்கியிருப்பதாக அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

"அரசைக் கடுமையாக விமர்சித்து, தவறான தகவல்களை முன்வைத்து தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் உள்ளடக்கம்" அரசுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருப்பதாகவும் அந்த அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைதி முயற்சிகளுக்கான பேச்சுகள் ஒருபுறம் நடைபெறும் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இவ்வாறான செயற்பாடுகள் பெரும் அதிருப்தி தருவதாக அமைந்துள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி அறிக்கையை அரசின் முக்கியமான உறுப்பினர்கள் சிலர் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் இது தொடர்பிலான நிலைப்பாட்டை நேரம் வரும்போது அரசு அமெரிக்காவுக்குத் தெளிவுபடுத்தும் என்றும் அரசின் மிக முக்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-சி)

## இன்று பிரபாகரனின் பிறந்ததினம்; வடக்கில் பாதுகாப்புக் கெடுபிடி

யாழ்ப்பாணம்,நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 57 ஆவது பிறந்ததினம் இன்றாகும். இதனால் வழமையைவிடவும் வட பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று முதல் அதிகரித்துக் காணப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்

பக். 31

## மிதி வெடியில் சிக்கி இளைஞர் காலிழப்பு

சுன்னாகம்,நவ.26

சுன்னாகம் பகுதியில் நேற்று மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் இடதுகாலை இழந்தார்.

சுன்னாகம் மருதனார்மடம் பகுதியில் வளவு ஒன்றில் விறகு வெட்டச் சென்ற இளைஞரே இவ்வாறு மிதிவெடியில் சிக்கி இடது காலை இழந்துள்ளார்.

பக். 31

## சிறுபான்மையினரைப் பாதுகாக்கப்போய் பெரும்பான்மையினரை இழந்தது ஐ.தே.க.!

கொழும்பு, நவ.26

சிறுபான்மையினரைப் பாதுகாக்கப்போய் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மையினரும் இல்லாமற்போயினர்,

- இப்படிக் கூறியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க. வார இறுதி சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கருத்து வெளியிட்டுள்ள அவர் கொழும்பு மாநகரசபையின் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு மனோ கணேசனிடம் மண்டியிட வேண்டிய அவசியமில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே தலைமைத்துவத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத காரணத்தினால்தானா மனோ கணேசனின் ஆதரவு கொழும்பு மாநகரசபையில் நிச்சயமற்று இருக்கிறது என்ற

பக். 31

## அனலைதீவில் ஆயுத வேட்டை

ஊர்காற்றுறை,நவ.26

அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தில் ஈ.பி.டி.பி அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து மேற்படி வீட்டினை பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து சோதனையிட்டனர். இருப்பினும் அங்கிருந்து ஆயுதங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை என்று யாழ்.மாவட்ட

பக். 31

## இலங்கை அகதிகள் சிலர் ஆஸ்திரேலியாவில் விடுவிப்பு

கொழும்பு, நவ.26

சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றபோது கைது செய்யப்பட்டு, அகதி அந்தஸ்து கோரிய நிலையில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் இலங்கையர்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அகதி அந்துஸ்து கோருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் மாதாந்தம் 100 அகதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவில் உள்ள தங்களது

பக். 31

## அரசியல்வாதிகளின் அடிவருடிகளாக நீதித்துறையினர்

### மங்கள சமரவீர கண்டனம்

கொழும்பு, நவ.26

நீதித்துறை இன்று அதி தீவிரமாக அரசியல் மயமாக்கப்பட்டு வருகின்றது. தனிப்பட்ட பிரதிபலன்களுக்காக நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகச் செயற்படுகின்றனர் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கண்டனம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நான்காவது நாளாக நடைபெற்ற வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சட்டமும், ஒழுங்கும் பாது

பக். 31

## மாத்தறையில் 12 பேர் உயிரிழப்பு

மாத்தறை, நவ.26

இலங்கையின் கரையோர மாவட்டமான மாத்தறையில் சீரற்ற காலநிலையின் பாதிப்புகளால் 12 பேர் நேற்று உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இது குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாத்தறை மாவட்ட இணைப்பாளர் டபிள்யூ எவ். பாலசூரிய கருத்துத் தெரிவிக்கையில்:-


மாத்தறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் நேற்று மாத்தறையில் மினி சூறாவளியும் வீசியது. இதனால் பல வீடுகள் சேதமடைந்ததுடன் பெரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. அத்தோடு மாத்தறை கடற்பகுதியும் கடும் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றது.

இத்தகைய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால்

பக். 31

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/படங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் மழைக்கான சாத்தியம் உள்ளது.

# இரணைமடுக் குளத்தின் 10 வான் கதவுகள் திறப்பு

## தாழ்நிலப் பகுதி மக்களை விழிப்புடன் இருக்க அறிவுறுத்து

கிளிநொச்சி, நவம்பர் 26

வன்னியில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்திருப்பதை அடுத்து அதன் 10 வான் கதவுகள் நேற்று வெள்ளிக்கிழமை அவசர அவசரமாகத் திறக்கப்பட்டன. மழை தொடர்ந்து பெய்வதனாலும் குளத்துக்கு நீர் வரத்து மிக அதிகமாக இருப்பதனாலும் கதவுகளை மேலும் திறக்கவேண்டி இருக்கும் என்று அபாய எச்சரிக்கை விடுத்திருக்கிறார் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பதில் பணிப்பாளர் எந்திரி என்.சுதாகரன்.

இரணைமடுக் குளம் 34 அடி நீர்க் கொள்ளளவு கொண்டது. எனினும் அணைக்கட்டின் பாதுகாப்புக் கருதி அதில் ஆகக் கூடுதலாக 30 அடி வரைக்குமே தண்ணீர் தேக்கப்பட்டு வருகின்றது. நேற்று இரவு 7 மணிவரையான நேரத்தில் குளத்தில் 29.3 அடிக்கு நீர் நிறைந்திருந்தது.

''குளத்துக்கு நீர்வரத்து மிக அதிகமாக உள்ளது. நேற்றிரவு 7 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மட்டும் நீர்மட்டம் சுமார் இரண்டு அடி அதிகரித்துள்ளது. அதனால் மொத்தமுள்ள 11 கதவுகளில் 10 கதவுகளை 6 அங்குலங்களுக்கு நேற்று அவசரமாகத் திறக்க வேண்டி ஏற்பட்டது'' என்று தெரிவித்தார் எந்திரி என்.சுதாகரன்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நீர்மட்டம் 28.11 அடியாக இருந்தபோது வான்கதவுகள் திறக்கப்பட்டன. ஆனால் அதன் பின்னரான நீர் வரத்தில் நீர்மட்டம் இரவு 7 மணிக்குள் 29.3 அடியாக உயர்ந்திருந்தது.

''கடந்த 19ஆம் திகதி ஆரம்பித்த மழை தொடர்கிறது. நாளை 27ஆம் திகதி காலைவரை மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருக்கிறது. எனவே வான் கதவுகளைத் திறந்தேயாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது'' என்று அவர் விளக்கினார்.

குளத்துக்கு வரும் தண்ணீரின் அளவும் வெளியேறும் தண்ணீரின் அளவும் மணிக்கொரு தடவை மிக நெருக்கமாகக் கணிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

''காலையைவிட மாலையில் நீர் வரத்து மிக அதிகமாக இருந்தது. குளத்துக்கு இப்போது செக்கனுக்கு 8,500 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. எனினும் மக்களைப் பாதிக்காத வகையில் செக்கனுக்கு 750 கன அடி தண்ணீரே வெளியேற்றப்பட்டு வருகிறது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட்டதன் பின்னர் நீர் மட்டத்தின் அளவைப் பொறுத்து வான் கதவுகளை நாளை (இன்று) மேலும் திறப்பது பற்றி முடிவு செய்யப்படும்'' என்று நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார் கிளிநொச்சி, நீர்ப்பாசனத் திணைக்கள பதில் பணிப்பாளர்.

மக்களுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சகல நடவடிக்கைகளும் அரச அதிபர் ஊடாக எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். எனினும் தாழ் நிலங்களில் உள்ள மக்களை விழிப்பாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இரணைமடுக்குள வான் கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, ஊரியான், வட்டக்கச்சிப் பண்ணைப் பகுதி மற்றும் புளியம்பொக்கணை வரையான பகுதிகள் என்பன வெள்ளக்காடாகியுள்ளன.

இன்று வான் கதவுகள் மேலும் திறக்கப்படுமிடத்து கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்படும் என்றும் அதற்குத் தயாராக இருக்குமாறும் கிளிநொச்சி செயலகம் எச்சரித்துள்ளது.

முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, குமரபுரம், கோரக்கன்கட்டு, பிரமந்தனாறு, புளியம்பொக்கணை, தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர வேண்டிய் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்பட்டால் அவர்களைப் பராமரிப்பதற்கான நலன்புரி நிலையங்களும் உதவிகளும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். இடம்பெயரும் மக்களுக்கு சமைத்த உணவு வகைகளை வழங்கும் பொறுப்பு கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-த-6)

# வன்னியில் பல பகுதிகள் வெள்ளத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கிளிநொச்சி, நவ.26

வன்னியில் தொடரும் மழை காரணமாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பல குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன. பாதுகாப்புக் கருதி குளங்களில் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இதனால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், வீதிகளூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மழை தொடர்ந்து பெய்து வருவதனால் குளங்களில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் இரணைமடுக்குளம் உட்பட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலுள்ள சுமார் 10 இற்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பி வழிகின்றன. இதனால் அந்தக் குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இந்த வான் கதவுகள் ஊடாகக் குளங்களில் உள்ள மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வன்னியில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. வெள்ள நீர் பல இடங்களில் வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்கின்றது. இதனால் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளம் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் தட்டுவன் கொட்டிப்பகுதிக்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. இத்தகைய பாதிப்பு ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் ஏற்கனவே அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. அத்துடன் தட்டுவன் கொட்டிப் பகுதி மக்களின் அத்தியாவசியப் போக்குவரத்துக்காக இன்று சனிக்கிழமை படகுச் சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று கோட்டைகட்டிய குளத்தின் கலிங்கியின் ஊடாக மேலதிக நீர் வெளியேறுவதால் அக்கராயன்-துணுக்காய் வீதியூடான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. இப்பகுதியில் மூன்று இடங்களில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்கின்றது. இத்துடன் கொக்காவில் வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் புனரமைக்கப்படாமையால், குறித்த வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இந்த வீதிகளூடாகப்பயணம் செய்யும் வாகனங்கள் வீதிகளில் புதையும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியையும் ஊடறுத்து வெள்ளம் பாய்வதால் இங்கும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியாவில் பறங்கியாற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளமையில் பூவரசங்குளம்-பனங்காமம் வீதியினூடாக போக்குவரத்தும் நேற்றுமாலை முதல் தடைப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

(த-6)

# கொழும்பு பங்குச்சந்தையின் நடவடிக்கை தற்காலிக நிறுத்தம்

மிலங்கா விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஐந்து வீத வீழ்ச்சியால் கொழும்பு பங்குச் சந்தையின் நாளாந்த பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டன. எனினும் நேற்று மதியம் அளவில் பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதாக என கொழும்பு பங்குச் சந்தையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதிலிருந்து கொழும்பு பங்குச் சந்தையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்துள்ளதை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தினமும் சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ங-சி)

# கோம்பாவிலில் நேற்று 72 குடும்பங்கள் குடியமர்வு

முல்லைத்தீவு, நவ.26

முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த 72 குடும்பங்கள் கோம்பாவிலில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் முதற்கட்டமாக நேற்று குடியமர்த்தப்பட்டன. 79 குடும்பங்களைக் குடியமர்த்துவதாக இருந்த போதும் 72 குடும்பங்களே நேற்று மீளக்குடியமர்ந்தன. என்றுமுல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் பகுதியையச் சேர்ந்த மக்கள் இறுதிப் போரின் பின்னர் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 79 குடும்பங்களை நேற்று கோம்பாவிலில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் குடியமர்த்த திட்டமிடப்பட்டிருந்தது.

கோம்பாவிலில் அமைக்கப்பட்டுள்ள அரை நிரந்தர வீடுகளிலேயே மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த வருட இறுதிக்குள் மெனிக்பாம் முகாமை மூடிவிடும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகவே அங்கு எஞ்சியுள்ள மக்கள் கோம்பாவிலில் குடியமர்த்தப்படுகின்றனர்.

நேற்று குடியமர்த்தப்பட்டவர்களுக்கான ''வாழ்வாதார உதவிகள் விரைவில் படிப்படியாக வழங்கப்படும்'' என்று அரச அதிபர் தெரிவித்தார்.

(உ-15)

# நிகழ்வுகள் இன்று

**இலவச சட்ட உதவி**

இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தால் சட்ட வாரத்தை முன்னிட்டு பொது மக்களுக்கான இலவச சட்ட உதவி முகாம் காலை 9 மணிக்கு யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுயில் இடம்பெறவுள்ளது. (ம-313)

**கூட்டம்**

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களினதும் மாற்று வலுவுடையோரினதும் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-100)

* * *

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் பொதுக் கூட்டம் பிற்பகல் 4 மணிக்கு சங்கத் தலைவர் கெ.மகேந்திரன் தலைமையில் நவாலி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ம-100)

**நடமாடும் சேவை**

நவாலி, நவ.26

மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று காலை 8 மணிக்கு நவாலி சென். பீற்றர் பாடசாலையில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேட் தலைமையில் நடைபெறவுள்ளது. தே.அ. அட்டை, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு, பொலிஸ் முறைப்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்து இந்த நடமாடும் சேவையில் மக்கள் முறையிடமுடியும். (வ-100)

# கடற்படையினரின் அனுமதி இல்லாததால் தொழிலுக்குச் செல்ல அஞ்சும் மீனவர்கள்

யாழ்ப்பாணம்,நவ.26

அண்மையில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட கீரிமலை சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடத் தயக்கம் காட்டி வருகின்றனர். கடற்றொழிலில் ஈடுபட்டால் கடற்படையினர் தாக்கக்கூடும் என்ற அச்சமே இந்தத் தயக்கத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் இந்த வருடம் மே மாதம் மக்கள் மீள்குடியேற அனுதிக்கப்பட்டபோதும் அவர்கள் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிவழங்கப்படவில்லை. எனினும் இது குறித்து யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், 'யாழ். குடாநாட்டில் உள்ள சகல கடற்பகுதிகளிலும் சுதந்திரமாக மீனவர்கள் தொழில் செய்யலாம்' என்று யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி தெரிவித்திருந்தார். எனினும் இது குறித்து சேந்தாங்குளம் மீனவர்களுக்கு கடற்படையினர் எதுவித அறிவுறுத்தல்களையும் வழங்கவில்லை.

எனவே கடற்படையினரின் அறிவுறுத்தல் இல்லாமல் தொழிலுக்குச் சென்றால், கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாக கூடும் என்ற அச்சம் மீனவர்களுக்கு இருப்பதால் அவர்கள் கடற்றொழிலில் ஈடுபட தயக்கம் காட்டுகின்றனர்.

இதேவேளை -

சேந்தாங்குளம் மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்படைத் தளபதியின் கவனத்துக்கு கொண்டுவர உள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (ங-15)



மாத்தறையில் கடும் மழை மற்றும் மினி சூறாவளி காரணமாக உயிரிழப்புடன் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப் போயுள்ளது.

## யாழில் பொலிஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பு

கொழும்பு, நவ.26

யாழ். மாவட்டத்தில் இளைஞர் - யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என யாழ். பொலிஸ் நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

இதன்படி உதவிப் பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் ஆகிய பதவிகளுக்கு இளைஞர் - யுவதிகளை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் நவம்பர் 28, 29, 30 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இலங்கைப் பொலிஸ் சேவையில் இணைந்துகொள்ள விரும்பும் அனைத்து இளைஞர், யுவதிகளும் இந்த நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## மும்மொழிக்கொள்கைப் பிரகடனம் துரதிர்ஷ்டமான நடவடிக்கையே

### கெஹெலிய கவலை

கொழும்பு, நவ.26

இலங்கையில் மும்மொழிக் கொள்கையைப் பிரகடனப் படுத்துவது துரதிர்ஷ்டமான நடவடிக்கைகளில் ஒன்று என தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையை 2012 ஆம் ஆண்டில் மும்மொழி நாடாக பிரகடனப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதென அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளதாக அரச இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் தலை விரித்தாடிய பயங்கரவாதம் தோற்கடித்த பின்னர் எடுக்கப்பட வேண்டிய துரதிர்ஷ்ட நடவடிக்கைகளில் ஒன்றாக இலங்கை மக்கள் மும்மொழிகளிலும் சரளமாக தொடர்பு கொள்ள கூடிய வழிமுறைகளை ஊக்குவிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதியதையடுத்தே இந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்ததாக அவ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மும்மொழி இலங்கை அமுலாக்கலுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10ஆண்டு கால தேசிய திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டுமே நாட்டின் அரச கரும மொழி என்ற தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றினார்.

அக் கொள்கைப் பிரகடனத்தில் இருந்து வந்த நிலையிலேயே நாட்டில் யுத்தம் ஓய்ந்துள்ள இத் தருணத்தில் மக்களிடத்தில் மொழிப் பிரச்சினை காணப்படுவதனால் தனிச்சிங்களச் சட்டத்தை விடுத்து மும்மொழியிலும் மக்கள் சரளமாக தொடர்பு கொள்ளக் கூடியவகையில் அடுத்த ஆண்டில் இருந்து இந்த மும்மொழிக் கொள்ளைத் திட்டத்தை இலங்கை அரசு உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தனிச் சிங்களச் சட்டத்தை விடுத்து மும்மொழியும் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட வேண்டியது துரதிர்ஷ்ட வசமான நடவடிக்கை என்ற கோணத்திலேயே அமைச்சர் கெஹெலிய கருத்துத் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ங-15)

## ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை

## தபால் அடையாள அட்டை பரீட்சார்த்திகளுக்கு இந்த வருடத்திலிருந்து புதிய நடைமுறை

கொழும்பு, நவ.26

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தபால் அடையாள அட்டைகளுடன் தோற்றும் பரீட்சார்த்திகள் அந்த அடையாள அட்டையின் போட்டோ பிரதியொன்றை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிப்பது கட்டாய நிபந்தனையாக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

பரீட்சார்த்திகளுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும், அநேகமானோர் தபால் அடையாள அட்டையை மட்டுமே வைத்துள்ளனர். தபால் அடையாள அட்டையில் பல மோசடிகள் நடக்கின்றன.

எனவே, மோசடிகளைத் தவிர்ப்பதற்காகவே தபால் அடையாள அட்டைகளின் பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும்.

அத்துடன், கடந்தமாதம் 31ஆம் திகதிவரை மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப்பங்களை ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கத் தவறிய அதிபர்களின் விவரங்களைத் தருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ங-15)

## குடிமகன்கள் நால்வர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்,நவ26

பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் பொது இடங்களில் மதுபோதையில் நடமாடிய நால்வர் நெல்லியடி பொலிசாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இந்த நான்கு 'குடிமகன்களும்' பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நால்வருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ங-319)

## நிவாரணம் இல்லாத போலி பட்ஜெட்: ஜே.வி.பி. துண்டுப் பிரசுரப் போராட்டம்

கொழும்பு, நவ.26

''போலியான வரவு - செலவுத்திட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கான ஒரு முயற்சியே துண்டுப்பிரசுர விநியோகப் போராட்டம். நிவாரணம் இல்லாத கனவாகப் போன இந்த வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கவே இந்தத் துண்டுப்பிரசுர ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்கிறோம்'' - என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிரான துண்டுப்பிரசுர நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மழைக்கு மத்தியிலும் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களுடன் இத்துண்டுப்பிரசுர நிகழ்வு இடம்பெற்றது.

''நிவாரணம் இல்லாத கனவு வரவு - செலவுத்திட்டத்தைத் தோற்கடித்து மக்களின் பொருளாதார தேவைக்காகப் போராடுவோம்'' என்று எழுதப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் மேலும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பல திட்டங்களின் சுருக்கங்களும் எழுதப்பட்டிருந்தன.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்த ஆகிய கட்சி ஊறுப்பினர்களும், ஆதரவாளர்களும் துண்டுப்பிரசுர ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (ங-15)

# பல்கலைக்கழகங்களில் பொலிஸ் காவலரண்கள் அமைக்கும் திட்டம் கைவிடப்படாவிட்டால் மாணவர் போராட்டம் வெடிக்கும்

### ஐ.தே.கட்சி எச்சரிக்கை

கொழும்பு, நவ.26

பல்கலைக்கழகங்களில் பொலிஸ் காவலரண்கள் அமைக்கும் திட்டத்தை உயர்கல்வி அமைச்சு கைவிட வேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் மாணவர்கள் போராட்டம் வெடிக்கும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. ருவன் விஜேவர்தண நேற்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பல்கலைக்கழக மாணவர் முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு-

நாட்டுக்குள் ஜனநாயகம் இல்லை. அதேபோன்று பல்கலைக்கழகத்துக்குள்ளும் சுதந்திரமாகக் கல்வி கற்கும் நிலைமையை இல்லாதொழித்து மாணவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது தொடருமானால் சிரியா, எகிப்து போன்ற நாடுகளைப் போல் மாணவர்கள் வீதியில் இறங்குவார்கள் - என்றார்.

இதேவேளை- பல்கலைக்கழகங்களில் பொலிஸ் நிலையங்களை அமைப்பதா? இல்லையா? என்பதை மாணவர்களே தீர்மானிக்க வேண்டும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் நவரத்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில்பொலிஸ் காவலரண்கள் அமைக்கும் திட்டத்தை உயர்கல்வி அமைச்சு கைவிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகின்ற நிலையிலேயே உயர்கல்வியமைச்சின் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

ஒரு சிறு மாணவர் குழுவினரால் பல்கலைக்கழகங்களில் குழப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதனால் ஏனைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதற்கு இடமளிக்க முடியாது. எனவே, பல்கலைக்கழகங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்வதா? அல்லது சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதா? என்ற தீர்மானத்திலேயே பொலிஸ் காவலரண்கள் அமைப்பது தொடர்பிலான கேள்விக்குத் தீர்வுகாண முடியும்.

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டம், ஒழுங்கு பல்கலைக்கழகங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும். அதனை மீற முடியாது. பல்கலைக்கழகம் தனியொரு உலகமல்ல. அதுவும் நாட்டுடன் தொடர்புபட்டது - என்று அவர் தெரிவித்தார். (ங-15)

# கிளிநொச்சி கல்விவலயத்தைப் பிரிக்க கல்விமான்கள், புத்திஜீவிகள் வரவேற்பு

அக்கராயன் , நவ.26

கிளிநொச்சிக் கல்வி வலயம் இரண்டாக உருவாகவிருப்பதைக் கிளிநொச்சி மாவட்டக் கல்வியியலாளர்கள், மற்றும் புத்திஜீவிகள் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

இலங்கைத் தீவிலேயே 106 பாடசாலைகளைக் கொண்ட மிகப் பெரிய கல்வி வலயமாக கிளிநொச்சி கல்வி வலயம் விளங்குகிறது. இந்தக் கல்வி வலயத்தில் 28 ஆயிரத்து 663 மாணவர்கள் உள்ளனர். ஆயிரத்து 684 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். இது பளை, பூநகரி, கரைச்சி, கண்டாவளை என்ற நான்கு கல்விக் கோட்டங்களைக் கொண்டுள்ளது. கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சிக் கல்வி வலயத்தை இரண்டு கல்வி வலயங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து இருந்து வருகின்றது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டிலிருந்து கிளிநொச்சிக் கல்வி வலயம் இரண்டாக உருவெடுக்கவுள்ளது. ஒரு வலயம் பரந்தனிலும், அடுத்தது அக்கராயனிலும் தமது பணிமனைகளை அமைக்குமெனத் தெரிய வருகிறது.

தற்போது கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சிக் கல்விவலயம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# தேவையோ ரூ .1,000 மில்லியன் கிடைத்ததோ ரூ.300 மில்லியன் மட்டுமே!

## கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், நவ.26

கிளிநொச்சி அக்கராயன் குளத்தை முழுமையாகப் புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது கிடைக்கப்பெற்ற 300 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதாகக் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அக்கராயன் குளத்தைப் புனரமைக்க 300 மில்லியன் நிதியைத் தற்போது பயன்படுத்துகிறோம். அக்கராயன் ஆற்றுப் பகுதியைப் புனரமைப்ப தற்கு நிதி கிடைத்தால் அதனையும் புனரமைப்போம் அடுத்த ஒக்ரோபர் மாதத்துக்குள் அக்கராயன் குளப் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்பட வேண்டும். சிறுபோக விவசாயத்துக்குத் தடையின்றி நீர் வழங்கப்பட வேண் டும்.

இரணைமடுக் குளம் போன்று அக்கராயன் குளமும் கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கியமான குளம் எனவும் அவர் தெரிவித்தார்.

(க-410)

# வீதி ஒழுங்கில் மாணவர்கள் அக்கறை செலுத்த வேண்டும்

முல்லைத்தீவு, நவ.26

பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தால் விபத்துக்களைத் தவிர்க்க முடியுமென முல்லைத் தீவிலுள்ள சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

தற்போது மாணவர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமையால் பல விபத்துச் சம்பவங்கள் நிகழ்கின்றன.

வீதிகளில் சைக்கிளில் செல்லும்போது பலர் சமாந்தரமாகச் செல்வதும், கைத்தொலை பேசியில் கதைத்தவாறு செல்வதும், இன்னொருவரின் சைக்கிளைப் பிடித்தவாறு செல்வதும், போட்டி போட்டுக்கொண்டு செல்வது மான நடவடிக்கைகளில் மாணவர்கள் தற்போது ஈடுபடுகின்றனர்.

மேலும் வீதிகளில் வாகனங்கள் வரும்போது திடீரெனக் குறுக்காகவும் செல்கின்றனர். இத்தகைய செயற்பாடுகள் பலருக்கும் ஆபத்தை விளைவிக்கத் தக்கது. மேலும் தற்போது வீதிகளில் வாகனங்கள் அதிவேகமாகச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே இது தொடர்பாக மாணவர்களுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் அறிவு றுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க-500)

# மழையால் வீதிக்கு சேதம்

மன்னார் , நவ.26

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலத்துக்குச் செல்லும் வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் இந்தவீதியூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு மன்னார் நகரசபையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ள போதிலும் தொடர்ந்து பெய்துவரும் மழை இடையூறாக உள்ளது. (க-601)

# வேற்றுமொழி சேவையால் சிரமம்

நெடுங்கேணி, நவ.26

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள சில கிராமங்களில் நடமாடும் மருத்துவ சேவைகள் நடைபெற்றுள்ள போதிலும் மக்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு வேற்று மொழியில் இவை இடம்பெற்றதால் அவர்கள் சிரமங்களுக்கு ஆளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் தாங்கள் விளங்கக் கூடிய வகையில் தமது சொந்த மொழியிலேயே இந்த நடமாடும் சேவைகள் இடம்பெற வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)

# சோளப் பயிர்ச்செய்கை

முல்லைத்தீவு, நவ.26

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சோளப் பயிர்ச் செய்கைத் திட்டம் இடம்பெற்று வருகின்றது.

சீ.ஐ.சீ நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் இது இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒதியமலை, கரடிப்புலவு, தண்டுவான், சிவநகர், தட்டையர் மலை, பண்டாரவன்னி, முத்துஐயன்கட்டு, முத்து விநாயகபுரம், மாங் குளம், பழைய கொலனி, திருமுறிகண்டி, வித்தியாபுரம், ஒட்டு சுட்டான் ஆகிய கிராமங்களிலிருந்து இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இவர்களின் வாழவாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தற்போது சோளச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (க-500)

# தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் மன்னாரில் இயல்பு நிலை பாதிப்பு





மன்னார்,நவ.26

மன்னார் மாவட்டத்தில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் மாவட்டத்தின் பல பாகங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.


அண்மைக்காலமாகத் தொடர்ந்து பெய்து வந்த மழை கடந்த இரண்டு தினங்களுக்கும் மேலாக பெய்யாமல் இருந்தது.இந்த நிலையில் கடந்த மூன்று தினங்களாக இரவு பகல் பாராது தொடர்ந்து பெய்து வருகின்றது.

இதனால் மாவட்டத்தின் பல பாகங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மன்னார் நகர சபை மழை நீரை வெளியேற்றத் தொடர்ந்தும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மன்னாரில் உள்ள அனைத்துக் குளங்களும் நிறைந்து வழிந்தோடுகின்றன.

இதனால் மக்களின் குடிமனை சார்ந்த இடங்களில் உள்ள மழை நீரைக் குளத்திற்கோ அல்லது கடலுக்கோ அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் மக்களின் இயல்பு நிலை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றது. வீதிகள் அனைத்தும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழை பெய்வதாலும்,வீதிகளில் மழை நீர் தேங்கி நிற்பதாலும் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு அவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். எதிர் வரும் 28 ஆம் திகதி மூன்றாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது.இந்த நிலையில் மழையின் தாக்கம் பாடசாலை மாணவர்களைப் பெரிதும் பாதித்து வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (க-604)

# சீராக அமையாத வடிகாலமைப்புக்களால் வெள்ள நீரை வெளியேற்ற முடியாத நிலை



மன்னார் , நவ.26

மன்னாரிலுள்ள அனைத்துக் கழிவுநீர் வடிகால்களும் நிறைந்து வெள்ளம் வழிந்தோடுவதால் தற்போது பெய்துவரும் மழை வெள்ளத்தை வெளியேற்ற முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

மன்னாரில் வடிகாலமைப்பு வேலைகள் யுனொப்ஸ் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இந்த வேலைகள் உரிய முறையில் இடம்பெறாததால் இடைநடுவில் கைவிடப்பட்டன. இங்குள்ள கிராமங்களில் தேங்கும் கழிவுநீர் வாய்க்கால்கள் ஊடாகக் கடலுக்குச் செல்வது வழமையாகும். ஆனால் தற்போது மழைநீர் கிராமங்களுக்குள் உட்புகும் நிலைமை தோன்றியுள்ளது.

தற்போது மழைநீர் வழிந்தோட முடியாத நிலையிலுள்ளதால் வீதிகளிலும் வீடுகளிலும் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனை வெளியேற்ற முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். (க-601)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கடந்தவாரம் 74 குடும்பங்கள் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, நவ.26

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான பிரதேச செயலர் பிரிவில் 74 குடும்பங்கள் கடந்த வாரம் மீள்குடியமர்த்தப்பட்டதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரி.தினேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 74குடும்பங்களைச் சேர்ந்த 323 பேர் கடந்தவாரம் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வெளியிடங்களில் வாழ்ந்தவர்கள், புனர்வாழ்வு பெற்று மீளவும் சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் ஆகியோரே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட திருமுறிகண்டியைச் சேர்ந்த மீளக் குடியமர்வு செய்யப்படாமல் மெனிக்பாம் முகாமில் உள்ள 45 குடும்பங்களையும் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட 27 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 6 ஆயிரத்து 61 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 729 பேர்வரையில் மீள்குடியமர்வு செய்யப்பட் டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தக்க தருணத்தில் தர்மம் தலைகாட்டுவது காலத்தின் நியதி...

இலங்கை நாகரிகமானதும், பெருமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டதுமான இறைமையுள்ள நாடு. இங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது எப்படி என்பதற்கு, எந்த ஒரு வெளிநாட்டு வழிகாட்டுதலும் எமக்குத் தேவையில்லை.

இராணுவம் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். ஆனால் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. கொழும்பில், லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில், அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த நல்லிணக்கம் தொடர்பான தேசிய கருத்தரங்கில் பேசுகையிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கம் மாண்டுபோய் ஆண்டுகள் ஐம்பத்தைந்து கடந்தேகி விட்டன. அது துளிர்ப்பதற்கு, இந்த நாட்டை ஆண்டு அனுபவித்த எந்த அரசுமே, அது ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தால் என்ன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தால் என்ன மனங்கொண்டு உழைத்ததில்லை. மாறாக தமிழர்களில் இரண்டொரு பேருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கித் தம்மோடு அணைத்துக்கொண்டு, சில சலுகைகளை வழங்கித் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக மிதிப்பதிலேயே அதிக கரிசனையையும் கவனத்தையும் கொண்டிருந்தன.

தமிழ் மக்களின் சொந்த மண்ணை, பல மேனி மினுக்கும் திட்டங்களை மேலே காட்டி, கீழே சூழ்ச்சி வலையைப் பின்னிப் பிடுங்கி எடுத்ததில், இரண்டு பிரதான கட்சிகளுக்கும் பங்குண்டு என்பது சுதந்திரத்துக்குப் பின்னரான "வரலாற்றின்" பதிவாகும். அதேபோன்று, சிறுபான்மையினர் என்ற காரணத்தை வைத்து, வேலைவாய்ப்பு, வாழ்க்கை வசதிகள் மற்றும் அபிவிருத்தித் துறைகளில் அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.

அதன் விளைவு, தேசிய நல்லிணக்கம் என்றால் என்ன? அது கடையில் வாங்கும் சுக்கா, மிளகா? என்ற நிலையையே சிங்கள அரசியல் தலைவர்கள் உருவாக்கினார்கள். போர் தொடங்கப்பட்ட கடந்த இருபத்தெட்டு வருடங்களுக்கும் மேலாக நல்லிணக்கம் இந்நாட்டில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தது. பெரும்பான்மையின மக்களில் மிகக் குறைந்த வீதத்தினரிடம் நல்லெண்ணம் இருந்தது உண்மைதான். ஆனால் அரசியல் தலைவர்கள், நல்லிணக்கம் என்பதனை வேப்பெண்ணெயாக மாற்றிவிட்டனர்.

போரின் போதும், அதன் பின்னரும் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றச் சாட்டுகள் என்பன உலகளாவிய ரீதியில், சர்வதேச மட்டத்தில் கிளர்ந்து எழுந்த காரணத்தாலேயே இந்த நாட்டில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் குறித்த ஆய்வுகளும், கருத்தரங்குகளும், அதனை வெறும் பேசு பொருளாக - தொனிப்பொருளாகக் - கொண்ட மாநாடுகளும் இங்கு தலைகாட்டத் தொடங்கியுள்ளன.

அவற்றில் ஒன்றே கொழும்பில் நடைபெற்ற நல்லிணக்கம் தொடர்பான தேசியக் கருத்தரங்கும் ஆகும். தேசிய இன நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதில், தான் பற்றுறுதியுடன் செயற்படப் போவதாக சர்வதேசத்துக்குக் காட்டும் பாதாகைகளாகவே இத்தகைய கருத்தரங்குகள் இன்னும் பலப்பல நடத்தப்படும் என்று எதிர்பார்க்கலாம். அவற்றை நடத்துவது தவறன்று. இதுவரை காலமும் அதனை மறந்திருந்த தென்னிலங்கை இப்போது துடித்துப் பதைத்து விழித்திருப்பது, வரவேற்கப்பட வேண்டியது என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது.

வன்னிப் போரின் போது இராணுவம் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்திருப்பது சிறு முன்னேற்றம்; சகுனம் என்றும் கூறலாம். வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டா என்று கூறியிருப்பதும் இங்கு கவனத்தை ஈர்ப்பதாகும்.

இறுதிப் போரின் போது, தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். மனிதாபிமான இராணுவ நடவடிக்கை ஒன்றின் போது அது தவிர்க்க முடியாதது என்று பலவிதமாகக் கூறப்பட்டு வந்தது. இப்போது இறுதிப் போரின் போது இராணுவத்தினர் குற்றம் இழைத்திருக்கலாம். அவ்வாறு குற்றம் இழைத்தவர் தண்டிக்கப்படலாம் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட பின்னரே இந்த நிலைப்பாடு வெளியாகி உள்ளது. (அந்த அறிக்கை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை) முழு அறிக்கையும் வெளியிடப்படுமா அல்லது வெட்டிக் கத்தரிக்கப்பட்டு அரசுக்குச் சாதகமானவை மட்டும் வெளியிடப்படுமா என்பது இனிமேல் தான் தெரியவரும்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு அறிக்கையைத் தூசாகக் கருதி, அதனை மிதித்து, அது பொய் என்றும், புழுகு என்றும், புனைகதைகளை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டது என்றும், 'பிடியடா அடியடா' என்று கோபாவேசம் காட்டிய எமது நாட்டு அரசு, இப்போது வேண்டா வெறுப்பாக, வன்னியில் நடத்திமுடித்த (நடந்து முடிந்த) கொடுமைக்கு இராணுவம் பொறுப்பாக இருந்திருக்கலாம் என்று பகர்கிறது!

போர் முடிந்த கையோடு, பொதுமக்களில் ஒருவரேனும் கொல்லப்படாமல் அதனை வென்றதாகவும், ஒரு கையில் மனித நேயமும் மறு கையில் துப்பாக்கியுடன் படையினர் போராடினார்கள் என்று நாட்டின் தலைவரே கூறியிருந்தார்!

ஐ.நா. நிபுணர்களின் அறிக்கையை ஐ.நா. சபையில் ஆராயவேண்டும், மனித உரிமைகள் ஆணையத்தில் விவாதிக்க வேண்டும் என்று வெளிநாடுகள் வற்புறுத்தியபோது அவற்றை எதிர்த்த அரசின் பிரதானிகளில் ஒருவர் கொழும்புக் கருத்தரங்கில், இப்போது உண்மையைப் போட்டுடைத்துள்ளார்.

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அனைத்துலக நீதியாளர் விசாரணைக்குழு வேண்டும் என்று சர்வதேச நாடுகள் பலவும் ஒருபுறம் கேட்கவும், சர்வதேச நீதியாளர்கள் கொண்ட நீதி விசாரணைக்குழுவை இலங்கை அரசு நியமிக்க வேண்டும் என்று மற்றும் சில சர்வதேச நாடுகள் வலியுறுத்தவும் அவற்றைக் காதில் போட்டுக்கொள்ளாத அரச தரப்பு -

இப்போது வெளிநாட்டு வழிகாட்டுதல்கள் தேவையில்லை என்று கூறுவது, தமக்குள்ளேயே காரியத்தைச் "சடைந்து விடலாம்" என்ற நோக்கத்துடன் கூடியதா?

உண்மைக்கு அழிவில்லை. மறைந்திருந்தாலும் எப்போதாவது தக்க தருணத்தில் தர்மம் தலைகாட்டும் என்பது காலத்தின் நியதி.

# வடக்கில் இடம்பெறும் திட்டங்களில் குறைபாடுகளைச் சீர்செய்ய நடவடிக்கை

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ.26

உலக வங்கிக் குழு வடக்குக்கு விஜயம் மேற்கொண்டபோது இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அந்தக் குழுவால் முன் வைக்கப்பட்டிருந்தது. இவற்றைத் தீர்ப்பதற்கு வடமாகாண ஆளுநரின் தலைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண துரித மீட்சித் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் எந்திரி ச.சு.சிவகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பெரும்பான்மையான நிறைவேற்று முகவர்களாக உள்ள வடக்கு மாகாண சபை மற்றும் ஒப்பந்தகாரர்கள் உலக வங்கிக் குழுவினரால் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

* ஒப்பந்தகாரர்கள் எழுந்தமானமாக வேலைகளைப் பெரிதாக்கிச் செல்லுதல்.
* வேலைத் தளங்களில் தங்களது வேலைத் திட்டங்களைச் சமர்ப்பிக்காமை.
* வேலைத் தளங்களில் மேற்பார்வை உத்தியோகத்தர்களை அடிக்கடி மாற்றம் செய்தல்.
* வேலைத் தளங்களில் நேர்த்தியான தற்காலிக வேலைத்தள அலுவலக வசதிகள் இல்லாமை.
* வேலைத் தளங்களில் பூரணமாக அனுமதிக்கப்பட்ட கட்டுமான வரைபடங்கள் இல்லாமை.
* எழுத்து மூலமான தெளிவான அறிவுறுத்தல்கள் எழுதப்படும் தன்மை குறைவாக காணப்படுகின்றமை.
* மீளாய்வுகள் உரியமுறையில் எழுத்து மூலம் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு திட்டப் பணிமனைக்கு அறிவிக்கப்படாமை மற்றும் இவ்வாறு செய்யப்பட்ட மேலதிக வேலைகளுக்கு உரிய மீளாய்வுகள் அனுமதிக்கப்படாமையால் கொடுப்பனவுகளும் இடம்பெறாமை.
* தொழில் நுட்ப ஆய்வுக் குழுவின் அறிவுறுத்தல்கள் உடனடியாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு அது நிவர்த்தி செய்யப்பட்டமை தொடர்பாக உரிய முறையில் கொடுப்பனவுச் சிட்டையுடன் அறிவிக்கப்படாமை.
* திட்டப் பணிமனைக்குக் கொடுப்பனவுச் சிட்டை அனுப்புவதில் அதிகூடிய காலதாமதம் செய்தல்

போன்ற குற்றச் சாட்டுக்கள் உலக வங்கிக் குழுவினரால் முன்வைக்கப்பட்டமை.

மேற்படி குற்றச் சாட்டுக்கள் நிவர்த்தி செய்யப்படாமல் போனால் வடமாகாணத்தின் 5 அரச அதிபர்களால் மாவட்டம் தழுவிய தேவைப் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமல் போகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் தலைமையில் இந்த மாதம் 12 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது, ஒப்பந்தகாரர்களிடமிருந்து இதுவரை செய்யப்பட்ட வேலைகளின் கொடுப்பனவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சகல நிறைவேற்று முகவர்களும் உடனடியாக இந்தக் கொடுப்பனவுச் சிட்டைகளைச் சீர்பார்த்து தொழில்நுட்ப ஆய்வுக் குழுவால் கூறப்பட்ட அவதானிப்புகள் திருத்தப்பட்டதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஆளுநரின் செயலாளர் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவானது ஒப்பந்தகாரர்களால் கொடுப்பனவுச் சிட்டை சமர்ப்பிக்கப்பட்டு 3 வாரத்தினுள் கொடுப்பனவுக்காகத் திட்டப் பணிமனைக்கு அனுப்பப்படுவதை உறுதி செய்யும்.

எனவே சகல ஒப்பந்தகாரர்களும் தங்களது நிறைவேற்று முகவர்களுடன் கலந்துரையாடி, அனைத்து வேலைகளுக்குமான கொடுப்பனவுகளையும் வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிமனைக்கும் ஆளுநருக்கும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

# கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.26

வடக்கில் கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வடக்கில் கடந்த ஜூலை மாதம் பாதுகாப்பு அமைச்சின் விசேட ஏற்பாட்டில் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் புள்ளி விவரவியல் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகளில் ஆசிரியர்கள் ஆயிரம் பேர்வரை ஈடுபடுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது கொழும்பிலுள்ள புள்ளி விவரவியல் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து இதனை வழங்கும் நடவடிக்கைகளில் மாவட்ட செயலக புள்ளிவிவரவியல் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது.

எனவே மேற்படி கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் தமக்கான கொடுப்பனவுகளைப் பிரதேச செயலகங்களிலுள்ள புள்ளிவிவரவியல் திணைக்கள உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(த-15)

# 2012 மும்மொழி ஆண்டு

கொழும்பு, நவ.26

அடுத்த ஆண்டை மும்மொழி ஆண்டாகப் பிரகடனப்படுத்துவது என அரசு தீர்மானித்துள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் மக்கள் கற்றுக் கொள்ள ஊக்கப்படுத்த இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாதம் மீண்டும் தலைதூக்காமல் தடுப்பதற்கு இந்த மும்மொழி விருத்தி தேவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை மக்கள் மும்மொழிகளிலும் தமது தொடர்பாடலை வினைத்திறனுடன் மேற்கொள்வதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதன்மூலம் வெவ்வேறான இனக் குழுமங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் களையப்படும் என்று ஜனாதிபதி முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் 'ஆசியாவின் அதிசயம்" என்னும் இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு இது காத்திரமான அடித்தளமாக இருக்கும் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

மும்மொழிக் கொள்கைத்திட்டம் எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனை ஒருங்கிணைப்பதற்காக புதிய அலகு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் உருவாக்கப்படவுள்ளது. (த-சி)

**நாளை**

கார்த்திகை 11, ஞாயிற்றுக்கிழமை 27.11.2011
திதி: துதியை காலை 8.55 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ. 12.48வரை
சுபநேரம்: 9.12-10.42 வரை, ராகு காலம்: 4.42-6.12 வரை

உதயன்
26 நவம்பர் 2011 சனிக்கிழமை

# யாழ். ஆஸ்பத்திரியில் புதிய ஜெனரேற்றர் இருந்தும் மின்சாரம் பெறமுடியாத நிலை

## சுகாதார அமைச்சின் அசண்டையீனமே காரணமாம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். போதனா வைத்தியசாலைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட புதிய மின்பிறப்பாக்கியிலிருந்து மின்சாரம் வழங்குவதற்கான கேபிள்களைக் கொள்வனவு செய்வதற்குரிய நிதியைச் சுகாதார அமைச்சு, இன்றுவரை வழங்கவில்லை. இதனால் மின்பிறப்பாக்கி இயங்காமல் அப்படியே உள்ளது. இதன் காரணமாக வைத்தியசாலையில் வைத்தியர்கள், நோயாளர்கள் மின்தடைப்படும் நேரங்களில் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டு பல மாதங்களாகின்ற போதும், அதனை இயக்கி மின்சாரம் வழங்கச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் தடைப்படும் நேரங்களில் தற்பொழுது வைத்தியசாலையிலுள்ள ஒரேயொரு மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. ஏனைய மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளன. வைத்தியசாலை மின்பிறப்பாக்கி மூலம் வைத்தியசாலையின் சகல பிரிவுகளுக்கும் ஒரே தடவையில் மின்சாரம் வழங்க முடியவில்லை. இதனால் அங்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்படுகிறது.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

இது பற்றி மின்சார சபையினரிடம் விளக்கம் கோரினோம். கேபிள்களைக் கொள்வனவு செய்ய 40 லட்சம் ரூபா நிதி தேவைப்படுகிறதென அவர்கள் கூறினார்கள். இது பற்றிச் சுகாதார அமைச்சிடம் தெரிவித்துள்ளோம். எனினும் இதுவரை உரிய பதில் வரவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தப் புதிய மின் பிறப்பாக்கி மூலம் வைத்தியசாலை முழுவதற்கும் மின்சாரம் வழங்கக் கூடிய நிலை இருந்தும் அது இயங்காமையால் வைத்தியசாலையில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(த-4-135)

# ஹெரோயின் பாவித்த இரு இளைஞர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 26

ஹெரோயின் வைத்திருந்து பயன்படுத்திய குற்றத்துக்காக இளவயதினர் இருவர் யாழ். நீதிமன்றில் பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

நாவாந்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப இருவரும் ஹெரோயின் பாவித்த நிலையில் யாழ். நாவலர் வீதியில் நின்றிருந்த வேளை யாழ். பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். இருவரும் அபராதம் செலுத்திச் சென்றனர். (ஓ-4)

# கட்டாக்காலிக் கால்நடைகள் நாளை முதல் பிடிக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். மாநகர எல்லைக்குள் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடிக்கும் பணிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

பிடிக்கப்படும் கால்நடைகளை உரிமையாளர்கள் 10 நாள்களுக்குள் அதற்கான தண்டப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவை யாழ். மாநகர சபையால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளை 27 ஆம் திகதி முதல் நல்லூர் வட்டாரத்திலும், 28 ஆம் திகதி முதல் வண்ணார் பண்ணையிலும், 29 ஆம் திகதி முதல் நாவாந்துறையிலும், 30 ஆம் திகதி முதல் குருநகர் பகுதியிலும், அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பாஷையூரிலும், 02 ஆம் திகதி முதல் அரியாலையிலும் இந்தக் கட்டாக் காலிக் கால்நடைகள் பிடிக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.

மாநகர எல்லைக்குள் கட்டாக்காலிக் கால்நடைகள் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்பட்டன. இவற்றினால் வீதிகளில் பகல், இரவு நேரங்களில் விபத்துக்களும் ஏற்பட்டன.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)



வாழ்வாதார உதவி: சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பயனாளி ஒருவருக்குப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆடு ஒன்றை வழங்குகிறார். அருகில் சமுர்த்தி பொது முகாமையாளர் ரி.சந்திரதாசன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் உள்ளனர். (த-7)

# நெல் வயல்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையினால் பெரும்பாலான நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கூடுதலாகத் தாழ்ந்த பகுதிகளில் உள்ள வயல்களே இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் அவற்றில் உள்ள நெற்பயிர்களும் வெள்ள நீரில் அமிழ்ந்துள்ளன.

வயல்களில் தேங்கியிருக்கும் வெள்ளத்தை அகற்றும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. மழை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் நெற்பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (த-26)

# நல்லூர் பிரதேச ஆலயங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 26

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆலயங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

ஆலயங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்கச் செய்வதால் பொதுமக்களும், மாணவர்களும், நோயாளிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆலயத் திருவிழாக் காலங்களில் தொடர்ச்சியாக ஒலி பெருக்கியை அதிக சத்தத்துடன் ஒலிக்க விடுவதால் பலருக்கும் மன உளைச்சல் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபையிடம் மக்களின் முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதால் ஆலய நிர்வாகிகளுக்கு இந்தக் கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

அனைத்து ஆலய நிர்வாகிகளையும் குறித்த தினத்தில் சமுகமளிக்குமாறு நல்லூர் பிரதேச சபைத்தலைவர் அறிவித்துள்ளார். (த-311)

# சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வழங்குவது தண்டனைக்குரிய குற்றம்

## சுதேச வைத்தியப் பணிப்பாளர் அறிவிப்பு

அச்சுவேலி, நவ. 26

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்கி வைத்தியம் செய்வது சட்டவிரோதமானது; தண்டனைக்குரியது. இந்த வகையில் இவ்வாறு வைத்தியம் செய்பவர்கள் தொடர்பாக சமூக நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு நோயாளர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். ஆங்கில மருந்துகளை வழங்கும் சுதேச வைத்தியர்கள் தொடர்பான தகவல்களை வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்துக்கு வழங்கி உதவவேண்டும்.

இவ்வாறு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சியாமா துரைரத்தினம்.

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை வழங்கி நோயாளர்களுக்குச் சிகிச்சை மேற்கொள்வது தொடர்பாக வடக்குமாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

சுதேச வைத்தியத்துறையில் கற்றுத் தேர்ந்தவர்கள் உரிய முறையில் பதிவு செய்து அனுமதியைப் பெற்ற பின்னரே சுதேச வைத்தியத்துறை சார் மருந்து வகைகளைப் பிரயோகித்து வைத்தியம் செய்ய வேண்டும்.

சுதேச வைத்தியத்துறையைக் கற்று வைத்தியம் செய்பவர்கள் ஆங்கில மருந்து வகைகளைப் பிரயோகிப்பது சுதேச வைத்தியத்துறையைக் களங்கப்படுத்துவதுடன் தங்களையும் களங்கப்படுத்தி விடுகின்றனர்.

சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்து வகைகளைப் பயன்படுத்தி வைத்தியம் செய்வதோடு தங்களை ஆங்கில மருத்துவர்கள் எனச் சமூகம் நம்பும் வகையில் நடத்து கொள்வது சட்டவிரோதமானது மட்டுமல்ல சமூக விரோதமானதுமாகும். நோயாளர்களின் உரிமையை மீறும் செயலாகும். இவர்கள் தொடர்பான தகவல்களை உடனடியாக யாழ். ஆடியபாதம் வீதியில் உள்ள சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு வழங்கி உதவ வேண்டும்.

புத்தூர் பகுதியில் மாணவி ஒருவர் மரணமடைந்தது தொடர்பாக எனக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக யாரும் அறிவிக்கவில்லை. இந்த வகையில் மாணவி மரணமடைந்திருந்தால் அது மன்னிக்க முடியாத குற்றம். பொருத்தமான முறையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். மரணமடைந்த மாணவியின் குடும்ப உறவினர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு உண்மையான நிலைப்பாட்டினைத் தெரிவிப்பது இந்த வகையில் எதிர்காலத்தில் நடவாமல் இருப்பதற்கு ஆவன செய்ய உதவும்.

பொது அமைப்புகள் இது தொடர்பாக பிரதேச மக்களுக்குப் பொருத்தமான முறையில் அறிவூட்டல் செய்தல் வேண்டும். சுதேச வைத்தியர்கள் சுதேச வைத்தியத்துறை சார் மருந்து வகைகளை வழங்கி வைத்தியம் செய்வதற்கும் வைத்தியத் துறையில் கலப்படம் இல்லாத தூய்மையான நிலை இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் எனக்கூறினார். (த-11)

# நெடுந்தீவில் 100 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.26

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக நெடுந்தீவு கிழக்கு, மத்தி, மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்கள் வரை பாதிப்படைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான மதிப்பீடு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலத்த மழை காரணமாக நெடுந்தீவு கிழக்கு கந்தசுவாமியார் கோவிலடி, ஆலமாவனப் பிள்ளையார் கோயிலடி மற்றும் மேற்குப்பகுதியில் உள்ள பெரும்பாலான இடங்கள் மத்தியில் உள்ள வீடுகள் என்பவற்றுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு உணவு வழங்கக்கூடிய வகையில் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அத்தியாவசிய பொருள்களின் இருப்பு உள்ளதா என்பது குறித்து நெடுந்தீவுப் பொலிஸார் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(த-7)

# தொடர்ந்து பெய்யும் மழையை அடுத்து நோயாளரால் நிரம்பும் வைத்தியசாலைகள்

## நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரம்

யாழ்ப்பாணம், நவ.26

குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தொடர்மழையை அடுத்து நோய்கள் பரவ ஆரம்பித்துள்ளமையால் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் நாளாந்தம் வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெறுவதற்காகச் செல்கின்றனர்.

நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும் சுகாதாரத் திணைக்களத்தினால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலைகள் அனைத்திலும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதிகள் நோயாளர்களால் நிரம்பியதால் விடுதிகளின் நடைபாதைகளிலும் நோயாளர்கள் இருப்பதைக் காண முடிகின்றது.

ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகப் பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். சாவகச்சேரி வைத்தியசாலையும் தினமும் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகிறது.

தினமும் சராசரியாக 600 க்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவு உட்பட சிக்சை பெற்று வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேசம் மட்டுமல்ல வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலிருந்தும் நோயாளர்கள் வந்து சிகிச்சை பெற்றுச்செல்வதை காணமுடிகிறது.

இவ் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிபரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை வைத்தியசாலைகளின் சூழலில் டெங்கு நோய் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலைக்குப் பொறுப்பாக உள்ள வைத்திய அத்தியட்சகர்கள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோர் மேற்கொள்ளவேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

வைத்தியசாலைகளில் நீர் தேங்கும் இடங்களை துப்புரவாக வைத்திருப்பதற்கு வைத்தியசாலைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கு வைத்தியசாலை மேற்பார்வையாளர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இந்தக் கடித்தத்தில் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.(த-26-207-300)

# கூட்டுறவுக் கிராமிய வங்கி சமாசத்துக்குள் வெள்ளம்



யாழ்ப்பாணம், நவ.26

குடாநாட்டில் நேற்று முன்தினம் கொட்டித் தீர்த்த கடும் மழையினால் யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச அலுவலகம் வெள்ளத்தில் மூழ்கியது.

அலுவலகத்துக்குள் வெள்ளம் புகுந்தமையால் அதன் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

பணியாளர்கள் ஒருவாறு அலுவலகத்தில் தேங்கிய வெள்ளத்தை அகற்றிய பின்னர் பணிகளைத் தொடர்ந்தனர்.

அதிக மழை பெய்தால் இந்த் அலுவலகமும் அதனை அண்டிய கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தையும் வெள்ளத்தில் மூழ்குவது வழக்கம்.

இந்தப் பகுதியில் வெள்ளம் தேங்காத வகையில் சீர்செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், இதுவரை சம்பந்தப்பட்ட தரப்புகளினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பொது முகாமையாளர் செ.ஙெகங்காதரன் தெரிவித்தார்.

இந்தச் சுற்றாடலில் வடிகால் ஒன்றை அமைத்து அதன் ஊடாக வெள்ளத்தை வழிந்தோடச் செய்துதருமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் எழுத்து மூலமான கோரிக்கைகளைத் தான் ஏற்கனவே விடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை- மழையினால் முற்றவெளி, தனியார் பஸ்தரிப்பு நிலையச் சுற்றாடல் ஆகியன வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. (த-26)

# யாழ். - பருத்தித்துறை இடையே 750 இலக்க பஸ்சேவை சீரில்லை

யாழ்ப்பாணம்,நவ.26

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கும் இடையில் சேவைகளில் ஈடுபடும் 750 வழித்தட இ.போ.ச பஸ்களின் சேவைகள் ஒழுங்கற்ற தன்மை நிலவுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

காலை 7 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்கள் ஒழுங்காக சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் அதற்குப் பிற்பட்ட நேரமான காலை 7.30 மணி, காலை 8.00 மணி ஆகிய நேரங்களில் பருத்தித்துறையில் இருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் ஒழுங்கற்ற தன்மை நிலவுவதாகப் பயணிகள் கூறுகின்றனர்.

குறிப்பாக பருவகால சீட்டின் மூலமாக பயணம் செய்யும் பயணிகள் நீண்ட நேரம் பஸ்ஸுக்காக வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த முறைப்பாடு தொடர்பாகப் பருத்தித்துறை டிப்போவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

எமக்கு உள்ள வளப்பற்றாக் குறைக்கு மத்தியிலும் சேவையை வழங்கி வருகின்றோம். எமது பஸ்கள் பழுதாகி டிப்போவுக்குத் திரும்புகின்ற சூழ்நிலையில் சேவைகளில் ஒழுங்கற்ற தன்மை ஏற்படுகின்றது. எம்மிடம் உள்ள பஸ் பற்றாக்குறை காரணமாக காலை 7.30 சேவையில் ஈடுபடும் 750 இலக்க பஸ்ஸை சிலவேளைகளில் 751 இலக்க பஸ் இல்லாத போது 751 இன் முக்கியத்துவம் கருதி சேவையில் ஈடுபடுத்துகின்றோம். இது எமது இயலாமையே தவிர நிர்வாகப் பிரச்சினை அல்ல. எம்மிடம் பஸ்கள் மேலதிகமாக இருந்தால் ஒழுங்கான சேவையை வழங்குவோம். பஸ் பழுதடைந்து டிப்போவுக்கு திரும்பாவிட்டால் சேவைகள் ஒழுங்காக இடம் பெறும்- என்றனர். (த-319)

# நெடுந்தீவு தபாலகத்தின் புனரமைப்பு துரித கதியில்

யாழ்ப்பாணம், நவ.26

நெடுந்தீவு தபாலகத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம் பெற்று வருவதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தபாலகத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென 1.6 மில்லியன் ரூபா நிதியை மத்திய தபாலகம் ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி தபாலகத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

தபாலகக் கட்டடத்தின் கூரை பழுதடைந்தமையால் மழை காலங்களில் வெள்ளம் உட்புகுந்து தபாலகத்தின் பணிகள் பாதிக்கப்பட்டதுடன் அங்கு வரும் பொதுமக்களும் பெரும் சிரமப்பட்டனர். (த-26)

# வடதாரகை இல்லாத நாள்களில் பயணிகள் சேவையில் குமுதினி

யாழ்ப்பாணம், நவ. 26

நெடுந்தீவுச் சேவையில் உள்ள குமுதினி படகு இன்று சனிக்கிழமை முதல் வடதாரகை சேவையில் இல்லாத நாள்களில் நெடுந்தீவில் இருந்து காலை 6.15 மணிக்கும், குறிகாட்டுவானில் இருந்து பிற்பகல் 5 மணிக்கும் பயணிகள் சேவையை வழங்கும்.

கடும் காற்று, கடல் கொந்தளிப்பான நாள்களில் வடதாரகை துறைமுக வெளிக் கடலில் நங்கூரமிட்டுப் பயணிகளை ஏற்றி இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் காலை 6.15 மணி, மாலை 5 மணி சேவைகள் பாதிப்படைவதால் குறிப்பிட்ட நேரங்களில் குமுதினி படகைச் சேவையில் ஈடுபடுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் குமுதினி சேவையில் ஈடுபடுவதில்லை. குமுதினி படகை ஞாயிற்றுக்கிழமைகளில் சேவையில் ஈடுபடுத்தி செவ்வாய் அல்லது வியாழக் கிழமைகளில் ஏதாவது ஒரு நாள் அதன் சேவையை நிறுத்தி வைக்கலாம் எனவும், ஞாயிற்றுக்கிழமை சேவையில் ஈடுபடுவதால் உத்தியோகத்தர்களுக்கு வசதியாக இருக்கும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (த-7)

# இ.போ.ச.பஸ்கள் இரண்டும் பழுது நெடுந்தீவில் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.26

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த இ.போ.ச பஸ்கள் இரண்டுமே பழுதடைந்தமையால் படகுப்பயணிகள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் எனப்பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் உள்ள மரணச் சடங்கு ஒன்றுக்குச் செல்வதற்காக நெடுந்தீவு மேற்குப்பகுதியில் பஸ்வரும் எனக்காத்து நின்ற 80க்கும் அதிகமானோர் பஸ் வராததால் பின்னர் நடந்தும், சைக்கிள்களிலும் துறைமுகத்தை வந்தடைந்தபோது பயணிகள் படகு குறிகாட்டுவானுக்குப் புறப்பட்டு விட்டது.

படகைத் தவறவிட்ட அவர்கள் துறைமுகத்தில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே ஒரு பஸ் பழுதடைந்தபோது அதனைத்திருத்துவதற்காக இதுவரை இ.போ.ச எவரையும் நெடுந்தீவுக்கு அனுப்பவில்லை. இந்த நிலையில் எஞ்சியிருந்த பஸ்ஸும் இப்போது பழுதடைந்துள்ளது. இதனால் நெடுந் தீவு மக்களின் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. உரியவர்கள் இது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# ஊர்காவற்றுறை முகாம் வீதி கடும் சேதம்

யாழ்ப்பாணம்,நவ.26

ஊர்காவற்றுறை முகாம் வீதியில் கடந்த ஆறுவருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் அந்த வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு தற்போது பெய்துவரும் மழையினால் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இந்த வீதி பயணிகள் போக்குவரத்து கூடுதலாக இடம் பெறும் முக்கிய வீதிகளில் ஒன்றாகும்.

இந்த வீதியை உடன் புனரமைத்து மக்களுக்குச் சீரான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (த-7)

# யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு வாகனத்தில் 89 ஆடுகள் கடத்தல்

## பொலிஸாரால் மூவர் கைது

தென்மராட்சி, நவ. 26

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்குக் கடத்தப்பட்ட 89 ஆடுகள் சாவகச்சேரிப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்குச் சென்ற மூடி அடைக்கப்பட்ட வாகனத்தைப் பொலிஸார் சோதனையிட்டபோது, அதனுள் 89 ஆடுகள் இருப்பதைக் கண்டு அவற்றினை மீட்டதுடன் கடத்திச் சென்ற புத்தளத்தைச் சேர்ந்த மூவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களையும் ஆடுகளையும் வாகனத்தை பொலிஸார் மறுநாள் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அனுமதிப்பத்திரமின்றியும் ஆடுகளை சித்திரவதைப்படுத்தும் வகையில் மூடி அடைக்கப்பட்ட வாகனத்திலும் சென்றதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கினை விசாரித்த நீதிவான் சந்தேக நபர்கள் மூவரையும் டிசெம்பர் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் மீட்கப்பட்ட ஆடுகளைத் தென்னைப் பயிர்ச்செய்கை சபை, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றிடம் கையளிக்குமாறும், நீதிமன்றம் கோரும் போது ஆடுகளை நீதிமன்றில் வேளையில் ஒப்படைக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் நீதிவான் தெரிவித்தார்.

அண்மையில் காலமாக குடாநாட்டில் திருட்டுப் போன ஆடுகள் பல கடத்திச் செல்லப்பட்ட ஆடுகளுக்குள் இருக்கலாமென நம்பப்படுகிறது. (த-207)

# மரண அறிவித்தல்



## திருமதி கனகாம்பிகை ஜெகநாதன்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை ஜெகநாதன் 23-11-2011 அன்று சிட்னியில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற உடையார் நல்லைநாதன் மற்றும் சிவகாம்பிகையின் புதல்வியும், காலஞ் சென்ற டாக்டர். ஜெகநாதன் தில்லைநாதன் மனைவியும், வத்சலா, பரதன், சுசித்ரா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் தாயாரும், பிரகதீஸ்வரன், வத்சலா, தயானந்தன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மாமியாரும், காயத்திரி, துர்க்கா, சரணியா, நிமலன், காய்ஷினி, நிஷா, வித்யா ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகை 26-11-2011 சனிக்கிழமை அன்று றொக் வுட் மெமொரியல் பார்கில் (நியு சவுத் வேல்ஸ்) நடைபெறும்.

**தகவல் : திருமதி சுசித்ரா தயானந்தன்**
#183, Homebush Road, Strathfield NSW – 2135
T.P – 0061-296421395

# கண்பரிசோதனையும் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வும்

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கான இலவச கண்பரிசோதனை முகாமும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை 9.30 மணி தொடக்கம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

52 ஆவது படையணியின் ஏற்பாட்டில் 522ஆவது படைப்பிரிவினரால் நடத்தப்படவுள்ள கண் சிகிச்சை முகாமில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ், மிருசுவில், உசன், கெற்பேலி விடத்தற்பளை, கச்சாய், கொடிகாமம், மற்றும், வரணி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களைக் கலந்து கொள்ளுமாறு 522 ஆவது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் லிலான் ரஞ்சகொட அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 50 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 52ஆவதுபடையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யு.ஏ.வீ.அனுரசுத சிங்க கலந்து கொள்வார்.

(த-207)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 07 . 1946

உதிர்வு 26 . 11 . 2010



அமரர் பொன்னுத்துரை பாலச்சந்திரன்
(மிருசுவில்)

**ஆலமர விழுதுகள் போல -ஐயா**
**அரவணைத்து நாமிருக்க**
**காலனவன் அழைத்தவுடன்**
**கனதூரம் போனதென்ன?**
**ஞாலமதில் தினம் நினைத்து**
**நாமிங்கு ஏங்குகின்றோம்.**

மசன், ஜோசப் லீன்,
பத்தமேனி,
அச்சுவேலி

(10808)(6,8,22)

குடும்பத்தினர்.

# 70 ஆவது அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

இன்று 26.11.2011 சனிக்கிழமை 70ஆம் அகவையில் கால் பதிக்கும் எம் இனிய ஆசையம்மாவான

**செல்வி.**
**ஜெகதீஸ்வரி நாகலிங்கம்**

(B.A,Dip-in-Ed,SLTS-I இளைப்பாறிய ஆசிரியர் J/M.M.V) அவர்களை பவள விழா கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.



**வாழ்த்துவோர்:**
மோகன், ராஜன், மாலினி, குமாரினி, அகரன்குட்டி (லண்டன்) சந்தோஷ்குட்டி (கொழும்பு).

# UNIVERSITY OF JAFFNA

# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following Works.

| Work /Service Details | Security deposit (Rs.) | Nonrefundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs.in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Supplying and fixing Floor Tiles at the Dept of Pathology, Faculty of Medicine, University of Jaffna. | 35,000.00 | 500.00 | 3.5 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the **Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the shroff's Counter, University of Jaffna till 02.12.2011.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

**Bids will be accepted till 2.30 p.m on 12.12.2011 and open immediatly thereafter. Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.**

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely, Jaffna.
25.11.2011.

Registrar
University of Jaffna.

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2012ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி- 01.12.2011 நண்பகல் 12 மணி வரை.
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி- 02.12.2011 மு.ப 10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி- 02.12.2011 மு.ப 11 மணிவரை
4. கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித் திகதி - 09.12.2011

2012 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல. | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை. (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாது இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 01. | ஆட்டிறைச்சிக் கடை 01 | 650,000.00 | 6500.00 | 1000.00 |
| 02. | ஆட்டிறைச்சிக் கடை 02 | 650,000.00 | 6500.00 | 1000.00 |

குறிப்பு- மேலதிக விபரங்களுக்கு 10.12.2011ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
25.11.2011.

இ.தேவசகாயம்பிள்ளை, தவிசாளர்,
நகராட்சி மன்றம் சாவகச்சேரி.


# இலவச கருத்தரங்கு

## நீங்கள் பட்டப்படிப்பை தேடுபவரா ???

இன்னும் நீங்கள் தவறவிடப்படவில்லை!
நிபுணர்களை சந்தித்து உங்களை தயாரக்க தயாராகுங்கள்!

உங்களின் பட்டப்படிப்பினை கீழ் காணும் வெளிநாடுகளில் தொடர வாழ்த்துக்கள்...!



:: UK :: New Zealand :: Cyprus
:: Ireland :: Singapore :: Malaysia

**Undergraduate and Postgraduate Programmes in :-**
- IT
- Business Management
- Marketing
- Accounting
- Hospitality Management
- Electronics and Computer Engineering

**Special Consultation for Visa refused and 10 year banned students**

**Free Consultation for**

:: Student Visas :: Dependent Visas :: Appeals
:: Visa Reapplications :: Administrative Reviews

**Why Guideline International**
- 100% Visa Success Rate
- Flawless College and Visa Application Documentation
- Guidance to get Scholarships and Exemptions
- Job Placement Assistance
- Educational Loans
- Pre-Departure Preparations
- Air port Pickups and Accommodation Arrangements

**Date**
27th November 2011

**Time**
10.30am-1.00pm

**Venue**
Cooperative Auditorium
(Opposite to the General Post Office, K.K.S Road ,Jaffna.)

விண்ணப்பம் மற்றும் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள

English- 071-7118671
Tamil - 077-7666394 (After 6 pm)

Guideline International Consultants and Academy (Pvt) Ltd
(British Council Approved IELTS Registration Centre)

# பொன்சேகாவை விடுவிக்காவிடின் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை

## அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, நவ .26

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலைசெய்யப்படாவிட்டால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற அச்சுறுத்தலை, அமெரிக்கா விடுத்துள்ளதாக 'த ஐலன்ட்' செய்தித்தாள் தெரிவித்துள்ளது. சரத் பொன்சேகாவை அமெரிக்கா அரசியல் கைதியாகவே கருதுகிறது. இந்த நிலையில் வெள்ளைக்கொடி வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு இலங்கையின் கொழும்பு மேல் நீதிமன்றம் 3 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது. இதனையடுத்து அமெரிக்க இராஜதந்திரி ஒருவருக்கும் இலங்கையின் உயர்தர அமைச்சர் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தமது நாடு இலங்கையில் நடத்திய ஆய்வு ஒன்றில் சரத் பொன்சேகா விடுவிக்கப்பட வேண்டும் என்றே பெரும்பாலான பொதுமக்கள் விரும்புவதாக இந்தச் சந்திப்பின்போது அமெரிக்க இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார். ''சரத் பொன்சேகாவுக்கு இலங்கை அரசு பொது மன்னிப்பை வழங்க வேண்டும். இல்லையேல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையைக் கொண்டுவரும்'' என்று அமெரிக்க இராஜதந்திரி எச்சரித்துள்ளார்.

இதேவேளை, அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலானபேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருப்தி கொள்ளவில்லை என்றும் அந்த அதிகாரி அரசிடம் தெரிவித்திருக்கிறார். (ச)

# அமைச்சரவையில் மாற்றம் சோதிடர்கள் ஆலோசனை

சோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23ஆம் திகதி அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சனிப்பெயர்ச்சி அடுத்த ஆண்டின் தொடக்க மாதங்களில் ஜனாதிபதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று சோதிடர்கள் பலர் ஆலோசனை கூறியுள்ளனர்.

இதனால் அமைச்சரவையை மாற்றியமைக்குமாறு அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது சமல் ராஜபக்ஷ பிரதமராகவும், நிமால் சிறிபால டீ சில்வா சபாநாயகராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதவியில் இருந்து பசில் ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அவருக்கு அனைத்துலக உறவுகளில் தொடர்புபட்ட அமைச்சு ஒன்று வழங்கப்படவுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே இளைஞர் விவகார அமைச்சராகவும், அவரது பிரதி அமைச்சராக நாமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

டலஸ் அழகப்பெரும ஊடகத்துறை அமைச்சராகவும், அவரது பொருளாதார விவகாரங்களைக் கவனிக்கும் மூத்த அமைச்சராக சரத் அமுனுகம நியமிக்கப்படவுள்ளதாகவும் எல்லா அமைச்சர்களினதும் துறைகளும் முற்றாக மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் இந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

# பாகிஸ்தானிய போர்க் கப்பல் இலங்கை வருகை



கொழும்பு,நவ.26

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான 'சைப்' என்னும் போர்க் கப்பல் இலங்கைக்கு இன்று சனிக்கிழமை வருகை தரவுள்ளது. இந்தக் கப்பலானது எதிர்வரும் 29ஆம் திகதி வரை இலங்கையில் தரித்திருக்கும் என்று பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது. சீனாவின் தயாரிப்பில் உருவாகிய 'சைப்' கப்பலைக் கடந்தவருடம் பாகிஸ்தான் கடற்படை கொள்வனவு செய்திருந்தது. இந்தக் கப்பலில் பல்வேறுபட்ட நவீன போர் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இருநாட்டு கடற்படையினரும் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் யுத்த தந்திரங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# துமிந்தவுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, நவ.26

துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

துமிந்த சில்வா சிகிச்சை பெற்று வந்த ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமென நீதிமன்றம் அறிவித்துள்ளது.

துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பில் இதுவரையில் விசாரணை நடத்தப்படவில்லை எனச் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியதனை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துமிந்தவின் காயங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்ற போதிலும் உண்மைத் தன்மை அம்பலப்படுத்தப்படவில்லை என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பான அறிக்கை வழக்கு விசாரணைகளுக்கு முக்கியமானது எனக் கருதிய நீதிவான், உடனடியாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# பொன்சேகாவின் மருத்துவ சிகிச்சை; சட்டமா அதிபரிடம் ஆலோசனை

## சிறைச்சாலைத் திணைக்களம் தகவல்

கொழும்பு, நவ.26

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு சிகிச்சை அளிப்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனையைப் பெறவுள்ளதாகச் சிறைச்சாலைத் திணைக்களம் அறிவித்துள் ளது. தண்டனை விதிக்கப் பட்ட கைதிகளுக்கு அரச வைத் தியசாலைகளில் மட்டுமே சிகிச்சை அளிக்கப்படுமென்று சிறைச்சாலை ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கைதி ஒருவருக்குத் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள அனுமதி அளிப்பது குறித்து சட்டமா அதிபரிடம் அறிவுரை பெற்றுக் கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

அண்மையில் மேல் நீதிமன்றம் சரத்பொன்சேகாவுக்கு கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே பொன்சேகாவுக்கு சிகிச்சை முடிவு எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



மஞ்சள் வீதிக் கடவையைப் புறக்கணித்து வீதியைக் கடந்து சென்ற பாதசாரிகளை போக்குவரத்துப் பொலிஸார் பதிவுசெய்யும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை பஞ்சிபொரணையில் மேற்கொள்ளப்பட்டது. (ச)

# அதிவேக வீதியின் இரு மருங்கிலும் விளம்பரம் காட்சிப்படுத்தத் தடை

கொழும்பு, நவ.26

தெற்கு அதிவேக வீதியின் இரு மருங்கிலும் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகளின் கவனம் திசை திருப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அதிவேக வீதியின் இரு மருங்கிலும் 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.

எந்தவொரு காரணத்துக்காகவும் வீதியின் நுழைவாயில்களுக்கு அருகில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது.

விளம்பரங்கள் காரணமாக வாகன சாரதிகளின் கவனம் சிதறிவிடாமல் இருப்பதற்காகவும் உயிர் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காகவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-சி)

# விசர் நாய்கடியை ஒழிக்க முடியும்

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, நவ .26

எதிர்வரும் 2016ஆம் ஆண்டளவில் நாட்டில் விசர் நாய்க்கடியை ஒழிக்கமுடியும் என்று சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

விசர்நாய்க் கடியால் ஏற்படுகின்ற மரணங்கள் தற்போது குறைவடைந்துள்ளன என்று சுகாதார அமைச்சின் கால்நடைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பீ.ஏ.எல். ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

விசர்நாய்க் கடியினால் இந்த வருடம் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடத்தில் விசர் நாய்க்கடியினால் 49 மரணங்கள் சம்பவித்துள்ளன. மக்களை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை மற்றும் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் ஆகிய திட்டங்களே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து ஆஸியின் கருத்து வெளியிடப்படும்

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதியளிப்பு

கொழும்பு, நவ 25

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடப்படும் என ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டதன் பின்னர், அது தொடர்பில் ஆஸ்திரேலியாவின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கெவின் ரொட் தெரிவித்துள்ளார்.



ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் கருத்து வெளியிட உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடமும் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் கலந்துகொண்டபோது தாம் இதனைக்குறிப்பிட்டதாக கெவின் ரொட் தெரிவித்துள்ளார். (ச-சி)

# தபால் திணைக்களத்தில் முத்திரை தட்டுப்பாடு

கொழும்பு,நவ.26

இலங்கை தபால் திணைக்களம் முத்திரைத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளது. இந்தத் தட்டுப்பாட்டினால் திணைக்களத்துக்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாக கூட்டிணைந்த தபால் ஊழியர்களின் சங்கம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

தபால் முத்திரைகளை அச்சிடுவதிலுள்ள முட்டுக்கட்டைகளே இதற்கு காரணம் என்று தபால் சேகரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# மனித உரிமை ஆணைக்குழுவின் நடமாடும் சேவை புங்குடுதீவில்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தரத்தீர்வுக்குமான செயற்றிட்டத்தினால் புங்குடுதீவு பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை வட இலங்கை சர்வோதயம், புங்குடுதீவு-3 மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, பிறப்பு, திருமணம், இறப்பு பதிவுத் திணைக்களம், பிரதேச செயலகம், வலயக் கல்விப் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம், பால் நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்றொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம், பிரதேச சபை, இலங்கை மின்சார சபை ஆகிய நிறுவனங்கள் தமது சேவையை வழங்கவுள்ளன.

எனவே இந்தப் பகுதி மக்கள் மேற்படி நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான யாழ். பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி அறிவித்துள்ளார். (வ)



அல்வாய் வடக்கு தகனை அமரர் தங்கராசா அமலாவதியின் முதலாவது சிராத்த தினத்தையொட்டி அவரின் உறவினர்களால் அல்வாய் மனோகரா முன்பள்ளிக்கு 50 கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (வ-236)

## இலங்கையில் அமெரிக்காவின் பயிர்ச்செய்கை திட்டம் நிறுத்தம்

அமெரிக்க நிறுவன மொன்று இலங்கையில் மேற்கொள்ளவிருந்த பெரியளவிலான பயிர்ச் செய்கைத் திட்டம் சூழலியலாளர்களின் போராட்டத்தை அடுத்து கைவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சோமாவதி தேசியப் பூங்காவில் அமெரிக்காவின் டோல் என்ற நிறுவனம் பெரியளவில் வாழைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவிருந்தது.

இதற்காக பெரியளவிலான முதலீட்டையும் அந்த நிறுவனம் மேற்கொள்ளவிருந்தது. எனினும் இந்த முதலீடு காரணமாக யானைகள் மற்றும் ஏனைய இயற்கைப் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து அமெரிக்க நிறுவனம் தமது திட்டத்தைக் கைவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

## டிசெ. 3 மாற்றுவலுவுடையோர் தினம் போட்டிகளுக்கு ஜெய்ப்பூர் நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.25

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் டிசெம்பர் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளதால் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

இதில் ஜெய்ப்பூர் நிறுவனத்திடமிருந்து கல்வி வளர்ச்சிக்காக மாதாந்த நன்கொடையைப் பெற்றுவரும் பாடசாலை மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாகக் கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.15, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன அலுவலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தால் 6 மாதகால தையல் பயிற்சியைப் பெறும் மாற்று வலுவுடைய பயனாளிகளுக்கிடையே தையல் போட்டி இடம்பெறவுள்ளது.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் பணியாற்றி மாவட்ட மட்டத்தில் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றவர்களையும் மாற்றுவலுவுடைய பல்கலைக் கழக மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (வ-313)

## தேசிய கல்வி நிறுவக இரண்டாம் மொழி தேர்ச்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.26

தேசிய கல்வி நிறுவகத்தால் இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சை (சிங்களம், ஆங்கிலம்) இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை அடுத்த வருடம் மேற்படி இரண்டாம் மொழிப் பயிற்சியைக் கற்க விரும்பும் கல்விசார் ஊழியர்கள் விண்ணப்பங்களை இன்றும் நாளையும் மேற்படி கல்லூரியின் பயிற்சிநெறியின் உப இணைப்பாளர் எஸ். பாலபவனிடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

## லஞ்சம் பெற்ற வரி விதிப்பாளர் கைது

லஞ்சம்பெற முயன்றார் என்ற குற்றச் சாட்டில் தேசிய வருமான வரித் திணைக்கள வரி விதிப்பாளர் ஒருவர் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தறை-வெல்கம பிரதேச வியாபாரி ஒருவரிடம் லஞ்சம்பெற்ற வேளையில் தேசிய வருமான வரித் திணைக் கள மாத்தறைகிளை வரிவிதிப்பாளர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வருமான வரி செலுத்துவதை குறைப்பதற்கென அறிக்கை தயாரித்துக் கொடுப்பதற்காக குறித்த வரி விதிப்பாளர் வியாபாரியிடம் ஒருலட்சம் ரூபா லஞ்சம் கோரியுள்ளார். அதில் 75 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்ட வரி விதிப்பாளர் மாத்தறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தென்மராட்சியில் ஆரம்பக் கல்வியில் அறிவொளி பரப்பும் அன்பொளி கல்வி நிலையத்தில் கல்விகற்று**
**புலமைப்பரிசில் பரீட்சை – 2011 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா**

26.11.2011 சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரிசில் விழாவில் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறும் மாணவச் செல்வங்கள்.



ப.பவினயா புள்ளி - 182 | த. சுந்தரபவன் புள்ளி - 182 | சி. நிரோசன் புள்ளி - 181 | கோ. அனுஷன் புள்ளி - 178 | க. சங்கவிதன் புள்ளி - 176 | செ. கோகிலவதனன் புள்ளி - 176 | சி. அஜந்தன் புள்ளி - 175 | சி. நாகபூசணி புள்ளி - 174 | சு. கீர்த்தான்ஷனா புள்ளி - 173 | சி. டிலக்ஷனா புள்ளி - 170



இ. ஹரிநிவாசன் புள்ளி - 170 | இ. ஆருசன் புள்ளி - 169 | ம. பானுகா புள்ளி - 168 | வ. அனித்தா புள்ளி - 167 | க. வசிகரன் புள்ளி - 167 | மு.ஜொஜிஸ் புள்ளி - 166 | சி. சிவரம்யா புள்ளி - 165 | ம. கீதாஞ்சலி புள்ளி - 165 | க. சுபாங்கி புள்ளி - 165 | கி. தனுரதன் புள்ளி - 165



சி. சங்கவி புள்ளி - 163 | ச. சங்கித் புள்ளி - 161 | ச. சுதர்சன் புள்ளி - 161 | இ. பிராங்ளின் புள்ளி - 158 | சு. ஜீவிதர்சன் புள்ளி - 158 | சி. கேனுஜா புள்ளி - 156 | யோ. நிதர்ஷிக்கா புள்ளி - 156 | உ. சங்கீர்த்தன் புள்ளி - 156 | சி. நிருஜன் புள்ளி - 156 | ரோ. மேரிசன்னியா புள்ளி - 155



மா. செந்தூரி புள்ளி - 155 | இ. பக்சிகா புள்ளி - 154 | ஸ்ரீ. ஷாருசா புள்ளி - 151



அன்பழகன் ஆசிரியரிடம் அன்பொளி கல்வியகம் யாழ்ப்பாணத்தில் கற்ற மாணவர்களில் உயர் புள்ளி பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்!



ப. சேதுராகவன் -194 முல்லை.மா.நிலை -1 தேசிய நிலை - 2 | ர.நிதுஷிகா -192 யாழ். மா.நிலை 1 தேசிய நிலை - 10 | லோ.டிலோஷன் -191 யாழ்.மா.நிலை - 2 தேசிய நிலை - 20 | கு. கஜானி - 190 யாழ். மா.நிலை - 4 | இ. மாதங்கி - 188 யாழ். மா.நிலை - 9

இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுடன் தென்மராட்சியில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும், உயர்வான புள்ளிகளைப் பெற்றும், வெட்டுப்புள்ளியால் சித்தியடையத் தவறிய ஏனைய மாணவச் செல்வங்களையும் வருங்காலத்தில் முயற்சியுடன் படித்து கல்விப் பாதையில் வெற்றிகள் பெற்றிட பாராட்டி வாழ்த்துகின்றோம்..

**பெற்றோர்கள், ஆசிரியர்கள்**

"சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டிடுவோம்"

**அன்பொளி கல்வி நிலையம்**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

# சரணடைந்த போராளிகள் எங்கே? உயிருடன்தான் இருக்கின்றனரா?

வெள்ளைக் கொடியுடனும் குடும்பம் குடும்பமாகவும் இராணுவத்தினரிடம் சரண் அடைந்த முன்னாள் போராளிகளின் நிலைமை என்ன? அவர்கள் எங்கே? உயிருடன் தான் இருக்கிறார்களா? இந்த விவரங்களை அரச வெளியிட முடியுமா? என்று கேட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

மாறி மாறி வந்த அரசுகளுக்கோ இன்றைய ஜனாதிபதிக்கோ தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை இல்லை. தேர்தல் காலங்களில் தமிழ் மக்களைச் சூதுப் பொருளாகவே பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

**சுவாரஸ்யம் இழந்த கேள்வி நேரம்**

நேற்று நாடாளுமன்றில் வாய் மூல விடைக்கான பல கேள்விகள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அத்துடன் மூன்று கேள்விகளுக்கு விடையளிக்கப்பட்டது. சிலவற்றுக்கு கால அவகாசமும் கோரப்பட்டது. ஏனையவை சபா பீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இதனால் இடைக்கேள்விகளோ அல்லது சூடான வாதங்களோ எழவில்லை. வழமை போன்ற சுவாரஸ்யம் நேற்று ஏற்படாமலே போய்விட்டது.

இதன்பின்னர் வரவு- செலவுத்திட்டம் மீதான நான்காவது நாள் விவாதம் ஆரம்பமானது.

எதிர்க்கட்சிகளின் சார்பில் மங்களசமரவீர விவாதத்தை ஆரம்பித்தார்.

**ஆளும் தரப்பினரின் இடையறாத குழப்பம்**

மங்கள சமரவீர பேச ஆரம்பித்த நேரம் முதல் அவர் பேசி முடியும் வரை சபை ஒரே கூச்சலும் குழப்பமுமாகவே இருந்தது. குறிப்பாகப் பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க, ஏ.எச்.எம். அஸ்வர் உட்பட பின்வரிசை உறுப்பினர்கள் அடிக்கடி இடையூறு ஏற்படுத்திக்கொண்டே இருந்தனர். மங்கள சமரவீரவும் சிறிதும் சளைக்காமல் பதிலடி கொடுத்துக்கொண்டே தனது உரையை நிகழ்த்தினார்.

**நீதித்துறை, அரசியல் வாதிகளின் பின்னால் வாலாட்டிச் செல்கிறது**

''நீதிமன்றங்களில் தீர்ப்புகள் அரசியல் பின்னணியிலேயே வழங்கப்படுகின்றன. நீதித்துறையினர் தமக்கு வேண்டிய காரியங்களை அடைந்து கொள்வதற்காகப் பக்கச் சார்பாக செயற்படுகின்றனர்.'' என்று குற்றஞ்சாட்டினார் மங்கள. அதே வேளை, நீதித்துறை இன்று அரசியல் வாதிகளின் பின்னால் வாலாட்டிக்கொண்டு செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்குறிப்பிட்டார்.

**அமைச்சர் தினேஷை மடக்கிய மங்கள**

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

''கௌரவ உறுப்பினர் மங்கள சமரவீர நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் நாய் என்று கூறுகின்றார். அதனை வாபஸ் பெறவேண்டும்'' என அவர் வாதிட்டார்.

''அமைச்சர் கூறுவதுபோல் நான் எந்தவொரு நீதிபதியையோ அல்லது நீதிமன்றத்தையோ குறிப்பிட்டுக் கூறவில்லை. இதனால் நான் கூறியவற்றை கடைசிவரையும் வாபஸ் பெறமுடியாது'' என்று பதிலளித்த மங்கள, அமைச்சருக்கும் ஒரு சூடு கொடுத்தார்.

'' அமைச்சர் அவர்களே, இந்த சபையில் வாலாட்டிக் கொண்டு செல்லும் பலர் இருக்கின்றனர். அந்த நிலைக்கு நீங்களும் கீழிறங்கிவிட்டீர்களா?'' என்றார்.

உடனே அமைதியாகிவிட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன. ஆனால் ஆளும்தரப்பினரின் பின் வரிசையில் இருந்து கூச்சல்கள் அதிகரித்தன.

எத்தனை கூச்சல்கள் போட்ட போதும் மங்கள சமரவீர தான் கூறவேண்டியவற்றையெல்லாம் கூறி முடித்த பின்னர் தான் அமர்ந்தார்.

பிரதிச் சுகாதார அமைச்சர் லலித் திஸா நாயக்கா அடிக்கடி இடையூறு செய்தார்.

உடனே, " சபா நாயகர் அவர்களே, இவர் பிரதிச் சுகாதார அமைச்சராக இருக்கின்றார். ஆனால் அவர் தனது சுகத்தைப் பார்ப்பதில்லை. மற்றவர்களைப் பற்றிப்பேசுவதிலேயே காலத்தைக் கழிக்கிறார். அவருக்குத் தலையில் சூடு கூடிவிட்டது. முல்லேரியாவில் (அங்கொட) தேவையான மாத்திரைகள் கிடைக்கும். அதைப் போட்டால் தான் அமைச்சரின் நோய் தீரும்'' என்றார் ஹர்ஷா டி சில்வா.

இதை ஆட்சேபித்த சுகாதாரப் பிரதி அமைச்சர் லலித் திஸா நாயக்க, ''நானொன்றும் உங்களைப்போல பைத்தியக்காரன் இல்லை''- என்றார்.

இது ஹர்ஷாவுக்கு வாய்ப்பாகி விட்டது.

''நான் அந்த வார்த்தையைக் கூறவில்லை. நீங்களே கூறிக் கொண்டால் நான் பொறுப்பில்லை'' என்றார்.

**குடுக்காரர்களுடன் ரணில் பேச்சு**

எதிர்க்கட்சித் தலைவரையும் விட்டு வைக்கவில்லை அரச தரப்பினர். ''இங்கே கனவான்கள் போல் பேசுகின்றனர். கோட் சூட் போட்டுவிட்டால் மட்டும் போதாது. நடத்தையிலும் பெருந்தன்மை இருக்க வேண்டும். இங்கே வெள்ளையும் சொள்ளையுமாக வரும் ரணில் வெளியே குடுக்கார்களுடன் பேச்சு நடத்துகின்றார்'' என்று தெரிவித்தார் மஹிந்தானந்த.




இந்தச் சந்தர்ப்பத்தில் தயாசிறி, ரவி கருணாநாயக்க, ரோஸி சேனநாயக்க ஆகியோர் ஒரே இடத்தில் இருந்துகொண்டு மஹிந்தானந்தவைப் பார்த்து, ''நீங்கள் யோக்கியமானவரா?'' என்று கேட்டனர்.

மஹிந்தானந்தவின் பார்வை ரோஸி சேனநாயக்கவின் பக்கம் திரும்பியது.

ரோஸி அழகானவர். அவரைக்காட்டி நாங்களும் வாக்குக் கேட்டிருக்கலாம். ஆனால், இப்போது வயதாகிவிட்டது. உங்கள் பக்கம்இருப்பவர்கள், தாய் முலைப்பால் குடித்தவர்கள் அல்லர். நீங்களும் அங்கர் பால் குடிப்பதால்தான் நல்ல சிவப்பாக இருக்கின்றீர்கள். தொடர்ந்தும் அதனையே குடியுங்கள். மேலும் சிவப்பாக வரலாம்' என்று தனது ஆலோசனையை முன்வத்தார் மஹிந்தானந்த.

**ரவி கருணாநாயக்க திறைசேரியை ஒரே வாயில் விழுங்கி விடுவார்**

ஐக்கிய தேசியக்கட்சியின் தரப்பில் அதிர் வேட்டுகளை விடுபவர்களில் ஒருவர் ஹர்ஷா டி சில்வா. மஹிந்தானந்த அளுத்கமகேயின் கூற்றுக்களை வன்மையாகக் கண்டித்தார். ''வரவு - செலவுத் திட்டம் அர்த்தமற்றது முடிச்சு. மாறிகளின் பட்ஜெட்டினால் நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை'' என்றார்.

மங்கள சமரவீரவுக்குப் பதிலடி கொடுப்பது போல் துள்ளிப் பாய்ந்தார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. இவர் பேசுவதை விட எதிரணியினரை ஏசுவதே அதிகம். நேற்றும் அந்தச் செயலை தவறாமல் செய்தார்.

''மங்கள சமரவீர இந்த நாட்டையே குட்டிச் சுவராக்கியவர். முன்பு எங்களுடன் இருந்தார். பின் ஜே.வி.பி யுடன் இருந்தார். இப்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு வால் பிடிக்கின்றார்.'' - என்றார். அப்போது ரவி கருணாநாயக்க, ஏதோ கூறினார்.

''ஐயா! இந்த மனிதர் ரவிகருணாநாயக்க நிதி அமைச்சராக வரத் துடிக்கின்றார். ரணில் வெற்றி பெற்று இவர் நிதி அமைச்சராக வந்து விட்டால் அது நாட்டுக்கே பெரிய ஆபத்தாகிவிடும். முன்பு வர்த்தக வாணிப அமைச்சராக இருந்த போது 'சதொச''வை அப்படியே விழுங்கியவர். நிதி அமைச்சரானால் திறைசேரியையும் ஒரே வாயில் விழுங்கி விடுவார்'' என்றார் மஹிந்தானந்த.

**வெறிபிடித்த நாய்கள் சமாதானம் பற்றி குரைக்கின்றன**

தேசிய மொழிகள் - அமுலாக்கல் அமைச்சர் வாசுதேவ, உறைப்பு, இனிப்பு, கசப்பு என எல்லாவற்றையும் கலந்து கொடுப்பவர். அவருடைய பேச்சை இரு தரப்பினருமே ரசிப்பது வழமை.

''எதிர் வரிசையில் இருந்து கொண்டு எதையும் பேசலாம். வாய்க்கு வந்ததை எல்லாம் கூறிவிட முடியாது. ஆளும் தரப்புக்குப் பலபொறுப்புக்கள் உண்டு. மானியங்களை வெட்டி மக்களுக்கு வாழ்க்கைச் சுமையை அதிகரித்தவர்களே ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தவர்களும் இவர்கள் தான்.

இவர்கள் இன்று ஜனநாயகம் பற்றியும் சமாதானம் பற்றியும் போதிக்கின்றனர். இது எப்படி இருக்கின்றது என்றால், வெறிபிடித்த நாய்கள் சமாதானம் பற்றி உபதேசம் செய்வது போன்று இருக்கிறது'' என்றார் வாசுதேவ நாணயக்கார.

**தேர்தல் வெற்றிக்காக இனவெறியைத் தூண்டி விடுகிறார்கள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் சூட்டைக் கிளப்பிவிட்டார்.

''இந்த நாடு இரண்டு தேசிய இனங்களைக் கொண்டது. ஒன்று தமிழ் இனம். மற்றது சிங்கள இனம்'' என்றார். அப்போது துள்ளிப்பாய்ந்தார் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்வர். ''இன்று முஸ்லிம்களாகிய நாங்களும் இருக்கின்றோம். நீங்கள் எப்படி இரண்டு தேசிய இனம் என்று கூறமுடியும். மூன்று தேசிய இனம் என்று தானே கூறவேண்டும்'' என்றார்.

தனது உரையைத் தொடர்ந்த சிறீதரன் ''இறுதி நேரப் போரின் பின் சரணடைந்தவர்கள் இன்னும் உயிருடன் தான் இருக்கின்றார்களா என்பது தெரியவில்லை. இங்கு ஆட்சி செய்த எந்த ஓர் அரசியல் தலைவரும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை. திம்பு பேச்சு முதல் டில்லிப் பேச்சுவரை சமாதானம் பேசிக்களைத்துப் போய்விட்டோம்''

'' எல்லோருமே தத்தமது தேர்தல் வெற்றிக்காக தமிழ் மக்களைச் சூதுப் பொருளாகவும், பகடைக் காய்களாகவும் பயன்படுத்திவிட்டு உதறி விடுகின்றனர். தமிழ் மக்களின் அபிலாஷைகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. போர் முடிந்த பின்னும் இராணுவ அடக்கு முறைகளுக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் வாழ்கின்றனர்'' - என்றார்.

அப்போது ஆளும்கட்சி உறுப்பினர் அஸ்வரும், பிரதி அமைச்சர் லலித் திஸ்ஸ நாயக்கவும் எழுந்து நின்றவாறு ''பொய் பொய்'' என்று சத்தமிட்டனர். இவர்களுடன் பின் வரிசை உறுப்பினர்களும் தமது பங்குக்குச் சத்தமிடத் தவறவில்லை.

(உ-02)

## போலி ஆயிரம் ரூபா தாள்கள் அச்சிட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியர் கைது

கொழும்பு, நவ. 26

30 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை அச்சிட்டு புழக்கத்தில் விட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவரை இரகசிய பொலிஸார் மிரிஸ்வத்தையில் வைத்துக் கைதுசெய்துள்ளனர்.

இவரது வீட்டிலிருந்து 20 போலி ஆயிரம் ரூபா தாள்களும், 50 போலி ரப்பர் முத்திரைகளும், தற்காலிக வாகன அனுமதிப்பத்திரமும், அச்சு இயந்திரக் கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் 30 லட்சம் ரூபா பெறுமதியான போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களைப் புழக்கத்தில் விட்டிருக்கிறார் .

அவற்றில் சில வேறுபாடுகள் உள்ளதால் அவை போலி என அடையாளம் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து இரகசியப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் குறித்த ஆசிரியர் சிக்கிக்கொண்டார். போலி ஆயிரம் ரூபா நாணயத்தாளில் சிங்க அடையாளம் போலி ரப்பர் முத்திரையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாளின் பின்பக்கத்தில் பாது காப்பு நூல் வெட்டி ஒட்டப்பட்டுள்ளது. போலி நாணயத் தாள் சாதாரணத் தாளை விடவும் கடினமான தாளில் அச்சிடப்பட்டுள்ளது. எனவே, மக்கள் இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(ந-சி)

## மகாகவி ரவீந்திரநாத் தாகூர் நினைவாக நாட்டிய நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.26

நோபல் பரிசு பெற்றவரான மகாகவி இரவீந்திரநாத் தாகூரின் 150 ஆவது பிறந்ததின நினைவாக அவரது ஆக்கங்களை உள்ளடக்கிய நாட்டிய நிகழ்வொன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு இடம்பெற உள்ளது.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், இந்திய துணைத்தூதுவர் [illegible]காலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்[illegible]ராசா ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

நாட்டிய நிகழ்வினை அஷி பந்து பட்டாச்சார்ஜி மற்றும் பிம்மாவதிதேவி ஆகியோர் நெறிப்படுத்தி வழங்கவுள்ளனர்.

(ப)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா இராஜேந்திரன்

(வைரமுத்து மாமா)

திதி:26.11.2011

மலர்வு
20.07.1929

உதிர்வு
22.11.2006

அன்புடன் எம்மை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி
காவல் தெய்வமாய் இருந்து - எம்மை
காத்து வளர்த்த எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் ஐந்து என்ன?
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உம்மை நாம் என்றும்

இன்று (26.11.2011)
சனிக்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

830, கே.கே.எஸ் வீதி
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(சி-6118) (1,6,7)

துயரத்துக்கு
ஒரே மாற்று
மருந்து
சாதனைதான்

வார வசந்தம்



உதயன் 26 நவம்பர் 2011 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

இலங்கை இனப்பிரச்சனை உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டும் என அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் உரை நிகழ்த்திய இந்திய வெளியுறவுச் செயலரும், இந்தியாவின் கொள்கை வகுப்பாளருமான ஷியாம் சரண் கூறியுள்ளார்.

ஷியாம் சரணின் கூற்றை இந்திய அரசாங்கத்தின் கூற்றாக எடுத்துக் கொள்வதற்கு எதுவித தயக்கமும் தேவையில்லை. இந்தியா- அமெரிக்க அணு ஆயுத கொள்கைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பவர் ஷியாம் சரண்தான். எனவே ஷியாம் சரணின் கூற்றை நாம் இந்திய அரசின் கூற்றாகவே எடுத்துக் கொள்ளலாம்.

இங்கே ஷியாம் சரண் இன்னொரு விடயத்தையும் கூறியுள்ளார். தமிழர்களின் நலனில் இந்தியா அக்கறை கொண்டுள்ளதாம். அதன் காரணமாகத் தான்.இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களை இந்தியா மேற்கொண்டு வருகிறதாம், ''சா... என்ன ஒரு அக்கறை''.

உண்மையிலேயே இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியா கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை.

வன்னியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயம் ஐ.நா.சபையில் விவாதத்துக்கு எடுக்கப் படவிருந்த சமயத்தில் வன்னியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.சபையில் விவாதிக்கத் தேவையில்லை என முதன் முதலில் கடுமையாக எதிர்த்தது இந்தியாதான்.

இதிலிருந்தே இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியா கொண்டுள்ள கரிசனை எவ்வளவு என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் உள்நாட்டு போர் முடிவடைந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தபின் யாழ்ப்பாணம் வந்த இந்தியக் கொள்கை வகுப்பாளர் ஒருவர் இலங்கை இனப்பிரச்சினை இலங்கை அரசினாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் எனக் கூறுவதன் அர்த்தம் என்ன?'

இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலேயே கருக்கட்டியது என்பது 1960 ஆம் ஆண்டுகளிலிருந்து இந்திய அரசின் முக்கிய கொள்கை வகுப்பாளராக விளங்கும் ஷியாம் சரணுக்குத் தெரியாததல்ல. எனவே தமிழர்களின் உரிமைப் போராட்டம் முளைவிட்ட யாழ்.பல்கலைக்கழகத்தில் 'வைத்து எங்களைச் சிங்களவருக்கு அடிமைகளாகவே இருங்கள் என முனைவர் ஷியாம் சரண் திருவாய் மலர்ந்துள்ளார்.

ஐயா ஷியாம் சரண் அவர்களே! இலங்கைத் தீவில் வாழும் எந்தவொரு பெரும்பான்மை இனத்தவனும் (ஒரு சில புறநடைகளைத்தவிர) தமிழர்களுக்கு ஒரு பிரதேச சபையைக் கூடத்தருவதற்குத் தயாராக இல்லையென்பது வடக்கு - கிழக்கில் ஊர்ந்துபோகும் சிற்றெறும்புக்களுக்கு கூடத் தெரியும்.

(நீங்கள் சிலவேளை ஜனாதிபதி மஹிந்தவையோ வேறு சிங்களத் தலைவர்களையோ நம்பலாம்).

நீங்கள் மஹிந்தவுக்கு ஏதாவது அழுத்தம் கொடுத்தால் அவர் முற்று முழுதாக சீனா பக்கம் சாய்ந்து விடுவார் என்ற பயம் காரணமாகவா இப்படிக் கூறுகிறீர்கள்? அல்லது நாங்களிருவரும் ஒரே இனம்; (வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்கள்) நீங்கள் வேறு இனம், நாங்கள் எமது சகோதரர்கள் பக்கம்தான் என்று கூறுகிறீர்களா?

ஐயா ஷியாம் சரண் அவர்களே!

# யாரை ஐயா ஏமாற்றுகிறீர்கள்?




1982 ஆம் ஆண்டு பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் சென்னையிலுள்ள பாண்டி பஜாரில் நேருக்கு நேர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டபோது ஏன் நீங்கள் அவர்களைப் பிடித்துப் பார்சல் பண்ணி இலங்கைக்கு அனுப்பவில்லை? அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். இருவரையும் கைது செய்து ஒப்படைக்கும் படி இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தபோது நீங்கள் எதற்காக மறுப்புத் தெரிவித்தீர்கள்?

அப்போது நீங்கள் ஜே.ஆரின் கோரிக்கையை ஏற்று இருவரையும் கைது செய்து இலங்கை அரசிடம் ஒப்படைத்திருந்தால் ஒருவேளை இங்கே ஒரு பெரும் ஆயுதப் போராட்டமே வெடித்திருக்காது. அதனைக் காரணம் காட்டி லட்சக்கணக்கான தமிழர்களை இராணுவமும் கொன்று குவித்திருக்காது. போராளிகளும் தமது உயிர்களை அர்ப்பணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. நாங்களும் இப்போது நீங்கள் சொல்வது போல் ஜே.ஆர். வழங்கிய மாவட்ட சபையை ஏற்றுக் கொண்டு மாவட்ட சபைத் தலைமைப்பதவிக்கு எமக்குள்ளேயே மோதிக் கொண்டு இருந்திருப்போம்.

ஜே.ஆரின் கோரிக்கையை நிராகரித்த நீங்கள் தமிழ்ப் போராளிக் குழுக்களின் தலைவர்களை டில்லிக்கு அழைத்து அவர்களை டில்லியில் அரச விருந்தினராகத் தங்க வைத்த போதும் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி ஆயுதங்களும் வழங்கிய போதும் இந்தப் பிரச்சினை இலங்கை அரசுடன் தமிழர்கள் பேசித் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கவில்லையா?

போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்கியது கூட உங்களது நலனுக்காகவேயன்றி தமிழர்கள் மீதான அக்கறையால் அல்ல என்பது இப்போது எல்லோருக்கும் தெரியும். பனிப்போர் காலத்தில் முற்று முழுதாக அமெரிக்கா பக்கம் சாய்ந்திருந்த ஜே. ஆரை வழிக்குக் கொண்டு வருவதற்காகவே தமிழ்ப் போராளிக்குழுக்களை நீங்கள் பயன்படுத்தினீர்கள்.

உங்களை நம்பி ஆயுதம் தூக்கிய முட்டாள்களில் நானும் ஒருவன். உத்தரப் பிரதேசத்தில் உங்களது இராணுவத் தளபதிகள் பயிற்சிகளை வழங்கியபோது எமக்குப் பொறுப்பாக இருந்த பொறுப்பாளரிடம் நாங்கள் சிறிய கெரில்லாக் குழு. இலங்கை அரசுடன் மோதி நாட்டைப் பிரிக்க எம்மால் முடியுமா என்று கேட்டேன். இதற்கு அவர் இறுதிப் போரில் இந்திய இராணுவமும் எமது தோழர்களுடன் சேர்ந்து போர் புரியும் என்றார்.

நானும் இந்திய இராணுவம் எமக்குப் பின்னால் இருந்தால் ஈழக்கனவு சுலபமாகி விடும் என எண்ணினேன். உங்களது பிரச்சினையை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்ன இப்போது கூறும் நீங்கள் அப்போதே அதைக் கூறிஇருந்தால் நானும்கூட இன்று நல்ல அரச பதவியில் இருந்திருப்பேன்.

எங்கள் பிரச்சினையை நாங்களே தீர்த்துக் கொள்ளலாம் என்றால், புலிகள் 2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்ட போது நீங்கள் என்ன மண்ணாங்கட்டிக்கு தலையிட்டு சமரசம் செய்ய முயன்றீர்கள்?

சரி பரவாயில்லை, இறுதிப்போரின் போது நீங்கள் இலங்கை இராணுவத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினீர்கள். ராடர்கள், உளவுத் தகவல்கள் வழங்கினீர்கள். உங்களது இராணுவச் சிப்பாய்கள் கூட இறுதிப் போரில் காயமடைந்துள்ளனர். இதையெல்லாம் இலங்கை அரசு உங்களிடம்கேட்டபோது நீங்கள் மஹிந்த ராஜபக்ஷவிடம் சொல்லியிருக்கலாமே ''உங்களது பிரச்சினையை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள்'' என்று. உங்களுக்குத் தெரியும் நீங்கள் உதவி செய்யாவிட்டாலும் மஹிந்தவுக்கு உதவுவதற்குப் பலநாடுகள் தயாராகவுள்ளன என்று. எனவே நீங்கள் முந்திக்கொண்டு எமது உறவுகளைக் கொன்றுகுவிப்பதற்கு உடந்தையாகச் செயற்பட்டீர்கள்.

ஐயா! ஷயாம் சரண் அவர்களே! நீங்கள் உங்களது உரையில் ஆறுமுக நாவலரைப்பற்றியும் கதிரவேற்பிள்ளையைப் பற்றியும் குறிப்பிட்டீர்கள். தமிழ்ப் பண்டிதர்கள் யாராவது சபையிலிருந்தால் அவர்களுக்காவது குளிர்ந்திருக்கும்.

## காளிதாசன்


எல்லாவற்றையும் விட என்ன ம...க்கு 1987 இல் இந்திய அமைதிப் படையைக் கூட்டிக்கொண்டு வந்து இங்கு எங்கள் மக்களைக் கொன்று குவித்தீர்கள்? அப்போது எங்கே போனது உங்கள் நியாயம்?

ஐயா ஷியாம்சரன் அவர்களே பிரபாகரன் தொடர்பில் உங்களுக்குக் கசப்பான அனுபவங்கள் இருந்திருக்க லாம். அதற்காக லட்சக்கணக்கில் மக்களை வதைக்க நீங்களும் சேர்ந்து கண்டகளத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

எமது மூதாதையர்கள் சொன்னது நூற்றுக்கு இருநூறு வீதம் சரிதான் என்பது இப்போது புரிகிறது வயிற்று வலியை நம்பினாலும்...

உதயன்
26 நவம்பர் 2011 சனிக்கிழமை

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (4)



### பெயர் எண்களின் பலன்கள்

பெயர் எண் என்பது பெயரில் உள்ள தனித்தனி எழுத்துக்களின் எண்மதிப்பைக் கூட்டி வரும் கூட்டுத்தொகையாகும். இப்பெயர் எண் குறித்த பலன்களே அப்பெயர் எண்ணை உடைய நபர்களின் வாழ்க்கையில் சம்பவங்களாக நிகழும். பெயர் எண் என்பது அனைத்து விதமான தனி நபர்களின் பெயர்கள், குடும்பப் பெயர்,வாகனப் பெயர், தொழிலின் பெயர், நிறுவனப் பெயர் அனைத்திற்கும் பொருந்தும். இரட்டைப் பெயர், மூன்று பெயர் உள்ள இடங்களில் பெயரின் மொத்தக் கூட்டுத்தொகை எண்ணே அவ்விடத்தில் பெயர் எண்ணாகும்.

### சூரிய ஆதிக்கப் பெயரெண்களின் பலன்கள்.

#### பெயர் எண் 1

சூரியன் ஆதிக்கம் படைத்தது. பெயர் எண் 1 உடைய பெயர்கள் தனித்து நின்று வெற்றி பெறவே முடியாது. மற்ற எண்களின் பலத்தால், துணையுடன் வெற்றி பெறும் சக்தி வாய்ந்தது. சிறிய முன்னேற்றம் ஏற்பட்டாலும் பெரிய பின்னடைவு ஏற்படும்.

#### பெயர் எண் 10

சூரியன் ஆதிக்கம் படைத்த இவ்வெண் ஒன்றுடன் பூஜ்ஜியம் சேர்ந்து அச்சாணியும் சக்கரமும் போல செயல்படும்,வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். எவ்வழியிலாவது முன்னேறச் செய்யும். பலர் போற்றும் மனிதனாக்கும். பணத்தட்டுப்பாடு வரவே வராது. கண்ணியம் கீர்த்தி உடைய மனிதராக்கும். நிதானமும் தன்னம்பிக்கையும் இருக்கும். சந்தோசமான வாழ்க்கை கிடைக்கும். செல்வம் சேர்ந்து கொண்டேயிருக்கும்.

#### பெயர் எண் 19

வாழ்க்கையில் மேன்மைகள் கூடிக்கொண்டிருக்கும். காரிய சித்தி வாய்ந்த எண்ணமாகும். நல்ல வாழ்க்கைத்துணை அமையும். உழைப்பால் உயரும் உத்தமர்கள். சுகபோக வாழ்க்கையில் நேர்மையே அவர்களின் வெற்றிக்கு ஆதாரம். தமது கடைசிக் காலம்வரை நல்ல ஆரோக்கிய பலத்துடன் வாழ்வார்கள். பொது வாழ்வில் பிரகாசிப்பார்கள். கட்டுப்பாடு மிக்க வாழ்க்கையில் செல்வ விருத்தியுடன் வாழ்வார்கள்.

#### பெயர் எண் 28

ஆரம்பத்தில் வெகு வேகமாக முன்னேற்றத்தைக் கொடுக்கும். முடிவில் சோகமே உருவான வாழ்க்கையாக மாறிவிடும். எக்காரியத்தில் ஈடுபட்டாலும்போட்டி, சிரமங்கள், எதிர்ப்புகள் உருவாகிக் கொண்டேயிருக்கும்.

#### பெயர் எண் 37

நடை,உடை பாவனைகளில் கவர்ச்சிகரமாகக் காட்சியளிப்பார்கள் பேச்சில் பலம் கூடும். வாக்குப் பிரசித்தி பெறும். கலைகளில் மலைபோல் உயரச் செய்யும்.

காதலில் வெற்றியைக்கொடுக்கும். ஆண் பெண் இருபாலாரிலும் சிறப்பான நண்பர்கள் அமைவார்கள்.

#### பெயர் எண் 46

ஞானமும், பதவியும்,செல்வமும், அந்தஸ்தும் உயர்ந்து கொண்டேயிருக்கும். அபராதமான சக்தி கொண்ட எண்ணாகும். பேச்சு, எழுத்து வசியமிக்கதாக இருக்கும். எதிலும் தலைமைப் பதவி கிடைக்கும்.

#### பெயர் எண் 55

பேரறிவும் புகழும் பெற்றுச் சிறப்புடன் வாழ்வார்கள். வெற்றிகளை ஒரே இடத்தில் குவிக்ககூடியது. போட்டிகளில் வெற்றியைப் பெறுவார்கள்.

#### பெயர் எண் 64

மிதமிஞ்சின கற்பனாசக்தி வளமிருக்கும். மனோபலத்தையும், அறிவு விருத்தியையும் தரும். மற்றவர்களால் செய்ய முடியாத காரியத்தைச் செய்து பெரும் புகழ் பெறச் செய்யும். அரசாங்கத்தில் உயர்ந்த பதவி கிடைக்கும். பெருஞ் செல்வம் சேரும். இரண்டு மூன்று வழிகளில் பணம் சேர்ப்பார்கள். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பெரிய பதவி கிடைக்கும்.

#### பெயர் எண் 73

மனதைப் பலப்படுத்தும் சக்தி வாய்ந்தது. படிப்படியான பணம், புகழ், பதவிகள் வந்து சேரும். அதிகாரமிக்க தொழில் அமையும். சுகவாழ்க்கையிலேயே குறிக்கோளாக இருப்பார்கள்.

#### பெயர் எண் 82

மிகவும் சக்தி வாய்ந்த எண்ணாகும். சாதாரண மனிதர்களைச் சக்கரவர்த்தியாக்கும். ஆட்சி வசியமிக்கது. இராஜயோகம் கொண்டது. பூமியை ஆளும் அமைப்பு உண்டாகும் குன்றாத உழைப்பும், கடமை தவறாமையும் பெரும்புகழும் சேர்க்கும்.

#### பெயர் எண் 91

இவர்கள் வைராக்கியத்துடன் போடுகின்ற திட்டங்கள் அனைத்தையும் சாதித்துக்காட்டி விடுவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி தொழிலால் லாபம் சம்பாதிப்பார்கள். சுகமான வாழ்க்கையுண்டாகும்.

#### பெயர் எண் 100

காரியத்தில் வெற்றி கிடைக்கும். பூமி, வாகனம், பொன், பொருள் சொத்துக்கள் நிறையச் சேரும். கையிலும், பையிலும் பணம் புரளும் அன்பான பேச்சு இருக்கும். நட்பும் உறவும் மேம்படும்.

### எழுத்துக்களின் குணாதிசயங்கள்

#### சூரிய ஆதிக்க எழுத்துக்கள்------ A,I,J,Q,Y

A----- அற்புதமான பல சக்திகள் அடங்கியுள்ள எழுத்தாகும். மற்ற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும்போது மேலான நிலைக்கு உயர்த்திக்கொண்டு செல்லும். முதல் எழுத்தாக வரும்போது அபார சக்தி குடிகொள்ளும். நிர்வாக சக்தி அபரிதமாக வெளிப்படும். மூளைபலம் மிக்கவர்கள். உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும். கலைகளில் ஆர்வம் இருக்கும். தீவிரமான புத்தி பலமுடையவர்கள். தலைமைப்பதவி கிடைக்கும். சாதனையாளராக மாற்றும். புகழ் ,செல்வம், மேன்மை பெற்று நேர்மையுடன் வாழச் செய்யும். இந்த எழுத்தை தொழில் பெயரில், தொழிலில் வசியத்தில் (அதிர்ஷ்ட தொழில் வசிய சின்னம்) முறையாகப் பயன்படுத்தி வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்கலாம்.

I------ விடாமுயற்சியும்,துணிச்சலும்தான் இவ்வெழுத்தின் தனித்தன்மை, உணர்ச்சிபூர்வமான கருத்துக்களை வெளிப்படையாகச் செய்யும் நிர்வாக சக்தி, அடக்கியாளும் குணம் அதிகம் காணப்படும். எப்பேர்ப்பட்ட காரியத்தையும் வெகு எளிதில் சுலபமாக முடித்துவிடுவார்கள்.

J----- கலைகளில் மிகுந்த சிறப்பைத் தரும். இரட்டை மனப்பான்மை, இருபுத்தி, நிலையில்லாத தன்மைகள் குடிகொள்ளும். பெண்குணமும், ஆண் குணமும் கலந்தது.பெரும் பதவி தேடி வரும். இளகிய மனம் கொண்டவர்கள். அன்புக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். கலை மற்றும் இலக்கியப் பற்றுடன் நடப்பார்கள். இந்த எழுத்து ஆரம்பத்தில் வந்தால் புகழ்மிக்க கதாசிரியர் ஆக்கும்.

Q-----தெய்வீக சக்தி படைத்தது. மற்றவரை மேலே தூக்கிவிடும் தன்மையுடையது. தன்னுடன் சேருகின்ற எழுத்தின் தன்மையைப் பொறுத்து இருவிதமான மனோபாவம் உருவாக்கும் எழுத்தாகும். கடுமையான உழைப்பின் மூலம் உயரச்செய்யும். சகலவிதமான செல்வமும், லாபகரமான நிலையும் உருவாக்கும்.

Y-----மென்மையான சுபாவமும், பிறரைச்சார்ந்து வாழும் குணமும் அதிகமிருக்கும். தனிப்பட்டு இயங்கும் பலமில்லாதது. இளகிய மனமுடையவர்கள்.

### சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள்

அனைத்து மாதங்களிலும் வரும் 1,10,19,28 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் ஆவார்கள். மேற்கண்ட திகதிகளில் பிறந்து, விதி எண் அல்லது வாழ்க்கை எண் என்று அழைக் கப்படும் திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் ஆதிக்கம் வேறுபடும்போது அவற்றின் குணாதிசயங்கள் மாறுபட்டுக் காணப்படும்.

#### பிறப்பு எண் 1 விதி எண் 1

பூரணச் சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்கள். சிந்தனை வளம்மிக்கவர்கள். தனது வாழ்க்கையை மிகவும் கண்ணியமாகவே வாழ்வார்கள். பலவித வழிகளிலும் பணம் சேர்ப்பார்கள்.

சமுதாயத்தைச் சீர்படுத்தி செப்பனிடும் ஆற்றல் படைத்தவர்கள். நீதி தவறாத நடத்தை உடையவர்கள். அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகிப்பார்கள். யாருக்கும் கட்டுப்பட்டு நடக்க மாட்டார்கள்.

ஒழுக்கம் நிறைந்தவர்கள், மனம் தளரமாட்டார்கள். நட்புக்காக எதையும் செய்வார்கள். பலருடைய வாழ்க்கையில் ஒளியேற்றி வைப்பார்கள். காதல் விசயத்தில் எளிதில் வயப்பட்டு விடுவார்கள். செய்யும் தொழிலில் கண்டிப்பும், நேர்மையும் இருக்கும். கலை உள்ளம் படைத்தவர்கள், தியாக உள்ளம் இருக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**
மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம், பச்சை, வெளிர் பச்சை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**
மாணிக்கம், கனக புஷ்பராகம், தங்க புஷ்பராகம், சூரிய காந்தக் கல்.

---

# எங்கள் திறமைகளை வளர்க்க வழிவிடுங்கள்

வடமாகாணத்தில் நடத்தப்படும் கண்காட்சிகளை பார்ப்பதில் பொது மக்கள் ஆர்வம் காட்டாதது குறித்து அதன் ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

ஒரு உற்பத்தியாளரால் உருவாக்கப்படும் ஆக்கம் மக்களால் பார்வையிட்டு மதிப்பீடு செய்யப்படும் போது உற்பத்தியாளனுக்கு ஊக்குவிப்பாகவும் உற்பத்திப் பொருளின் திறன், தரம், வடிவமைப்பு போன்றவை மாற்றி புதிய வடிவில் உற்பத்திப் பொருள்களை ஆக்கவும் உந்து சக்தியாகவும் அமையும்.

கொழும்பு உற்பத்தி நிறுவனங்களால் யாழ்ப்பாணதில் நடத்தப்படும் வர்த்தகக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்க்கச் செல்வோர் தமது பிள்ளைகளால் உருவாக்கப்படும் ஆக்கங்கள் பாடசாலைகளில் வைக்கப்படும்போது ஏனோதானோ என்று இருந்து விடுகிறார்கள்.

வர்த்தகக் கண்காட்சியில் மலிவு விலையில் பொருள்கள் பெற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் செல்வதும் பொருள்களை காட்சிப்படுத்துவோருக்கு உந்து சக்தியாக அமைந்துவிடுகிறது.

ஆனால் தமது பிள்ளைகளால் பாடசாலைகளில் நடத்தும் ஆக்கப் பொருள்களின் கண்காட்சியைப் பார் வையிட்டு அதனை மதிப்பீடு செய்து பிள்ளைகளை ஊக்கப்படுத்த பெற்றோர் முனைவதில்லை.

பெற்றோரின் அசட்டையீனம் பிள்ளைகளை எதிர்காலத்தில் இவ்வாறான ஆக்கங்களை உருவாக்க தயக்கம் காட்டவேண்டிய நிலைக்கு தள்ளி விடுகிறது.

திணைக்களங்களால் நடத்தப்படும் கண்காட்சிகள் ஒவ்வொன்றும் மக்களுக்கு பயன்படக்கூடியதாக உள்ள போதிலும் கண்காட்சி நடத்தப்படும் இடங்களுக்கு அருகில் வசிப்பவர்களே அதனைப் பார்வையிடச் செல்வதில்லை.

100 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரையான ரிக்கெற்றுக்கள் விற்பனை செய்து நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு பல்வேறு இடங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக செல்லும் மக்கள் உள்ளூரில் நடத்தப்படும் கண்காட்சிகளைப் பார்க்கச் செல்வதில்லை.

ஒரு பாடசாலை மாணவர்களால் ஆக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியை பார்க்க அந்தப் பிரதேச பாடசாலைகளின் மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவதில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சிக்கு ஒவ்வொரு கமக்கார அமைப்புகளும் தமது செலவில் சங்க அங்கத்தவர்களை கண்காட்சிக்கு அழைத்துச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டதால் மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கு புதியயுத்திகளைப் பயன்படுத்தி இம்முறை அமோக விளச்சலைப்பெற முடிந்தது என்று விவசாயிகள் பலர் தெரிவித்தனர்.

ஒவ்வொரு கண்காட்சியும் ஒவ்வொரு ஆக்கவாளரும் தமது திறமைகளை உட்புகுத்தி ஆக்கங்களை வெளிப்படுத்தியிருப்பார். அதனைப் பார்வையிட்டு மென்மேலும் முயற்சிகளை மேற்கொள்ள எம்மாலான பங்களிப்பை வழங்குவோம்.

தென்னவன்

# ஆட்டுக்குட்டி



ஆட்டுக்குட்டி நல்ல ஆட்டுக்குட்டி
அழகான ஆட்டுக்குட்டி
துள்ளித்திரியும் ஆட்டுக்குட்டி
இளைதளைகள் தின்னும் குட்டி
சின்னச்சின்ன கால்களாலே
குதித்தோடும் ஆட்டுக்குட்டி
பயமரியாச் சின்னக்குட்டி
சிறுசேட்டைச் செய்யும் குட்டி

எங்க ஊரு மலைக்கு
தினம் சென்று வரும்
முள்மீதும் தாவியேறி
சிறு இலையை கடித்துத்தின்னும்
குளம் தேடி ஓடிச்சென்று
நன்நீரைப் பருகிவரும்
நிழல் பார்த்து சாய்ந்துகொண்டு
மெல்லமாய் அசைபோடும்

அம்மாவை தவிக்கவிட்டே -சிலநேரம்
மறைந்து கொள்ளும்
அண்டைவீட்டு பிள்ளைகளை
ஓட்டம் காட்டி தளரவைக்கும்
மேய்ச்சலுக்கு செல்கையிலே
நரியினை கண்டு விட்டால்
மேய்ப்பனிடம் வந்து விடும்
ஆபத்தை வென்றுவிடும்

தி.சபினா

# தனக்கு வந்தால் தெரியும்


கிருஷ்ணாவ்ரம் என்ற சிற்றூரில் கோபு என்ற சிறுவன் வசித்து வந்தான். அந்த ஊரில் உள்ள பாடசாலையில் படித்து வந்த அவனிடம் ஒரு கெட்டபழக்கம் இருந்தது. நல்ல பழக்கங்கள் ஒருவனை உயர்த்திவைக்கும் மாறாகதீய பழக்கங்கள் ஒருவனிடம் குடிகொண்டால் அவனை வீழ்த்திவிடும் அல்லவா? ஆனால் நல்லவனான கோபுவிடம் எப்படியோ இந்த தீயபழக்கம் குடி கொண்டு விட்டது.

அந்த பழக்கம் எது என்று கேட்கிறீர்களா? மற்றவர்களின் உடைமைகளை ஒளித்துவைத்து அவர்கள் தேடும்போது மகிழ்ச்சி அடையும் குணம் தான் அந்த தீய குணம்.மற்றவர்கள் பொருள்கள் காணாமல் தவிக்கும் போது துள்ளி குதிக்கும் அவனது உள்ளம்.அவர்கள் படும் அவஸ்தைகளை ரசித்துவிட்டு தெரியாதது போல் பொருள்களை கண்டெடுப்பது போல நடித்து அவர்களிடம் ஒப்படைப்பான் கோபு.

இது அவர்களுக்குத் தெரியாது பொருள்களை தேடித் தந்தமைக்கு பாராட்டிச் செல்வார்கள், பொருள்கிடைத்தவர்கள். உள்ளூர மகிழ்ந்துகொள்வான் கோபு. இந்த விளையாட்டு விபரீதமானது என்று அவன் உணரவில்லை. அவனது நண்பன் மணி இந்த விளையாட்டை கண்டித்தான் அடப் போடா வாழ்க்கையில ஒரு த்ரில் வேணும்! நான் தான் பொருளை எடுத்துக் கொள்வது இல்லையே திருப்பக் கொடுத்துவிடுகிறேனே! திருடினாள் தான் தப்பு!

ஒளிச்சு விளையாடினால் ஒன்றும் தப்பில்லை! போடா நீயும் உன் புத்திமதியும் என்று அவனை கிண்டலடித்து கேலி செய்தான் கோபு. டேய் கோபு ஒருநாள் நீ கட்டாயம் அவஸ்த்தைப் படுவாய் நீ அப்போது நான் சொல்வது உனக்கு புரியும் என்று விலகிக் கொண்டான் மணி.

ஆனால் அவனையும் விடவில்லை கோபுவின் விளையாட்டு! முக்கியமான கணக்கு பாடவேளையில் மணியின் பென்சிலைஎடுத்து ஒளித்து வைத்துவிட்டான். கணக்காசிரியர் பென்சிலையும் புத்தகத்தையும் எடுக்கச் சொன்னபோது பென்சிலை காணாது தவித்தான் மணி.




அவனை அடித்து துவைப்பதை மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டிருந்த கோபு பின்னர் மணியிடம் பென்சிலை கொடுத்தான். கோபு நான் அடிவாங்குவது உனக்கு என்ன அவ்வளவு சந்தோஷமா? நீ திருந்தவே மாட்டாயா? என்றான் மணி! அடப் போடா! நீ அடி வாங்கும் போது எவ்வளவு சந்தோஷமா இருத்தது தெரியுமா? என்று சிரித்தான் கோபு. (தொடரும்)

# 2006, 2007 ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளவர்கள்

* 2006 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்: அல்பிரைட் ஜெலினெற்
* 2006 இல் இரசாயனத்துறையில் நோபல் பரிசு பெற்றவர்: ஐர்வன் றோஸ்
* 2006 இல் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்: ரிச்சர் அக்ஸெல்
* 2006 இல் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்: பின்கிர் லண்ட்
* 2006 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்: வங்காளி மாதரப்
* 2007 இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்: அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி
* 2007 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்: எழுத்தாளர் டோரிஸ் லெஸ்ஸிங்
* 2007 இல் பௌதிகவியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்: அல்பிரட் பேர்ன்
* 2007 இல் பொருளாதாரத்துறைக்கு நோபல் பரிசு பெற்றவர்கள்: எரிக் எக்ஸ் மஸ்கின் லியோனிட் ஹர்விக்ஸ்
* 2007 இல் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்: ஜெர்ஹார்ட் ஏர்ட்ல்
* 2007 இல் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு பெற்றவர்: மரியோ ஜெபச்சி

ஜெ.றொபினா, யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

# சுவாமி விபுலானந்தர்



★சுவாமி விபுலானந்தர் மட்டக் களப்பின் காரைதீவு என்னும் ஊரில் பிறந்தார்.

★இவருடைய தாய் பெயர் கண்ணம்மையார், தந்தையார் பெயர் சாமித்தம்பி.

★இவர் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் பிறந்தார்.

★இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனன் ஆகும்.

★இவர் ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞானப் பட்டதாரியாகவும் உயர்ந்தார்.

★1926 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபரானார்.

★மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி என்பன அவர் அமைத்த பாடசாலைகளாகும்.

ரா.உ சாந்தினி,
தரம் 8, ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.




காரைதீவு விநாயகர் முன்பள்ளி மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடை பெற்றது. இதில் கலைநிகழ்வில் கலந்து கொண்ட சிறார்கள்.

(135)

# பாகிஸ்தான்

பாகிஸ்தான் ஆசியாக் கண்டத்தில் உள்ள ஓர் இஸ்லாமிய குடியரசு நாடாகும். மக்கள் தொகை அடர்ந்த நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத். கராச்சி முக்கிய துறைமுகமும் தொழில் நகரமும் ஆகும். இந்திய எல்லையின் அருகில் உள்ள லாகூர் மற்றுமொரு முக்கிய நகரம்.

1947 ஆம் ஆண்டு இந்தியாவை விட்டு பிரித் தானியர் வெளியேறியபோது இந்தியாவிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் பிரித்து உருவாக்கிய நாடு பாகிஸ்தான். இந்தியாவிற்கு கிழக்கில் இருந்து பாகிஸ்தானில், மேற்கு பாகிஸ்தானின் அதிகாரத்தை எதிர்த்து கலகம் ஏற்பட்டபோது இந்தியாவின் தலையீட்டால் பிரிந்து பங்களாதேஷ் என தனிநாடாது.




பாகிஸ்தானினன் அண்மையில் இந்தியா, சீனா, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன. பாகிஸ்தானின் தெற்கில் ஆரபிக்கடல் உள்ளது. இந்தியாவிற்கு இந்து மதத்திற்கும் பெயர் காரணமான சிந்துநதியின் பெரும் பகுதி தற்போது பாகிஸ்தானில் ஓடுகிறது.

பழங்காலத்தில் இந்தியாவின் மீது மத்திய ஆசிரியர்கள் படையெடுக்க உதவிய கைபர் கணவாய் மற்றும் போலன் கணவாய் தற்போது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.பாகிஸ்தானில் முஸ்லீம்களே பெரும்பான்மையினராக விளங்குகின்றனர். அதிகபடியான முஸ்லீம்கள் வசிக்கும் நாடுகளில் பாகிஸ்தான் இரண்டாம் இடம் வகிக்கிறது.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

# தமிழனுக்கு வரலாறு தந்த சந்தர்ப்பங்கள்

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நாடுகள் கடுமையான தொடர் விமர்சனங்களை முன்வைத்து வரும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் தமிழருக்கெதிரான இன ஒழிப்புக் களும் அடக்குமுறைகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. காலத்துக்குக் காலம் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபிவிருத்தி என்ற பெயராலும் மகாவலித் திட்டத்தாலும் அவர் களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டன.

இலங்கையில் ஆரியர் குடியேற ஆரம்பித்த உடனேயே தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையி லான ஆதிக்கப் போட்டி ஆரம்பித்துவிட்டது.

தேவநம்பியதீஸ மன்னனின் சகோதரனான சூரதீஸன் காலம் ஆரம்பித்த சேனன்-குத்திகன் படையெடுப்பு அன்றிலிருந்து இன்று வரை சிங்கள மக் களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்திவிட்டது. சிங்கள மக்களால் 'எலாரா' என்று அழைக்கப்படும் எல்லாளனை மகாவம்சம் நீதி தவறாத ஆட்சியாளன் என்று கூறினாலும் அவன் தமிழன் என்பதாலும் இந்து மதத்தவன் என்பதாலும் அவன் புகழ் மறைத்து அவன் புகழ் பரவ முடியாமல் செய்தது. இவ்வாறு தொடர்ந்து படையெடுத்து வந்த தமிழ்ப் படைகளின் பெருமைகளை அன்று தொடங்கி இன்று வரை மறைத்து வந்தது.

தமிழ்ப் பண்பாடுகளையும் தமிழர்களையும் அழிக்க அந்தக் காலம் தொடக்கம் சிங்கள மன்னர்கள் முயன்றபோதும் இலங்கையில் வடக்கிலிருந்த தமிழ்ச் சாம்ராச்சியத்தால் அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. இவ்வாறு தொடர்ந்து தமிழ் மக்கள் இன்னல்களைச் சந்தித்தபோதும் வரலாறு தமிழ் மக்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தது.

தென்னிந்தியாவின் கடற்படைச் சக்தியு டன் கூடிய பலம் வாய்ந்த அரசாக நிலை பெற்ற சோழ அரசு இலங்கை அரசை கைப்பற்றியபோது சிங்களவர் தென்பகுதி யில் மிக ஆழமாகச் சென்றார்கள். சோழர்கள் தமது வியாபாரத்துக்குத்தேவையானஇலங்கையின் முக்கிய துறைமுகங்களைக் கைப்பற்றிய போதும் உருகுணைப் பகுதியைக் கைப் பற்ற நினைக்கவில்லை. இதனால் உருகுணைக் காட்டுப் பகுதியில் விஜயபாகு எனும் சிறுவனை வளரவிட்டு அவனாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். அன்று அவர்கள்முழு இலங்கை யையும் கைப்பற்றி இருந் தால் இன்றைய இலங்கை தமிழர்களின் தனி யொரு பிரதேசமாகத் திகழ்ந்தி ருக்கும். அன்று அவர்கள் விட்ட பெரிய தவறு இன்று தமிழர்கள் இவ்வளவு துன் பங்கள் அனுபவிக்கக் காரணமாக உள்ளது.



வரலாறு தந்த முதல் சந்தர்ப்பத்தை விரயப்படுத்திய தமிழருக்கு வரலாறு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை ஜி.ஜி. பொன் னம்பலம் மூலம் கொடுத்தது. இலங்கைக் குச் சுதந்திரம் கொடுப்பதற்காகப் பிரிட்டன் ஆட்சியாளர்கள் முனைந்தபோது இலங்கையில் தமிழர்கள் தனித்து வாழ்வ தற்கு நிலம் ஒதுக்க முனைந்தபோது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் சாணக்கி யத்தனத்தால் அவருக்கு ஆசையை ஊட்டி இலங்கையில் இன விகிதாசார முறையில் சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக வாழலாம் என்றும் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுத்தும் அவரை சிங்கள மக்களிடம் அடிபணிய விட்டது. இவ்வாறு ஜி.ஜி. பொன்னம்பலம் அன்று விட்ட பிழை யால் இன்று அவஸ்தைப்படுவது நாம் தான். இன்று அவரது பேரன் மாகாண சபைத் தேர் தலைப் புறக்கணிப்போம் என்று கூறி நிற்கிறார்.

இறுதியாக வரலாறு பிரபாகரன் தலைமையில் தமிழர் விடிவுக்காக ஒரு சந்தர்ப்பம் கொடுத்தது. ஆனால் துரஸ்திட் டவசமாகத் தமிழரின் முறைப்பாடுகளான ஒற்றுமையின்மை, காட்டிக் கொடுக்கும் தன்மை போன்ற காரணங்களினால் முள்ளிவாய்க்காலில் அந்த வாய்ப்புக்களும் நழுவவிடப்பட்டன.

இவ்வாறு தொடரான சந்தர்ப்பங்களை வரலாறு தமிழனுக்காகத் தந்துதவிய போதும் தமிழன் தன்னுடைய சுயவிருப்புகளுக்காக வும் பணத்துக்காகவும் ஆசைப்பட்டுத் தன் இன அழிவுக்குத்தானே காரணமாகத் தொடங்கி னான். இனிவரும் காலம் தமிழர் எழுச்சி பெற வேண்டுமானால் துப்பாக்கி தாங் கியோ, இரத்த ஆறு ஓடுவித்தோ அதனைப் பெற்றுக்கொள்ள முடியாது வேண்டுமானால் அது கல்வி ஒன்றாலேயே முடியும்.

■ காதலன்



(சென்றவாரத் தொ

காசி விஸ்வநாதர் இங்கு இற
இல்லாது முத்தியின்பத்தை வழங்கு

*''மாதவத்தால் காசிதனில்*
*மாண்டவர்கள் தம் செவியில்*
*தீது அகல விஸ்வேசன்*
*செப்புவான் ஐந்தெழுத்தை*
*மாதவன் விசாலாட்சி*
*மடிக்கிடத்தி வீசுவாள்*
*வேதனை யெல்லாம் தீர்ந்து*
*வென்றிடுவர் பின்பிறப்பை''*

என்ற பாடல் எமக்கு எடுத்து இய
காசிக் கங்கையில் சங்கல்பம்
செய்தோம். புனித கங்கையில் எ
கங்காதேவியைத் தரிசிப்பதாலும் எ
எம்மை விட்டு அகன்று ஆன்மீகச் 
ஒளி விடத்தொடங்குகின்றன.

கங்கா ஸ்தானத்தின் பின் கங்கை
சென்று எமது கைகளினாலேயே எ
அபிஷேகம் செய்து வழிபட்டோ
அன்னபூரணி, நவக்கிரகங்கள் பெ
காலவைரவர் ஆகியோரைத் தரிசித்
கங்கையில் படகில் பிரயாணம் செ
துடன் சகல நீராடு துறைகளையும் தரி
துளசிகாட், அரிச்சந்திரன் காட், மண
காட், நாரதர் காட், பிரம்மா காட்
பலவற்றைப படகுப்பிரயாணத்தின்

மணிகர்ணிகா துறையின் அரு
பகவானுடன் சங்கமிப்பதையும் அவ
அழுகுரல் எதுவும் இடம்பெறவில்
காதில் ஒலித்தன. பல பிரேதங்கள் எ
வைக்கப்பட்டிருந்தபோதும், எமக்கு
ஏற்படவில்லை. எமக்குப் பக்தி
ஏற்பட்டது.

இரவு கங்கா தேவிக்கு இடம் பெ
கண்டு களித்தோம்.

காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு
குறு
ஒரே
கங்க

# “கொஞ்ச நாளைக்குத் தான்”

மனிதர்களோடு பேசிக்கொண்டிருப்பது சந்தோஷ மான விடயம். அதிலும் சிலர் பேசிக்கொள்வதற்கு சுவாரஸ யமான மனிதராக அமைந்து விடுதல் எமது அதிர்ஷ்டமே. காரணம், அவர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது பற் பல விசயங்களையும் அறிந்துகொள்ளலாம். அவர்களது ஞாபகசக்தி மெச்சத்தக்க அளவுக்கு இருந்து எமக்கு ஆச்சரியத்தை உருவாக்கும். அவர்கள் கடந்தகால விசியங்களை நாள் நேரம், பங்குபற்றிய இடம், ஆள்கள் எல்லாம் விலாவாரியாகச் சொல்வார்கள். ஏதோ சொல்லும் சம்பவம் ''நேற்று நடந்தது போலிருக்கும்'' இது எவ்வாறு அவர்களுக்கு சாத்தியமாகின்றது. யோசிக்க ஆச்சரியமான விடயமாகத் தெரிகின்றது.

ஆனால் சிலரிடமிருந்து தப்பி வந்த கதையையும் மாட்டுப்படாமல் விலகிய கதையையும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம் ''நல்ல காலம் ஒரு மாதிரி ''காய்'' வெட்டிப்போட்டு வந்திட்டன். அத்தான் கதைக்கத்தொடங் கினால் ஒரே கதையைச் சொல்லித் திரும்பத் திரும்ப அறுத்துக்கொண்டிருக்கும்.'' எனவே ஒருவரோடு தொடர்ந்து பேசிக்கொள்வதும் அவரவர் தனித்தன்மையைப் பொறுத்துள்ளது.

உங்களைப்போல் எனக்கும் பல மனிதர்களோடு பேசும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பஸ் பயணங்களில் வேலைத்தலங்களில் சந்தையில், கடையில், மரணவீடு, திருமண நிகழ்வுகள் போன்றவற்றில் மனிதர்களோடு பேசும் சூழ்நிலை உருவாகிவிடும். முக்கியமாக நாம், எம்மோடு கதைக்கும் எல்லோரையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதில்லை. சிலரைத்தான் எமது ஞாபகத்தில் ''இருத்திக் கொள்கின்றோம்'' மனிதர்களோடு தமது உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்குத் தயாராக உள்ளார்கள். ஆனால் அதனை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லை. அதற்குரிய ''மனிதர்கள்'' பொருத்தமாக அமைந்து விட்டால் எல்லாவற்றையும் கொட்டிவிடுவார்கள்.

சரி, இப்போது நான் சொல்லப்போவது அண்மையில் நான் சந்தித்த ஒரு மனிதரைப் பற்றி. எனது மகனின் தேவை கருதி அவரைச் சந்திக்க வேண்டி இருந்தது. அவர் பாதணிகளைச் செப்பனிடும் தொழிலாளி.

நகர பஸ் நிலையத்துக்கு அருகில் முன்பக்கம் கண் ணாடி அலுமாரி இருந்தாலும் அவ்விடமே வெறுமையாக இருக்க அதன் பின்னால் இருந்த சிறிய இடத்தில் கீழே இருந்து வாடிக்கையாளர் கொண்டுவரும் பாதணி களைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் பல்வேறு வகையான நவீனமாக வடிவமைக்கப்பட்ட பெண்கள், ஆண்கள் அணியும் பாதணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர் சராசரி உயர்ந்த மனிதர். மேல் உதட்டில் பின் பற்கள் சிலவற்றைக் காணவில்லை, தலைமயிர் நரை கண்டு விட்டது. என்னை, எதிரே இருந்த வாங்கில் அமரச்சொன் னார். நான் கொடுத்த மகனின் பாதணிகளை வாங்கிப்பார்த்து, கொஞ்ச நேரத்தில் தைத்துத் தருவதாகச் சொன்னார்.

இடைஇடையே அவரின் வாடிக்கையாளர்கள் கொடுத்த பாதணிகளை வாங்கிவைத்து சிறிய வேலைப் பாடுகள் உள்ளதை என்னிடம் அனுமதி கேட்டு வேலை முடித்துக் கொடுத்தார். இந்த அமளியோடு அடிக்கடி கால்களிரண்டையும் நீட்டி உதறி கால்களின் விறைப் பினை போக்கினார். முகத்தில் வேதனை தெரிந்தது. இப்போது கால்கள் தொடர்ந்து இப்படி இழுப்பதனால் வலிப்பதாகக் கூறினார். பேச்சு வாக்கில் அவரது ஒரு மகன் தனியார் நிறுவனத்தில் வேலை செய்வது தெரிய வந்தது. மகனுக்கு ''சிறிய'' வயதில் வேலை கிடைத்தமையிட்டு அவர் சந்தோஷம் அடைந்தார்.

''ஐயா இப்பத்தைய சிலிப்பர் பார்க்க வடிவாய் இழுக் கும். கொஞ்ச நாளைக்குத்தான் பாவிக்கும் பிறகு அறுந்து போகும்.'' இது தான் ''ஓம், ஓம்... இப்போதைய காதல் கலி யாணம் மாதிரி முடிக்கிறதும் அவசரம் உடன் பிரியிறதும் அவசரம் அவர் சொல்லிவிட்டு'' கட கட வெனப் பெரிதாகச் சிரித்தார். எந்தவிதமான வஞ்சகமும் இல்லாத சிரிப்பு அது அப்போது ஒரு பெண்மணி வேகமாக உள்ளே நுழைந்தார்.

■ தொல்புரம் சி.கதிர்காமநாதன்

''ஐயா தைச்சுப்போட்டியளே?'', ''எப்ப கொடுத்தனீங்கள்?'' அந்தப் பெண் சிரித்தாள். பின் சொன்னாள் ''மூன்று கிழமை ஆகி விட்டது'', ''அம்மா எனக்கு அவ்வளவுக்கு செருப்பைத் தேடி எடுக்கிற அளவுக்கு ஞாபக சக்தி இல்லை'' அவர் தனக்கு முன்னால் குவிக்கப்பட்டிருந்த குவியலில் தேடிப்பார்க்கச் சொல்ல அந்தப் பெண் தனக்குரிய பாதணியை பொறுக்கி யெடுத்தாள். ''சனங்கள் உடம்பிடித்தான் கன விசயங்களை கையை விட்டிட்டு பிறகு தேடிக் கொண்டு இருக்கும்'' என்றார். அவரின் முதுகுக்குப் பின்னால் பல பொதிகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன, நான் அவற்றைச் சந்தேகத்துடன் பார்க்க அவர் சிரித்தார். ''என்ன யோசிக்கிறியள் எல்லாம் இப்ப தைச்சு வையுங்கோ உடன வந்து எடுப்பம். என்று சொல்லிப் போட்டுபோன ஆக்களின்ர சிலிப்பர் தான்; சேர்ந்து போச்சு கட்டிவைச்சிருக்கிறன்.'' மறுபடியும் கால் களை நீட்டி விறைப்பைப் போக்கினார். ''ஐயா எனக்கு கஸ்ர மாய்க் இருக்கு. உடம்பிடித் தைக்கக் கொடுத்துப் போட்டு எடுக்காமல் போறதுக்கு... 'சனங்கள்' காலுக்குப் போடு றதை தைச்சுக் கொடுக்குறது பெரிய விசயம். எவ்வளவு 'இடங்கள்' போட்டுக் கொண்டு திரிஞ்சிருப்பினம்.''

''சனங்களும் நல்லா கதைச்சு, ஏமாற்றப் பழகிட்டுதுகள். உதெல்லாம் அவையளுக்குப் பெரிய குற்றமாய்த் தெரி யிறேல்ல. முப்பது வருசமாய் இந்தத் தொழில் செய்து கொண்டி ருக்கிறேன். மனிசருக்கும் சிலிப்பருக்கும் ஒரே நிலைமை தான். 'பிரியோசனம், இல்லாட்டி தூக்கி எறிய வேண்டியதுதான். என்ற தாத்தாவின்ரை மிதியடி அப்பா இருந்த வீட்டில நான் சின்னப்பிள்ளையில பாத்தனான். அதை சாமியறையில வைத்து பயபக்தியாய் வணங்கிக் கொண்டிருந்தவை. இப்ப பழசை பூஜிக்கிற மரபு எல்லாம் போட்டுது. இப்ப இராமரும் இல்லை. இருந்தாலும் அவர் காலில் போட்ட மிதியடியைத் தூக்கிறதுக்கு பரதனும் இல்லை...'' கட கட வென அதே சிரிப்பு. அப்போது பெண் ணொருவர் விரைந்து வந்தார். ''ஐயா இந்தச் சப்பாத்தை தைச்சுக் கொடுங்கோ, இரண்டு நாளாய் மகன் பள்ளிக்கூடம் போகாமல் நிக்கிறான். போடாமல் போனால் அடிப்பி னமாம்.'' ''அட! கடவுளே'' இப்போ நான் கட கட வென சிரித்தேன். கட்டாயக் கல்வி என்று கேள்விப்படுகிறேன் ''கட் டாயச் சப்பாத்து'' என்று கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?



...ாரத் தொடர்ச்சி)
...ங்கு இறப்பவர்களுக்கு மறுபிறப்பு
... வழங்குபவர் இதனையே
...யில்
...தை
...ை"
...த்து இயம்புகின்றது.
...ங்கல்பம் செய்து கங்காஸ்ஞானம்
...கயில் ஸ்ஞானம் செய்வதினாலும்
...தாலும் எமது அகங்கார உணர்வுகள்
...ன்மீகச் சிந்தனைகள் எமது வாழ்வில்
...ன.
... கங்கைநீரைப் பாத்திரத்தில் எடுத்துச்
...லேயே விஸ்வநாதப் பெருமானுக்கு
...ட்டோம். விசாலாட்சி அம்பாள்,
...கள் பொற்கோவில், சோழிஅம்மன்,
... தரிசித்தோம்.
...ாணம் செய்து மிகவும் பக்திப்பரவசத்
...ளயும் தரிசனம் செய்தோம். அஸிகாட்,
...ட், மணிகர்ணிகாட், மானஸரோவர்
...ா காட் போன்ற 64 துறைகளில்
...னத்தின்போது தரிசித்தோம்.
...ன் அருகே சிதைகள் பல அக்கினி
...யும் அவதானித்தோம். ஆனால் இங்கு
...றவில்லை. ராமநாமங்களே எமது
...ங்கள் ஈமக்கிரியைகளுக்காக அங்கு
... எமக்கு எந்தவிதமான மனப்யமும்
... பக்தியுடன் கூடிய அனுபவமே
...டம் பெறும் ஆவிர்த்தி நிகழ்வையும்
...த்திற்குச் செல்லும் பாதை மிகவும்
குறுகியது. போவதும் வருவதும்
ஒரே பாதை. பாதையின் இரு பக்
கங்களிலும் கடைகள். பாதை

# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது




ஜெயா -

யோரங்களில் பெரிய மாடுகள் உலாவுகின்றன. ஒருவருடன் மற்றய வர் இடித்துத் தள்ளி கொண்டுபோக வேண்டிய சூழ்நிலை, ஆனால் எல்லோருடைய மனத்திலும் விஸ்வநாதரைத் தரிசிக்கவேண்டும் என்ற எண்ணம். ஒரே சந்தோஷம், ஆன்மீக ஒற்றுமை அனைவரும் ஒழுங்காக வரிசையிலே செல்கிறார்கள். நீண்ட வரிசையில் செல்லும் எமக்கு வேண்டிய அளவுக்கு மிகவும் சந்தோஷத்துடனும் அன்புடனும் குளிர்பானங்களை போதும் போதும் என்று கூறும் அளவுக்கு வழங்கும் பக்தர்கள் அங்கு இருப்பது களைத்துச் சோர்வுற்றுச் செல்லும் எமக்கு ஆறுதல் அளித்தது. இதுவும் விஸ்வநாதப் பெருமானின் அருட்கடாட்சமே.

காசியில் புகழ் பெற்ற காசித்தட்டுகள், காசிவிளக்குகள், அன்னபூரணி விக்கிரகங்கள் பட்டுச்சேலைகள் ஆகிய சிலவற்றை இங்கு கொள்முதல் செய்ததுடன், ஸ்ரீகால பைரவர் கோயிலுக்குச் சென்று தோஷங்கள் நீங்குவதற்காக கறுப்பு நிறக் காசிக் கயிறுகளையும் வாங்கிக் கொண்டு, கால பைரவரை வணங்கித் துதித்து எமது பிரயாணம் இனிதே நிறைவேற அவருடைய அனுமதியைப் பெற்று அங்கிருந்து பிரயாகையை நோக்கிப் புறப்பட்டோம்.

பகீரதன் தன்னுடைய முன்னோர்களின் ஈடேற்றத்துக்காகக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தார். சிவபெருமானுடைய திருமுடியில் இருந்து வந்த இந்தக் கங்கையுடன், ஜமுனையும், சரஸ்வதியும் சங்கமிக்கும் இடமே பிரியாகையாகும். இங்கு இம்மூன்று நதிகளும் இணைவதால் இது திரி வேணி சங்கமம் என்றும் அழைக்கப்படுகின்றது. பிரம்மா ஆஹவனியம், கார்ஹபத்யம், தக்ஷணாக்கினி என்ற மூன்று அக்னிகளின் உதவியுடன் பெரிய யாகம் செய்ததினாலேயே பிரியாகை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இங்கே திரிவேணி சங்கமம் என்று கூறப்படுகின்ற கங்கை, ஜமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சேருகின்ற இடத்திலேயே ஸ்நானம் செய்தோம். இந்நிகழ்வு எமது மனதில் தெய்வீக சக்தியை உணர வைத்தது.

ஸ்ஞானம் செய்தபின்னர் படகில் ஏறிச் சிறிது தூரம் சென்று, செம்புகளிலும் பிளாஸ்ரிக் கான்களிலும் கங்கா ஜலத்தைச் சேகரித்துக்கொண்டு கரையை நோக்கிப் பிரயாணத்தை மேற்கொண்டோம். இந்தக் கங்கா ஜலம் பல மூலிகைகள் சேர்ந்து இருப்பதனால் 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சென்றாலும் நாம் சேகரித்த நீர் பழுதடைய மாட்டாது என்று ஆராய்ச்சியின் மூலம் அறியப்பட்டதாகத் தெரிகின்றது.

(தொடரும்)

# மணி மொழிகள் 10

❖ அறிவும் திறமையும் பெறுவது மட்டுமல்ல கல்வியின் குறிக்கோள் பிறருடன் ஒற்றுமையாய் வாழ நம்மைப் பக்குவபடுத்துவதே அதன் முக்கிய நோக்கம்.

டாக்டர். ராதாகிருஷ்ணன்.

❖ கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டுமென்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண்டு இருப்பவன் புலவனாகமாட்டான்.

பாரதியார்.

❖ நீ மக்களிடம் என்ன சொல்கிறாயோ அதைச் செயற்படுத்திக்காட்டு. இல்லையேல் நீ என்ன செய்கிறாயோ அதை மக்களுக்குச் சொல்.

மகாத்மா காந்தி.

❖ கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விடயங்களைத் திணித்து விடுவதன்று. கற்கும் பொருள்கள் உயிர் ஊட்டுவனவாய் மனிதத் தன்மை தருவனவாய் ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

❖ உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே நான் என்ற சுமையை நீக்கி உழைத்தால் வேலை வேகமாகவும் பிழையில்லாமலும் நடக்கும். தன்னைத் துக்கி தலையில் வைத்துக்கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும்.

பாரதியார்

❖. எம்முடைய கொள்கைகளை மற்றவர்கள் மதிக்க வேண்டுமென்று நாம் நினைப்பது போல அவர்களுடைய கொள்கைகளையும் நாம் மதிக்க வேண்டும்.

காந்தியடிகள்

❖ ஆசிரியர்-மாணவன் இருவரும் ஒருவரின் நடத்தையிலிருந்து கல்வி பெறுகின்றார்கள். கல்வி எனப்படுவது கொடுக்கப்படாததொன்று. கல்வியைக் குறித்து வைத்தல் கூட்டிக் கழித்து கணக்கிடல் என்பது முடியாது. வாழ்வே கல்விதான். அனுபவத்தில் வந்ததும் ஒமிபாடடைந்து இரத்தத்துடன் இரத்தமாய்க் கலந்து போனதும் தான் உண்மைக்-கல்வி.

வினோபா

❖ உலகத்துப் பொருளாதார நிலையை மனித யுக்தியால் மாற்றியமைப்பதால் செல்வ மிகுதியாலும் குறைவாலும் மனிதர்களுக்குள்ளே ஏற்படும் கஷ்டங்களையும் அவமானங்களையும் பலிகளையும் மரணங்களையும் நீக்கி விடலாம்.

பாரதியார்

❖ பெண்களை வெறும் பொழுது போக்குக்குரிய விளையாட்டுப் பொம்மையாகவும் விரும்புகிற போது அழகாக வாசித்து விட்டு மூலையில் போடும் வீணையாகவும் ஆண்களில் சிலர் நினைக்கின்றார்கள்.

அருணாநந்தன்.

❖ மனமாகிய குரங்கு செய்வதையெல்லாம் எழுதிக்கொண்டுபோனால் அதைக் காலக்கிரமத்தில் வசப்படுத்தி விடலாம். ஒன்றினை அடக்கு முன்பாக அதன் இயல்புகளை எல்லாம் நாம் அறிந்து கொள்ளலாம். நன்றாக அறிய முடியாததை வசப்படுத்த முடியாது. சித்தத்தை வசப்படுத்த முன் அதனை அறிய வேண்டும். அதன் சலனங்களை ஓயாமல் கவனித்து எழுதிக்கொண்டு வந்தால் அதன் தன்மை முழுவதையும் அறிய ஏது உண்டாகும்.

பாரதியார்.

ரு.சிவபாலன்,
மூளாய்.

# பூக்களில் மிளிரும் மருத்துவம்



அருணா



(சென்றவாரத் தொடர்ச்சி)

கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறுநீர் சுலபமாகப் போகும். குடல்புண், தொண்டைப் புண் குணமாக்குவதற்கும் ரோஜாப் பூ பயன்படுத்தப்படுகின்றது. ரோஜாப் பூவின் மணம் சளியைக் குணப்படுத்தும் ஆற்றலும் வயிற்றைச் சுத்தமாக்கும் இயல்பும் கொண்டது: ரோஜாவில் இருந்து தைலம் எடுக்கலாம். காது வலி, காதில் ரோகம், காதுப் புண் என்பவற்றுக்கு இந்தத் தைலம் பயன்படுத்தப்படுகின்றது.

பொதுவாகத் தாம்பூலம் தரிக்கும் பொழுது அத்துடன் இரண்டு அல்லது மூன்று ரோஜா இதழ்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது. அது அஜீரணத்தைப் போக்கும் தன்மை கொண்டது.

அடுத்து நாம் இலுப்பைப் பூவைப் பற்றிப் பார்ப்போம். இலுப்பை மரத்திலிருந்து கிடைக்கும் பூ இலுப்பைப் பூவாகும். மெலிந்த உடல் உள்ளவர்கள் இலுப்பைப் பூக்களை பசும் பால் விட்டு அரைத்துக் காய்ச்சிய பாலுடன் சிறிது சர்க்கரை சேர்த்துப் பருகி வந்தால் நாற்பத்தெட்டு நாள்களுக்குள் உடம்பு தேறும், இலுப்பைப் பூவை ஒத்தடம் கொடுத்தால் உடலில் உள்ள வீக்கத்தைக் குறைக்க முடியும். ஆண்மைக் குறைபாடு உடையவர்கள் பாலுடன் இலுப்பைப் பூக் கசாயத்தைச் சேர்த்துப் பருகினால் ஆண்மைக் குறைபாடு குணம் அடையும்.

தூதுவளை பூ குறிப்பாகச் சித்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கப் பயன்படுத்தப்படுகிறது. அநேகமானவர்கள் வீட்டுக்கு வீடு தூதுவளையை வேலிகளில் வளர்ப்பதையும் காணமுடிகிறது. பூவை வதக்கித் துவயலாக அரைத்துச் சாப்பிட்டால் சளி, மூக்கடைப்பு குணம் அடையும்.

அடுத்ததாக நீர்த்தாவரமான தாமரையில் பரிணமிக்கின்ற தாமரைப் பூவைப் பற்றிச் சிறிது நோக்குவோமானால். தாமரைப் பூ மிகவும் அழகானது. இதன் மத்தியில் கல்விச் செல்வத்தை வழங்குகின்ற சரஸ்வதிதேவி வீற்றிருப்பதாக இந்து ஆகமம் கூறுகின்றது. நினைவாற்றலுக்குச் சிறந்த மருந்தாகத் தாமரைப் பூ பயன்படுகின்றது.

சித்தவைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைவாக தாமரைப்பூவைத் தொடர்ந்தும் சாப்பிட்டு வந்தால் நரை, திரை, மூப்பு ஆகிய மூன்றும் தாமதமாகின்றது. ஆயுளும் நீடிக்கும் என்று சித்த மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளைத் தாமரைப் பூவைச் சுத்தம் செய்து குடிநீர் தயாரித்துப் பருகிவந்தால் இரத்த மூலம், சீதபேதி குணமடையும்.


மூளை வளர்ச்சிக்கு இது முக்கிய மருந்தாகும். கல்வி வளர்ச்சியும் ஞானோதயமும் தன்னிச்சையாகவே ஏற்பட்டுவிடும்.

அடுத்து முருங்கைப் பூ பற்றிப் பார்ப்போம். முருங்கைப் பூ தாது பலத்துக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. பசும்பாலை நன்றாகக் காய்ச்சி அதில் முருங்கைப் பூவைப் போட்டுத் தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் ஏற்படும். முருங்கைக்கீரை, முருங்கைப் பூ ஆண்மைச் சக்தியை அதிகரிக்கின்றன.

வீட்டுக்கு ஒரு வைத்தியர் என்று முருங்கை மரத்தைக் குறிப்பிடலாம்.

இனி வேப்பம் பூவைப் பற்றி ஆராய்வோம். வேம்பு மிகச் சிறந்த மருத்துவக் குணங்கள் படைத்தது. வேப்பம் பூவைத் துவையலாகவோ, பொடியாகவோ சர்பத் போலத் தயாரித்தோ அல்லது பச்சையாகவோ பயன்படுத்தலாம்.

(தொடரும்)



கண்களில் இருந்தே ஒரு பெண் எவ்வளவு இளமையானவள், எவ்வளவு நலம் மிக்கவள் என்பதை சொல்லி விடலாம்.

அத்தகைய அற்புதமான கண்கள் சரியான முறையில் பேணப்படாமல் போகின்ற போது நேருகின்ற கேடுகள் அநேகம். கண்கள் கவனிக்கப்படாமல் விடப்படுகின்ற போது கண்களைச் சுற்றிலும் சிலந்தி வலைகளும், கோழிக்கால்களும் தோன்றத் தொடங்கும். இவ்வாறு தோன்றும் கோடுகளும் கருவளையங்களும் கண்களை ஒளிகுன்றச் செய்து காலத்திற்கு முந்தியே கண்களுக்குச் சோர்வையும், களைப்பையும் உண்டு பண்ணி மூப்படைந்த தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

சத்துமிக்க, ஆரோக்கியமான உணவு, போதிய உடற்பயிற்சி, மிதமான நிம்மதியான உறக்கம் இவைகளைத் தவறாமல் கடைப்பிடித்து வந்தால் கண்பாதிப்புகளை ஓரளவு தவிர்க்கலாம்.

கண்களை மூடி மூச்சை நன்றாக ஐந்தாறு முறை உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கண்களுக்குச் செல்லும் ரத்தம் மிகுதியாகிறது. முகத்தில் ஏற்பட்டிருக்கும் இறுக்கம் தளர்வுறும் வரையில் மறுபடி மறுபடி மூச்சை நன்றாக உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். நெற்றி, கன்னம் மற்றும் தாடை போன்ற பகுதிகளுக்கும் கண்களுக்குச் செலுத்தப்படும் அதே அளவு அக்கறையையும், பாதுகாப்பினையும் வழங்க வேண்டும்.

சூரிய ஒளியில் உள்ள அல்ட்ரா வயலெட் கதிரினால் சருமம் எளிதாக பாதிக்கப்பட்டு விடுகிறது. அதிலும் குறிப்பாக கண்களைச் சுற்றிலும் உள்ள பகுதி மிகுதியான தாக்குதலுக்கு ஆட்படுகிறது. கண்களுக்குக் கீழே உள்ள பகுதி மிக மிருதுவாகவும் லேசாகவும் இருப்பதால் வெகு விரைவில் அழற்சிக்கு ஆட்பட்டு விடுகின்றது. சத்தற்ற உணவும், வேலைப்பளு மற்றும் மன இறுக்கம் போன்றவை இவ்வழற்சியை மேலும் தீவிரமாக்குகிறது. சில பெண்களுக்கு மரபியல் தன்மை காரணமாகவும் இங்நிலை ஏற்படச் சாத்தியமுள்ளது. வயதாகும் பொழுது, இத்தகைய தொங்கு தசைகள் முகத்தில் பெருங் குறையை உண்டாக்கி, தோற்றத்தையே சிதைத்து விடுகின்றன.

இவற்றை அவதானித்து உரிய ஆலோசனைகளைப் பெற்றுச் சிகிச்சைகள் பெறும்போது இதிலிருந்து விடுபட்டு எப்போதும் இளமையோடு இருக்கலாம்.

## சருமத்துக்கு ஒளியூட்டும் கடலைமா



கடலைப் பருப்பும் இதிலிருந்து மாவாகும் கடலைமாவும் சமையலறையில் அதிகமாகப் பயன்படுத்தக்கூடியவை இந்த கடலை மாதான். இது உணவுப் பொருளாக மட்டுமல்லாது, சிறந்த அழகு சாதனமாகவும் கருதப்படுகிறது.

எளிய, செலவில்லாத முகத்துக்குப் போடக் கூடிய பேக், கடலை மாவுதான். இது தோலை இறுக்கச் செய்யும். இறந்த செல்களை அகற்றக்கூடியது. நல்ல நிறமாக வர வேண்டுமென்பவர்கள் கடலை மாவை உபயோகித்தால் சருமம் பளிச்சென்று இருக்கும்.

கடலை மா ஒரு சிலருக்கு அலர்ஜியாவதுண்டு. அவர்கள் கடலை மாவுடன், பன்னீர், தேன், பால் தயிர் இவற்றில் ஏதாவது ஒன்றை சிறிதளவு கலந்து முகத்தில் பேக்காகப் போடலாம்.

பொதுவாகவே எல்லோருடைய சருமத்திற்கும் பொருந்தக் கூடிய தானியவகை பச்சைப் பயறு. இது பித்தத்தைப் போக்கக் கூடியது. புரதச் சத்து அதிகமாக இருக்கும். இதில் ஒட்டும் தன்மை அதிகம்.

நமது சருமம் புரதத்தால் ஆனது. உணவாகச் சாப்பிடும் போதும் புரதம் நமக்குத் தேவையான ஒன்று. அதே சமயம் புரதத்தை வெளிப் புறத்தில் கொடுக்கும் பொழுது, சருமம் மென்மையாக மாறுகிறது. முளை கட்டின பச்சைப் பயறில் ஏராளமான சத்துக்கள் அடங்கி இருக்கின்றன.

பயத்தம் மாவுடன் பால், தேன், பன்னீர் கலந்து சருமத்திற்குப் பூச உபயோகப்படுத்தலாம். அல்லது வெள்ளரிச்சாற்றை பயத்தம் மாவுடன் கலந்து பேக்காகப் பயன்படுத்தலாம்.

எண்ணெய் குளியல் எடுக்கும்பொழுது சிலருக்கு சிகைக்காய் தேய்த்துக் குளிப்பது, அலர்ஜியாக இருக்கும். கண் எரிச்சலைக் கொடுக்கும். அவர்களும் சரி, சிறு குழந்தைகளுக்கு எண்ணெய் குளியலின் போது சரி பயத்தம் மா தேய்த்துக் குளிக்கலாம். உலர்ந்த சரும வகைக்கு பால் ஏடுடன் பயத்தம் மாவையும், எண்ணெய் சருமத்துக்கு பயத்தம் மாவுடன் ஆரஞ்சு சாற்றையும் கலந்து உபயோகப்படுத்தலாம்.

## மழைகால உடல் பராமரிப்பு



மழைக்காலத்தில் எந்நேரமும் மழை பெய்து கொண்டே இருக்கும். இந்தக் காலத்தில் பலரும் சளி தொல்லையால் அவதிப்படுவர். சேற்றுப்புண் வரவும் வாய்ப்புள்ளது. எனவே, மழைக்காலத்தில் உடலை எப்படிப் பராமரிப்பது என்பது குறித்து மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாள்களுக்கு ஒருமுறை தலைக்கு குளித்தால் நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணெய்யை தடவிக் கொள்ளவும்.

அதேபோல் முழங்காலில் இருந்து கணுக்கால் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் பசை தடவி மசாஜ் செய்து கொண்டால் மழைநாள்களில் இந்த இடங்களில் பங்கஸ் தாக்காதிருக்கும்.

தினமும் இரவு படுக்கப்போகும் முன்பு, ஒரு சிறிது வெந்நீரை ஊற்றி, அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊறவைத்து கைவிரல்களால் மசாஜ் செய்யுங்கள். இப்படிச் செய்வதால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி, சுத்தமான துணியால் ஈரத்தை துடையுங்கள். ஆறுதலான அமைதியான தூக்கமும் இதில் கிடைக்கும்.

## சிறு குறிப்புக்கள்

★ உலர்ந்த சருமம் உள்ளவர்கள், கிளிசரினுடன் ரோஸ் வாட்டர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி வரலாம்.

★ முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப்பூ இதழ்களை அரைத்து, அதோடு பால், பச்சை பயிறு மா மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பளபளப்பாக மாறுவதை காணலாம்.

★ கரும்புள்ளிகள் உள்ள இடத்தில், பச்சை பயிறுடன் சிறிது தயிர் சேர்த்து தடவி வர வேண்டும். பின் அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்த பின்னர் முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நாளடைவில் மறையும்.

★ கடலை மா, பாலாடை, எலுமிச்சம் பழச்சாறு, கிளிசரின் கலந்து தினமும் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில், தடவி வந்தால் வெயிலினால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.

★ வெள்ளரிச்சாறு ஒரு ஸ்பூன், சந்தனப்பொடி ஒரு ஸ்பூன், கடலைமாவு ஒரு ஸ்பூன் எடுத்து மூன்றையும் நன்கு கலந்து முகம், கை கால்களுக்கு தினமும் போட்டு வந்தால் முகம் பிரகாசமாக மாறுவதை பார்க்கலாம்.

★ சந்தனம், முல்தானிமட்டி கலந்த பேஸ்பாக் உபயோகித்து வர முகம் பொலிவாகவும், மிருதுவாகவும் மாறும்.

★ கடலைமாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு மேசைக் கரண்டி பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மிதமான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.



# பிரம்ம ஞானம்



தந்தை ஒருவர் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் பிரம்ம ஞானம் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக ஒரு நல்ல குருவிடம் அனுப்பி வைத்தார். குருகுலவாசம் முடிந்து அவர்கள் இரண்டுபேரும் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். முதலில் மூத்த மகனை அழைத்து ''பிரமத்தைப் பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய்'' என்றார் தந்தை. உடனே அவன் ஒரு பெரிய பிரசங்கமே செய்ய ஆரம்பித்துவிட்டான். வேதங்களிலிருந்து சாஸ்திரங்களில் இருந்து நிறைய உதாரணம் எல்லாம் எடுத்து விளக்கினான்; பிரசங்கம் முடியவில்லை; ''சரி, போதும் நிறுத்து'' என்று சொல்லிவிட்டு இரண்டாவது பிள்ளையைப் பார்த்து, ''பிரமத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்?'' என்று கேட்டார் தந்தை.

அவன் பதில் சொல்லவில்லை தலையைக் குனிந்து நின்றான். அவனைப் பார்த்த தந்தை கூறினார் ''நீ தான் பிரம்மத்தைப் பற்றி ஏதோ தெரிந்து வைத்திருக்கிறாய்'' என்று நினைக்கிறேன் - என்றார்.

பிரம்மம் என்றால் என்ன என்பது பற்றி முழுவதும் தெரிந்து கொண்டிருப்பதாகப் பலபேர் நினைத்துக் கொண்டிருப்பார்கள். எப்படியென்றால் ''பிரம்மாண்டமான சர்க்கரை மலையிலேயிருந்து ஒரு சிறு துணுக்கு சர்க்கரையை எடுத்துக்கொண்டு போகின்ற எறும்பு அடுத்த தடவை முழு சர்க்கரை மலையையும் தூக்கிக்கொண்டு போவேன்'' என்று கூறுவதைப் போன்றது என்று கூறுகிறார் இராமகிருஷ்ண பரமகம்ஸர்.

பிரம்மம் என்பது எம்முடைய எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டது. சுகதேவர் மாதிரி உள்ள பெரிய மகான்கள் கூட இந்த விடயத்தில் ஒரு பெரிய எறும்பு என்றுதான் கூறவேண்டும்.

அவர்களது பிரம்மஞானத்தைப் பற்றிக் கூறவேண்டுமானால் ஏழெட்டு சர்க்கரைத் துணுக்குகளைத் தூக்கிக்கொண்டு போனவர்கள் போன்றுதான் பிரம்மம் என்கின்ற பெரிய கடலின் கரையில் நின்று அவர்களெல்லாம் காலை நனைத்து உள்ளார்கள். அந்த அளவுக்குத் தான் கூறமுடியும்.

அதில் அவர்கள் மூழ்கவில்லை; மூழ்கியிருந்தால் அவர்கள் திரும்பியிருக்க மாட்டார்கள்.

ஒரு சின்ன உப்புப்பொம்மை இருந்ததாம். அதற்கு ஓர் ஆசை. என்ன ஆசை தெரியுமா? கடல் எவ்வளவு ஆழம் இருக்கும் என்று உள்ளேபோய் பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டும் என்று. சரி, அளந்து பார்த்து விடுவோம் என்று தீர்மானம் செய்து கடலில் குதித்தது; அவ்வளவுதான்; உப்பு பொம்மை கடலில் வீழ்ந்தால் என்ன நடக்கும். கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் தொடங்கியது. கொஞ்சத் தூரம் போவதற்குள் முழுதுமாகக் கரைந்துவிட்டது. அதன்பின் அந்த பொம்மையால் கடலின் ஆழத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தன்னையே கண்டுபிடிக்கமுடியவில்லை என்று ஆனபோது அது எப்படிக் கடலின் ஆழத்தை, எந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப்போகின்றது.

பிரம்ம ஞானம் வந்துவிட்டால் மனிதன் மௌனமாகி விடுவான். அது வரும் வரைக்கும் அவன் சர்ச்சை செய்து கொண்டேயிருப்பான்.

தேன் குடிப்பதற்காக ஒரு வண்டு வந்து மலர் மேல் உட்காரும் வரைக்கும்தான் ரீங்காரம் செய்யும். உட்கார்ந்ததும் மௌனமாகிவிடும். இதெல்லாம் ராமகிருஷ்ணருடைய அமுதமொழிகள்.

ஒருத்தர் நிறையவே பேசிக்கொண்டும் கேள்வி கேட்டுக்கொண்டும் ஒரு நண்பரிடம் சென்றார். அரைமணி நேரம் அவரின் பேச்சைக் கேட்டவுடன் மௌனமாகிவிட்டார், பிரம்ம ஞானம் வந்துவிட்ட மாதிரி. சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டார். ஏன் புறப்படுகிறீர்கள் என்று நண்பர் கேட்டதற்கு தெரியாமல் உன்னிடம் வந்து விளக்கம் கேட்டு, ஏற்கனவே தெரிந்துவைத்திருந்ததையும் மறந்து விட்டேன். இனிமேல் சந்தேகம் வருவதற்கு வாய்ப்பே இல்லை; அதனால்தான் மௌனமாகி விட்டேன் என்றார்.

சுகி. சிவம்

# வாசகர் திருமுகம்

## மதுபான விற்பனை நிலையத்தால் சிரமம்

டச்சுவீதி கோப்பாய் தெற்கு, இருபாலைச் சந்திக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உணவகத்துடன் கூடிய மதுபான சாலையை உடன் தடுத்து நிறுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கிறோம்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு மிக அண்மையில் இது அமைந்துள்ளது.

பிரதேசத்தில் உள்ள இரண்டு பெரிய கல்வி நிறுவனங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளன. சைவச் சூழலில் உள்ள ஆலயங்களுக்கு மிக அண்மையில் இது உள்ளது.

கடந்த பல காலமாக இந்தப் பிரதேசத்தில் மதுபான விற்பனை நிலையத்துக்கு அனுமதி வழங்கப்படாத போதும் தற்போது இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பிரதேசத்துக்குப் பெரும்பாதிப்பு ஏற்படும் எனவும் அஞ்சப்படுகிறது. எனவே இந்த கலாசார சீரழிவுமையம் உருவாவதை உடன் தடுத்துநிறுத்துமாறு கேட்கின்றோம்.

பிரதேச மக்கள்.

## பேரூந்து சேவை நடைபெறாதா?

ஏ-9 உசன் சந்தியூடாக உசன் கந்தசாமி கோயில்வரை இ.போ.ச. தனியார் போக்குவரத்து சேவைகள் நடைபெறுகின் றன. சாவகச்சேரி கச்சாய் ஊடாக கெற்பலி மத்தி வரை தனியார் போக்குவரத்து சேவை நடைபெறுகின்றது. ஆனால் உசன் கந்தசாமி கோயிலடியிலிருந்து உசன் தெற்கு ஊடாக கெற்பலி சந்திவரை எவ்வித போக்குவரத்து சேவையும் இல்லாதது ஏன்? இப்பகுதியில் 80 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்தும்- தார் ஊற்றிய சீரான வீதி இருந்தும் போக்கு வரத்து சேவையின்றி மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இது தொடர்பாக இ.போ.ச. கோண்டாவில் சாலைக்கு மக்கள் வேண்டுகை மகஜர் கொடுத்தும் இ.போ.ச. பேரூந்து ஏனோ தானோ என்று பணியாற்றி விட்டு அதையும் இடைநிறுத்திவிட்டது. சம்பந்தப்பட்டவர்கள் தயவு கூர்ந்து இப்பகுதிக்கான பேரூந்துச் சேவையை ஆரம்பிக்க ஆவன செய்யுங்கள்.

சௌந்தர், மிருசுவில்.

## எப்போது கிடைக்கும் விடிவு?

எமது கிராமமான வளநகர், முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி எனும் பிரதேசத்தில் உள்ளது. இங்கு மீள்குடியமர்வு நடைபெற்று 3 வருடங்கள் ஆகின்றன. மல்லாவிப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டு 2 வருடங்களாகின்றன. ஆனால் எமது கிராமத்தில் மின்கம்பங்கள் நடப்பட்டு ஒரு வருடமாகியும் இன்றும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

இங்கு வசிப்பவர்களில் பொரும்பாலானோர் மாணவர்கள் ஆவர். எனவே இவர்கள் தமது கற்றல் நடவடிக்கையில் சிரமமின்றி ஈடுபடுவதற்கு மின்சாரம் ஓர் அத்தியாவசிய தேவையாகவுள்ளது. நாம் எமது பிரச்சினையை மின்சார சபையினர் மற்றும் பிரதேச உறுப்பினர்கள் ஆகியோரிடம் முன்வைத்தும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

வ.சோநாதன், மல்லாவி.

## பரீட்சார்த்திகளின் நெருக்கடி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கொழும்பில் நடத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடத்துவதால் பரீட்சார்த்திகள் பலதரப்பட்ட பிரச்சினைகளை அதாவது போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி உட்பட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் பரீட்சை நிலையங்களைக் கண்டுபிடித்தல் போன்ற பலவகையான சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்பரீட்சையை நடத்தித்தருமாறு உரிய அதிகாரிகளையும் மற்றும் வேலையற்ற பட்டதாரி அமைப்பையும் கேட்டுக்கொள்கிறேன்.

பரீட்சார்த்திகள் சார்பில்,
எஸ்.சாரங்கா.

## மனம்குளிர வைத்த பாராட்டு நிகழ்வு

சங்கீத பூசணம் ச.பாலசிங்கத்தின் பாராட்டுவிழா இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. அது கண்டு நான் மனம் பூரித்துப் போனேன். ஒரு முதுபெரும் கலைஞர் இளம் கலைஞர் மண்டபத்தில் பாராட்டப்படுவதைக்கண்டு தான் மனம் குளிர்ந்தது. அதுவும் அவரிடம் படித்த மாணவர்கள் நடத்தும் விழா. அவரை இளம் வயது முதலே நான் அறிவேன். எங்களுடைய கல்லூரி அதாவது பரமேஸ்வராக் கல்லூரியில் அவர் படித்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் படித்தவர். யாழ்ப்பாணத்தில் அண்ணாமலை தமிழ் இசை மன்றம் அமைத்து அதில் பல மாணாக்கர்களை உருவாக்கியவர். அது மட்டுமல்லாமல் பல இசை விழாக்களைத் தானாகவே முன்னின்று நடத்தியவர்.

தமிழ் இசைதான் தன் மூச்சு என்று உலகறியச் செய்தவர். இனிமையான குரல் வளம் படைத்தவர், இசைச் செருக்கு இல்லாதவர். அவரது குடும்பமே இசைக் குடும்பம் தான்.

தான் கற்ற இசைக் கலையை யாருக்காவது சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கும் பெரியவர். இலவசமாகச் சொல்லிக் கொடுத்து பல மாணவர்களை உருவாக்கிய பெரியவர். கல்யாணி, காம்போதி, மோகனம், சாவேரி, தோடி போன்ற இராகங்களை அவர் அந்தக் காலங்களில் கையாண்டவிதம் ஒரு அலாதி. அவர் 82 வயதிலும் துடிப்புடன் பாடுகிறார். உடல் தான் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறது. அந்தப் பெரியவர் குணத்தாலும், இசையாலும் அவர் பெரியவர்தான் என்று வாழ்த்தி நன்றி மறக்காமல் அவரது மாணவர்கள் அவருக்கு விழா எடுத்தது கண்டு நான் மனம் பூரிப்படைந்தேன்.

ஐ.அரசபிள்ளை, கல்வியங்காடு.

## வீதிக்கு விமோசனம் கிடைக்குமா?

ஏ-9 வீதியிலிருந்து நாவலடி, பூம்புகார் ஊடாக கிழக்கு அரியாலைக்குச் செல்லும் பிரதான வீதியானது தினமும் ஆயிரக்கணக்கான பொது மக்கள், பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோர் பிரயாணம் செய்யும் வீதியாயிருப்பதுடன் நூற்றுக் கணக்கான அரச வாகனங்கள், தொண்டு நிறுவனத்துக்குரிய வாகனங்கள் தினமும் பிரயாணம் செய்யும் வீதியாக உள்ளது. மேற்படி கிராம மக்க்ள் தவிர்ந்த மணியம் தோட்டம், வசந்தபுரம் மக்களும் இப்பாதையில் தினமும் பயணித்து வருவதால் யாழ்.நகர் கிழக்கில் இது முக்கியத்துவம் வாய்ந்த வீதியாக உள்ளது.

ஆனால் மேற்படி வீதியானது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பயணிக்கும் பொது மக்களும், வாகனங்களும் மிகவும் சிரமப்பட்டே பயணம் செய்ய வேண்டியுள்ளது. இந்த வீதியைப் புனரமைத்து பொது மக்களின் சிரமத்தை தவிர்க்கும் படி பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள் சார்பாக சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வா. கோவைராஜன்.

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சிறு வேலை ஒன்றுக்கு, நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம். உங்களைப் பார்த்து உறவினர்கள், பொறாமைப்படலாம். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். குடும்ப பிரச்சினையில், மற்றவர்களை தலையிட அனுமதிக்காமல் இருப்பது நல்லது. பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வீண் செலவு நேரும்.

**இடபம்:**
பெரிய மனிதர் ஒருவரின் நட்பு கிடைக்கலாம். உடன் பிறப்புக்கள் விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கச் செல்லும் சிலருடன் நீங்கள் துணைக்குச் செல்லலாம். வெளிநாட்டு பயண முயற்சிகளில் முன்னேற்றகரமான திருப்பங்களைக் காணலாம்.

**மிதுனம்:**
தேக ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது, நினைத்த நேரத்துக்குக் கிடைக்காமல் போகலாம். சிறந்த திட்டமிடல் இல்லாமல் காரியங்களில் இறங்குவதைத் தவிர்க்க வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. தொழில் ரீதியாக கூடுதல் ஆதாயம் பெறலாம்.

**கடகம்:**
வீண் விரயங்களை, மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி, முக்கியமான வேலைகளை ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கப் போட்ட திட்டத்தை பிற்போட்டு வைப்பீர்கள். நண்பர்கள் சிலரிடம் அவசர உதவி கேட்கும் சூழ்நிலை உருவாகும். பொறுப்புகளால் மன உளைச்சல் நேரும்.

**சிங்கம்:**
உறவினர்கள் சிலருடன் சேர்ந்து நல்ல காரியம் ஒன்றைச் செய்ய முற்படுவீர்கள். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். தொழில் கூட்டாளிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, எரிச்சல் உண்டாக்கலாம். திடீர் பயணங்களால், செலவுகள் உண்டாகலாம். அரசு தொடர்பான காரியங்கள், தடங்கலின்றி முடிவுக்கு வரும். கடன்கள் வசூலாகும்.

**கன்னி:**
புதிதாக வரும் பணவரவுகளால், கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பீர்கள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி, புதிய பொருள்கள் வாங்குவீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். வியாபாரிகள் கூடுதல், வியாபாரத்தால் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**துலாம்:**
பல நாள்களாக காது கொடுத்துக் கேட்காமல் இருந்த ஒருவரின் யோசனையை, இன்று திடீரென செயற்படுத்த முற்படுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த ஒரு பொருளை வாங்க, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடலாம். பண விடயங்களில் சிலருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். சுபச் செலவுகள் கூடும்.

**விருச்சிகம்:**
உறவு பகை பாராமல் உதவி செய்யும் நாள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். உங்களுக்காக நண்பர்கள் சிலர் செலவு செய்யலாம். நீண்ட நாள்களாக பார்க்காத ஒருவரைப் பார்க்கலாம். எதிர்பாராத பணவரவுகள் வந்தாலும், அதைச் சேமிக்க முடியாத சூழ்நிலை உருவாகும். ஆற்றல் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:**
அறியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு, பின்னர் அதற்காக மனக்கவலை அடைவீர்கள். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தொலைபேசி வழித் தகவல்கள் உங்களுக்கு மகிழ்ச்சி, உற்சாகம் தருவதாக அமையலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்:**
யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். மனதில் நினைத்த காரியம் மட்டுமின்றி, நினைக்காத ஒரு காரியமும் நடந்தேறும். மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சுகமான அனுபவம் உண்டு.

**கும்பம்:**
செலவுகள் இருந்தாலும் அதற்கேற்ற வகையில் தனவரவுகளைப் பெறும் நாள். தொழில் ரீதியான சில விடயங்களில் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு செயற்படுவீர்கள். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். உங்களின் நலனில் அக்கறை கொண்ட சிலரைச் சந்தித்துப் பேசுவீர்கள். திட்டமிட்டக் காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**மீனம்:**
உடல், சோர்வு, அசதி ஆள்கொள்ளும் நாள். ஆரம்பித்த சில வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் ஏதாவது இடையூறுகளைச் சந்திக்கலாம். பால்ய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். சக ஊழியர் ஒருவரிடம் சுக துக்கங்களைப் பேசி, ஆறுதல் அடைவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டுச் செலவு கூடும்.

# புத்தகசாலை

## நூல்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
### வெளியீடு: கொழும்புத் தமிழ்ச் சங்கம்




ஆறுமுகநாவலர் நல்லைநகர் தந்த சைவப் பெரியார் அவரைப் பற்றிய நூல்கள் பலவும், பலராலும் பல காலங்களில் வெளிவந்திருக்கின்றன. அந்நூல்கள் அனைத்திலும் அவரது பணிச் சிறப்புகள் தமிழுலகம்போற்றும் வண்ணம் தேர்ந்தெழுதப் பட்டுள்ளன. அத்தகைய விடயச் சிறப்புக்களோடு சிறிய கையடக்கமான நூலாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எனும் இந்தச் சிறு நூலை ஏழாலை ஆத்மஜோதி தியான சபையினர் வெளியிட்டுள்ளனர். இந் நூலை நா.முத்தையா அவர்கள் தொகுத்து எழுதியுள்ளார்.


நாவலரின் முழுமைப் பணியையும் அவர்தம் வாழ்வின் சிறப்பையும் சுருங்கக் கூறி விளங்கத் தந்திருக்கின்றனர்.

ஆறுமுக நாவலரின் பேச்சுத் திறனும், எழுத்துத்திறனும் தமிழ் மொழியின் உரைநடை தந்த மேன்மைக்கு உறுதி தந்தன. அந்நிய மொழியும், மதமும், தமிழர்தம் சைவமும் மொழியும் கொண்டிருந்த வளர்ச்சித் திசையைத் தடுக்க எடுத்த முயற்சிகளை நிறுத்தும் பணியில் ஆறுமுக நாவலர் ஈடுபட்டார்.

நாவலரவர்கள் சந்தித்த பெரியார்களும் அவர்களின் அறிவுக்கும் புலமைக்கும் மதிப்பளித்து, அவற்றைத் தமிழுக்கும் சைவத்துக்கும் பணி தொடரப் பயன்படுத்தியமை போன்ற பலவற்றையும் அவரது தொண்டின் கனதி குறையாது, அந்தச் சிறுநூலில் தந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆங்காங்கே காணப்படும் எழுத்துப் பிழைகள் செய்யுள்களில் இடம் பெறாமல் இருந்திருப்பின் நலமானதாகும். இந்நூல் சிறந்ததோர் சிறிய கைநூல் பாதுகாத்துப் பயன் பெறுவோம்.

மகேஷ்.

## நூல்: மகிழ்வுடன்
### வெளியீடு: கலைச்சூரியன்




வைத்திய கலாநிதி சிவதாஸின் 'மகிழ்வுடன்' எனும் நூல் மூன்றாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. அழகிய முகப்பு அட்டையுடனும் நிறைவான உள்ளடக்கத்துடனும் வாசிக்கத் தூண்டும் தமிழ் நடையுடனும் நூல் சிறப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

இது ஓர் உளவியல் நூலெனினும் எளிமை கலந்த மொழியில் இலகு நடையில் சாதாரண வாசகரையும் வாசிக்கத் தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

வாசகர் ஒவ்வொருவரும் நன்றே கிரகித்துப் புரிந்துணர்ந்து செயற்பட வாய்ப்பளித்துள்ளது. அனுபவ உண்மைகளும் ஆய்ந்தறிந்த நல்வழியும் புலப்பட மருத்துவரின் நூல் தந்துள்ள கருத்துக்கள் தெளிவுடையனவாகும்.

மகிழ்வைத் தொலைத்து வாழும் இன்றைய எமது சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மகிழ்ச்சியைத் தூண்டும் வகையில் தேர்ந்த கட்டுரைகள் நான்கு பெரிய தலைப்புகளில் விரிந்துரைக்கப்பட்டுள்ளன.

எமது இனம், எமது மக்கள், எமது சூழல், எமது கலாசாரம் என நாம் போற்றும் வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொண்டு பேணுவதன் நோக்கில் ஆற்றவேண்டியவை பற்றியும் எம்மைக் கடந்தும், கடந்து செல்லாதிருக்கின்ற போர்த்துயரங்களைப் போக்குதல் பற்றியும் அவற்றால் அடைந்த, அடைகின்ற அழுத்தங்கள், நெருக்கீடுகள் பற்றியும் நிறையவே கருத்துரைத்திருக்கின்றார்.

உளவியல் சார்ந்த நூல்கள் பலவும், உலகப் பெயர் பெற்ற உளவியல் ஆய்வாளர்களின் தேர்ந்த குறிப்புடனும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தெளிவுகளின் மேற்கோள்களுடனுமே இடம்பெறுவது வழக்கம்.

ஆனால், மருத்துவர் சிவதாஸ் தாம் பெற்ற பட்டறிவுடனும் பலருடன் கலந்துரையாடி கற்ற நல்லறிவுடனும் வாழும் வழிமுறைகள் சார்ந்து பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மகிழ்வுடன் வாழ்தல் ஒன்றே, 'வாழ்தல்' என்பதன் தெளிந்த கருத்தாகும். வாழ்தலுக்கு ஆதாரம் மகிழ்ச்சியே என வலியுறுத்தும் நூலாசிரியர், நம்மைச் சூழ்ந்துள்ள துயரங்கள், துன்பங்கள் மத்திரமல்ல நெருக்கீடுகள், அழுத்தங்கள், பாதிப்புகள் யாவற்றையும் நீக்கும் மருந்து மகிழ்ச்சியே ஆகும் என்பதை உணர்த்துகின்றார்.

மகிழ்வுடன் வாழ விரும்பும் ஒவ்வொருவரையும் 'இப்படி வாழ்தல் இனிது' என இடித்துரைக்காமல், இப்படி வாழ்தல் இனிக்குமா? என்ற வினாவை எழுப்பி பட்டறிவுத் தூண்டலுக்குள் வாசகரை இட்டுச் செல்வது சிறப்பான வழிப்படுத்தல் ஆகும்.

நூலின் முன்னுரையில் மருத்துவர் சிவதாஸால் சமூக நோக்குடன் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மருத்துவத் துறையில் ஏற்பட வேண்டிய ஆரோக்கியமான மாற்றங்களின் தேவை பற்றி உரைக்கின்றன.

இன்றைய நாள்களில் பாதிப்புகளுக்கு உள்ளான எமது சமூகத்தின் உளவியல் தேவைகள் உடனடி நிவாரணங்களாகத் தீர்க்கப்பட கூடியவை அல்ல.

அவை பயன் விளைவிக்கும் தூர நோக்குடன் கூடிய நிலைத்த உயிர்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து மனங்கொள்ளத் தக்கதாகும்.

பாதிப்புக்குள்ளான சிறுவர்களைக் கொண்ட கலைச்சூரியர் நிறுவனத்தின் போசகராக நூல் ஆசிரியர் பணியாற்றுகிறார். அதன் மூலம் மனநல மருத்துவரான சிவதாஸ் தமது மகிழ்வுடன் என்ற நூலுக்கும் அவரது கருத்துகளுக்கும் செயல் ஊக்கம் கொடுத்துள்ளமையை அறியலாம்.

மகேஷ்.

## நூல்: தமிழருவி
### மாதாந்த சஞ்சிகை




தமிழருவி கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகையின் அருவி 5 வெளியாகியுள்ளது.

யாழ். பொது நூலகத்தின் கம்பீரமான தோற்றத்தை அட்டைப் படமாகக் கொண்டு இந்த இதழ் இம்முறை மிடுக்குடன் வெளிவந்துள்ளமை பார்ப்போர் மனதை கவர்கின்றது.

கலாநிதிப்பட்டம் பெற்ற ஆறு.திருமுருகனுக்கான கௌரவிப்புடன் புலமைப்பரிசில் மாணவரின் நெருக்கடி, தமிழிலக்கியத்தில் பெண்கள், சிறுவர் உளவியல், புலவர் பார்வதி நாதசிவத்தின் நேர்காணல், சங்க காலத்தில் ஆடற்கலை, சொர்க்கத்தில் வியப்பு போன்ற பல்வேறு புதிய ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது.

அது மட்டுமன்றி மருத்துவம், இலக்கியம், மக்கள் வாழ்வியல், விவசாயம் போன்ற விடயங்களையும் தாங்கி பெறுமதிமிக்க மலராக இது வெளிவந்துள்ளது.

இந்த இதழில் சமயக் கருத்துகளுக்கும் இடம்கொடுக்கப்பட்டுள்ளமை இதன் பூரணத்துவத்தைக் காட்டுகிறது.

**புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

# இது ஏமாற்றுத் திட்டம்!

## இராமலிங்கம் சந்திரசேகர்



சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். 150 வருடங்களுக்கு மேலாக வியர்வை சிந்தி அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துகொண்டிருக்கும் மலையகத் தொழிலாளர்களை முதலாளித்துவத் தலைவர்கள் ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ஆட்சிபீடம் ஏறிய மஹிந்த ராஜபக்ஷ மஹிந்த சிந்தனை திட்டத்தின்மூலம் மலையக தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்புகளெனக் கூறினார். எனினும், அவர்கள் கல்வியிலும் ஏனைய விடயங்களிலும் பின்னடைவை எதிர்நோக்குகின்றனர். இத்திட்டம் மக்களுடைய திட்டமல்ல, இது ஓர் ஏமாற்றுத் திட்டம் - இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் முன்னாள் எம்.பி. சந்திரசேகர்.

## பட்ஜெட்டில் தோட்ட மக்கள் புறக்கணிப்பு: மலையகத் தலைமைகள் என்ன சொல்கின்றனர்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அடுத்த வருடத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் துறையினருக்கும், அரச துறையினருக்கும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமை அறிந்த விடயம். எனினும், இவ்வரவு - செலவுத்திட்டத்தில் தோட்டப்புற மக்களுக்கு எவ்வகையிலான பயன்கள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ள நிலையில் தோட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என சிலர் கூறுகின்றனர். இது தொடர்பில் மலையக அரசியல்வாதிகளிடம் நாம் கருத்துக் கேட்டோம்.

# நல்ல திட்டம் என்று கூறமுடியாது

## திகாம்பரம்



இந்த வரவு - செலவுத் திட்டத்தை நல்ல திட்டம் என்றும் கூறமுடியாது. அதேபோன்று குறைபாடுகளும் கூற முடியாது. இதில் பெருந்தோட்ட மக்களுக்கென பொதுவான ரீதியில் சுகாதாரம், கல்வி என்பவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எப்படியாயினும் பெருந் தோட்டப் பகுதிகளில் 37 ஆயிரம் ஏக்கர் காணி பகிரப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித் துள்ளார். அதன்படி இந்த 37 ஆயிரம் ஏக்கர் காணி பகிரப்பட்டால் அதை தனியாருக்கு வழங்க முடியாது.

அவை தோட்டப்புற மக்களுக்கே பகிரப்பட வேண்டும்- என்றார் இலங்கை தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம்.

# மலையக வளங்கள் கொள்ளையடிப்பு

## மனோகணேசன்



வழமைபோல தோட்டப் புற மக்களுக்கு எவ்வித நன் மைகளும் வழங்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள னர். ஜனாதிபதியினால்சமர்ப்பிக்கப் பட்ட இந்த வரவு - செலவுத் திட்டம் ஆபத்து இருப்பதை தீர்க்க தரிசனமாக அறிவித்துள்ளது.

தோட்டப் பகுதிகளில் 37 ஆயிரம் ஏக்கர் நிலம் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு பகிரப்பட இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அப்படி வழங்கக் கூடாது. காலம்காலமாக வாழ்ந்துவரும் தோட்ட மக்களுக்கே பிரித்துக் கொடுக்கவேண்டும்.

அது மட்டுமன்றி சுவீகரிப்புச் சட்டத்தின் ஊடாக மலையக வளங்களைக் கொள்ளையிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக தோட்டப்புற காணிகளைத் துண்டாடி, பெரும்பான்மையினருக்கு தாரைவார்க்க அரசு முயற்சித்து வருகிறது - என்று கூறினார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

# மலையக மக்களுக்கு நன்மைகள்

## பிரபா கணேசன்



வரவு - செலவுத்திட்டத்தில் மலையக மக்களுக்கு மறைமுக நன்மைகள் உள்ளன. வரவு-செலவுத்திட்ட சமர்ப்பிப்பின் போது அவை கூறப்படாவிட்டாலும் கூட மறைமுகமான நன்மைகள் திரண்டுள்ளன.

இதேவேளை, பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள 37 ஆயிரம் ஏக்கர் காணி பெருந் தோட்ட மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

அப்படி வழங்காமல், வெளியாருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டால் அரசுக்குள் இருந்துகொண்டே இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் - இப்படி எச்சரித்தார் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன்.

# எந்த நன்மையும் இல்லை

## இராதா கிருஷ்ணன்



2012இற்கான வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு நன்மை எதுவும் இல்லை. தோட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றே கூறவேண்டும். இருந்தபோதும் 37 ஆயிரம் ஹெக்டேயர் காணியை இத்திட்டத்தின் மூலம் வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளதுடன் இக்காணிகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஏக்கர் என பிரித்து கொடுக்கப்படவுள்ளதெனவும் அறிவித்துள்ளது.

இவ்வாறு பிரித்துக்கொடுக்கப்படும் காணிகள் யாருக்கு கிடைக்கும் என்பதுதான் சந்தேகம். இக்காணிகள் காலம் காலமாக பெருந் தோட்டப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களுக்கே கிடைக்கவேண்டும்.

அவ்வாறு தோட்ட மக்களுக்கு கிடைக்காமல் வெளியாருக்கு கொடுக்க நினைத்தால் அரசு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும். எனவே, அரசு இதனைக் கவனத்திற்கொண்டு தோட்ட மக்களுக்கு காணிகளைப் பிரித்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - இவ்வாறு கூறினார் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன்.


# யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, கரவெட்டி.

**பரிசில் தின விழா - 2011.11.26**

**சனிக்கிழமை மு.ப.9.30 மணி**

பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த அதிபர், பிரதியதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.



**நிரை 1:** செல்வி இ.ஞானராணி, திருமதி க.நந்திகா, திருமதி த.பாமினி, திருமதி க.ரேணுகா, திருமதி ரா.கலைச்செல்வி, செல்வி தெ.சசிதா

**நிரை 2:** திருமதி த.விமலேஸ்வரி, திருமதி சி.ஜெயமணி, செல்வி ந.மனோராணி, திருமதி தே.சறோஜினி, திரு.க.இலங்கேஸ்வரன், திரு.க.முரளிதரன், திரு.ந.தேவராஜா (அதிபர்), திருமதி த.றஞ்சினி (பகுதித்தலைவர்), செல்வி.அ.இராஜசுலோசனா, செல்வி கெ.சுவர்ணலதா, திருமதி கி.மோகனரஞ்சினி, திருமதி மு.கீதாஞ்சி.

**நிரை 3:** பி.விதுர்ஷன், கு.பிரகலாதன், செ.அனுராஜ், ஞா.துவாரகன், வி.சஞ்சித், இ.மதீஷன், ர.அபிராம், யோ.வேணுஷன், தி.சோபனா, ஜெ.கஜிதா, ம.ஹர்சிகா, சி.ஷாமிலிக்கா, கு.ஷதுஜா.

**நிரை 4:** ர.சுபீட்ஷணன், யோ.நிருஷிகன், ஜ.ஹரிஸ்மேனன், க.கிருஷிகன், சி.ஆரணன், ச.சாருசன், யோ.மதுஷனன், செ.மைத்ரேஜி.



ரவிகுமார் அபிராம் (164) | குலேந்திரன் பிரகலாதன் (166) | யோகேந்திரன் வேணுஷன் (168) | விமலராஜன் சஞ்சித் (172) | கண்ணதாசன் கிரிஷிகன் (161) | சிறிகந்தசேகரம் ஆரணன் (160) | யோகேந்திரன் மதுஷனன் (167) | யோகராசா நிருஷிகன் (166)



ஜனார்த்தனன் ஹரஸ்மேனன் (158) | சற்குணம் சாருசன் (155) | ஞானமூர்த்தி துவாரகன் (153) | இராஜேஸ்வரன் மதீஷன் (163) | செல்வசோதி அனுராஜ் (155) | மகேஸ்வரன் ஹர்சிகா (159) | சிவராசா ஷாமிலிக்கா (158) | செல்வானந்தன் மைத்ரேஜி (160)



ஜெயானந்தன் கஜிதா (156) | குணரத்தினம் ஷதுஜா (155) | ரகு சுபீட்ஷணன் (158) | பிரசாத் விதுர்ஷன் (166) | திரவியநாயகம் சோபனா (159) | சாந்தராசன் சாம்பவி | மனோராஜா அபிநயா (தேசியமட்டத்தில் Recitation முதலாமிடம்) | இராஜகுரு மாதுமை

இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 36 மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 11 மாணவர்களையும் போட்டிகளில் தேசிய ரீதியில் சாதனைபடைத்த மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகத்தினர்.**

# ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிர சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மீக வெளியீடான ஞானச்சுடர் சஞ்சிகையின் கார்த்திகை மாத 167 ஆவது இதழ் வெளியீட்டு விழா நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ச.நவரத்தினராசவேலும், மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரனும் நிகழ்த்தினர்

(ம- 236)

## இப்போது விற்பனையாகிறது

ஆசிரியர் ஜெறாட் ஜெயானந்தனின்

**“ இலகு ஆங்கில கட்டுரைகளும், கடிதங்களும் ” நூல் (1ஆம் பாகம் )**

(தமிழ் உச்சரிப்பு, தமிழ்க் கருத்துக்களுடன்)

(G.C.E.(O/L) மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது)

விலை ரூபா 180/= மட்டுமே

கிடைக்கும் இடம் : **பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.** [இரு கிளைகளிலும்]

(10853)(3.6.25)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post.

### CAREER GUIDANCE UNIT

Career Guidance Counselor

**Qualifications**

Graduate of a recognized University with four years experience in the field of Students Affairs. (Applicants with postgraduate qualifications in the area of Counselling and/ or experience in Career Guidance activities will be given preference)

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

Assistant Lecturer in **Financial Management** (on contract)

### DISTANCE LEARNING UNIT-BBM ONLINE EXTERNAL DEGREE PROGRAMME

Tutor-Mentor (on contract)

**Qualification:**

(i) A degree from a recognized University in Management Studies or Commerce.
(ii) Should have good command in English and Tamil
(iii) Should have computer application skills in MS Office, Learning Management System, Internet & e-mail and typing skill in English and Tamil.

Age: Below 30 years

Selection by **Interview**

### FACULTY OF MEDICINE UNIT OF ALLIED HEALTH SCIENCES

Demonstrator (on contract) in **Medical Laboratory Technology**

### UNIT OF SIDDHA MEDICINE

Visiting Demonstrator in Yoga

### PHYSICAL EDUCATION UNIT

Visiting Instructor for the following fields
**Karate/Chess-Men/Chess-Women**

| POST | SALARY SCALE |
|---|---|
| Career Guidance Counselor | Rs.25,145-3x585-26,900(EB) 27,475-15x585-36,260/- p.m. |
| Assistant Lecturer (on contract) | Rs.25,145/- (fixed) p.m. |
| Demonstrator(on contract) | Rs. 20,755/- (fixed) p.m. |
| Tutor-Mentor (on contract) | Rs.25,000/- (fixed) p.m. |
| Visiting Demonstrator/Instructor | Rs.250/- per hour |

**Closing date:**

Post of Career Guidance Counselor - 27.12.2011
Other posts -15.12.2011

Application for the above posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka. Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at the Shroff's counter of the University of Jaffna or at People's Bank, University Branch.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.


Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA .24.11.2011

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி செல்லத்துரை

(காலா ஸ்ரோர்ஸ்)



புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சப்பல் வீதி, இல-09 இல் வசித்தவருமான நல்லதம்பி செல்லத்துரை 24.11. 2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நல்லதம்பி-நாகமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இரகுப்பிள்ளை -கனகம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரலிங்கம் மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தன் மற்றும் சத்தியவதி, நல்லதம்பி, கயிலாயநாதன், கனகலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும், கண்ணகிதேவி, காலஞ்சென்ற கமலதாசன் மற்றும் கலாதேவி (கனடா), கண்ணதாசன் (கனடா), கமலாதேவி, கௌரிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசரெத்தினம், அரியராசா (கனடா), நவமணிதேவி(கனடா), பரமேஸ்வரன், குணபாலரெட்ணம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஞானபானு, வாசவன், றெஜிகன் , றேஜிபா, ரம்மியா, மேனன், செந்தூரன், கஜன், நந்தகோபால், ஞானமயி, கிரிதாரி ஆகியோரின் அன்புப் பேரனும், ஐஸ்வரியா, ஜஸ்வின், ஆதவன் ஆகியோரின் பூட்டனும் விஜயானந்த், மயூரன், ரோகினி, சிவாஜினி, கிஷாந்தினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.11.2011) திங்கட்கிழமை (இல.09, சப்பல்வீதி, யாழ்ப்பாணம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணிக்கு புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம்

தகவல்:
திருமதி செல்லத்துரை பரமேஸ்வரி
குடும்பத்தினர்.

(10860)(6-8)

## கண்ணீர் பூக்களை உங்கள் இதயத்தில் தூவி!..





மலர்வு: 05.08.1932
மறைவு: 22.07.1995
**அமரர் வைத்திலிங்கம் பரமசுந்தரம்**

மலர்வு:14.12.1942
மறைவு: 18.11.1990
**திருமதி தாட்சாயணி பரமசுந்தரம்**

கண்ணீர் புஸ்பங்களை தூவி கவலையுற்று
கதி கலங்கி வாழுகின்றோம்
உங்கள் பிரிவுத் துயரால் குமுறுகின்றோம்.
இருக்கும் வரை எம் உறவிலே கலந்திருந்தீர்
பிரிந்து எம் உயிரினிலே நிழலாகிவிட்டீர்
உம்முடன் இருந்த நினைவலைகள் தொடர்கின்றனவே
உங்கள் இழப்பு துயரத்தை சொல்ல மொழியில்லையே
நீங்கள் அருகில் இல்லாத நம் வாழ்க்கைப் பயணம் வலிக்கிறது.
நீங்கள் சென்ற முகவரியோ தெரியவில்லை நம் விழிக்கு
முகவரி இல்லா மடல்நாம் அனுப்புகின்றோம் உம் முகவரிக்கு...

10, செட்டித்தெரு லேன்,
நல்லூர்.

வார்த்தைகள் இன்றி
உம்பிரிவால் தவிக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(10859)(3.6.25)

# தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட இலவச கோதுமை மா நிறுத்தம்

## மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் கூறுகிறார்

நுவரெலியா, நவ.26

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் சிறுவர்களுக்கு சுமார் 50 வருடங்களுக்கு மேலாக வழங்கப்பட்டு வந்த இலவச கோதுமை மா ஒரு சில தோட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் எஸ்.ஜெயபாரதி தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

நாம் அறிந்தவரையில் 195 ஆம் ஆண்டிலிருந்து இந்த இலவச மா சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 10 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு மாதாந்தம் சுமார் ஒன்றரைக் கிலோ மா வழங்கப்படும். ஆனால், தற்போது ஒரு சில தோட்டங்களில் மஸ்கெலியா பிளாண்டேஷன் கம்பனி இலவச மாவை நிறுத்தியிருப்பது அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

விலைவாசி உயர்வுக்கேற்ப ஓரளவு சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும், இதனைவிட பல மடங்கு அதிகமாக தொழிலாளர்கள் மீது வேலைப்பளு சுமத்தப்பட்டுள்ளது. மேலதிக கொழுந்து, அதிகவேலை நேரம் என்று தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்படுகின்றார்கள். எனவே, இந்தச் சம்பள உயர்வு கிடைக்காமலே இருந்திருக்கலாம் என்று தொழிலாளர்கள் சலிப்படைகின்றனர்.

இத்தனை துன்பங்களைத் தாங்கிக்கொண்டு உழைக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்த மாவை நிறுத்துவது எவ்விதத்திலும் ஒரு மனிதாபிமான செயலாக அமையாது.

எனவே, நிறுத்தப்பட்டுள்ள இந்த மாவை குறிப்பிட்ட அந்தக் கம்பனி திரும்பவும் வழங்க வேண்டும்.

இது சம்பந்தமாக தொழிற்சங்க அலுவலகத்தின் ஊடாகக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மலையகத்தில் கடும் பனிமூட்டம்

## சாரதிகளுக்கு பொலிஸ் எச்சரிக்கை

தியத்தலாவை, நவ. 26

மலையகத்தில் மீண்டும் சீரற்ற காலநிலை காரணமாகக் கடும் பனிமூட்டம் நிலவுகின்றது.

பலாங்கொடையிலிருந்து பதுளை - கொழும்பு வீதியில் பெரகலை, ஹல்துமுல்லை, தியத்தலாவை, ஹப்புத்தளை போன்ற பிரதேசங்களிலுள்ள வீதிகளில் பனிமூட்டம் நிறைந்து காணப்படுவதால் இந்த வீதிகளில் வாகனம் செலுத்துவோர் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக ஹல்துமுல்லை - தியத்தலாவை வரையிலான வீதியில் பனி மூட்டம் நிறைந்து காணப்படுவதால் வாகனங்களில் மஞ்சள் நிற பல்புகளை பாவிக்குமாறு வாகனப் போக்குவரத்துப் பொலிஸார் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இந்தப் பனிமூட்டம் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அதிகாலையிலேயே எழுந்து பெருந்தோட்டங்களுக்கு விரையும் பெண்கள் தற்போது சில நாள்களாக நிலவும் கடும் குளிர் காரணமாக வேலைகளுக்குப் போவதில் பின்னடிக்கின்றனர்.

இந்த வீதியில் மலையிலுள்ள கற்கள் விழுவதால் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு ஹப்புத்தளை வாகனப் போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பரீட்சை மதிப்பீட்டில் புதிய மாற்றம்

இறக்காமம், நவ.26

கிழக்கு மாகாணத்தில் இம்முறை நடைபெற்ற மாகாண மட்டப் பரீட்சை விடைத்தாள்களை அந்தப் பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டே மதிப்பீடு செய்யுமாறு சகல அதிபர்களுக்கும் மாகாணக் கல்வியமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளது.

தரம் 9 இற்கான இந்த மாகாணமட்டப் பரீட்சையை மதிப்பீடு செய்யும் பணிகளை வழமையாக வலயக்கல்வி அலுவலகங்களே மேற்கொண்டு வந்தன. இந்தப் பரீட்சைக்கான விடையும், புள்ளித்திட்டமும் வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்று அந்தந்தப் பாடசாலைகளிலேயே மதிப்பிடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் எழுத்துப்பரீட்சைப் புள்ளிகளையும், பாடசாலை மட்ட மதிப்பீட்டு புள்ளிகளையும் வெவ்வேறாகக் குறிப்பிட்டு வலயக் கல்வி அலுவலக கல்வி முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)



பிரிட்டன் தூதர் ஜோன் ரேங்கின் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரமவை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்துப் பேசுகிறார்.

# ஆசிரியையின் கொலைக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

திருகோணமலை,நவ.26

திருகோணமலை, கட்டைபறிச்சான் தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை குரு குலசிங்கம் சிறிவதனி கடமைக்குச் செல்லும் வழியில் மிருகத்தனமாக நேற்றுமுன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியுள்ள சக்திகளை ஊக்குவித்துப் பேணிவரும் அதிகார வர்க்கத்தினரை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த பயங்கரவாத நிகழ்வு ஓர் பெண் ஆசிரியையின் வாழ்வுரிமை மறுத்துள்ளது. அதுமட்டுமன்றி இந்தக் கொலை கல்வியில் முன்னேற துடிக்கும் பழங்குடி மக்களின் பிள்ளைகளின் கல்வி உரிமையை மறுப்பதாகவுள்ளது. இந்த ஆசிரியை சமாதான சூழலில் தனக்கு எதுவும் நடக்காது என்ற நம்பிக்கையுடன் பாடசாலைக்குச் செல்லும் வழியில் கொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணை தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும். கொலையாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ச)

# கொள்ளையிட முற்பட்டோர் ஆயுதங்களுடன் கைது

அலவத்துகொடை,நவ.26

அலவத்துகொடை, மாவத்துகெபால பிரதேசத்தில் வீடொன்றில் கொள்ளையிடுவதற்கு வந்த மூன்று சந்தேகநபர்களை ஆயுதங்களுடன் அலவத்துகொடை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

இரகசிய தகவல் ஒன்றின்படி விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர். இவர்களிடமிருந்து இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, ரவைகள், கூரிய கத்திகள் உட்பட ஆயுதங்களைப் பறிமுதல் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

# கல்வி, விவசாயம், சுகாதார தேவைகளை நிறைவு செய்வதே உண்மை அபிவிருத்தி

## இணைப்பதிகாரி சைபுதீன் உரை

பாலமுனை, நவ. 26

ஒரு பிரதேச அபிவிருத்தி என்பது அப்பிரதேச வாழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளான கல்வி, விவசாயம், சுகாதாரம், சந்தை போன்ற இன்னோரன்ன பல்வேறு தேவைகளையும் நிறைவுசெய்யும் வகையில் அமைய வேண்டும் என்று கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் இணைப்பு அதிகாரி ஏ.சீ.சைபுதீன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அபிவிருத்தியின் ஒரு கட்டமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 66ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வையினால் 3.6 மில்லியன் ரூபா நிதியில் கல்லடிப்பற்று இப்றாஹீம் பள்ளம் வீதி திறந்துவைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தேர்தல் காலங்களில் தலைகாட்டி வாக்குகளைப் பெற்றுச் செல்பவர்கள் சொல்கின்ற அபிவிருத்தி வாக்குறுதிகளில் ஒன்றுகூட நிறைவேற்றப்படாமலேயே எமது பிரதேசம் தொடர்ந்து ஏமாற்றப்படுவது, தொடர் கதையாகவே தொடர்கிறது. இவர்கள் இடையிடையே வந்து வெறும் அறிக்கையை விடுவதனால் மட்டும் எதுவித பயனும் ஏற்படாது.

அண்மையில் அட்டாளைச்சேனை சந்தை அமைத்தலில் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலின் அழகிய தோற்றம் மறைபடுவது நல்லதல்ல என்ற ஒரே காரணத்துக்காக பிரதேச மக்களிடையே சிறு கருத்து முரண்பாடு நிலவியபோது அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை இரு சாராரையும் ஒற்றுமையாக இணைப்பதற்காக பல கூட்டங்களை நடத்தினார்.

இறுதியாக பிரதேசசபைத் தவிசாளர் உட்பட அரச உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் விட்டுக் கொடுப்புகளுடன் எமது பெரிய பள்ளிவாசல் மறையாதவாறு சந்தை அமைக்கும் திட்டத்துக்கான ஏகமானதான தீர்மானம் எமது அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பையின் அயராத முயற்சியினாலும் சிறந்த அணுகுமுறையினாலுமே பெறப்பட்டது.

அதுவே எம் பிரதேசத்தை மேலும் அபிவிருத்தி அடைய உத்வேகம் தந்திடும் புத்திசாலிகளின் செயற்பாடாகும்- என்றார்.

# மட்டக்களப்பில் வெள்ளத்தால் நெற்செய்கை பாதிப்பு

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் டாக்டர் ஆர்.ருஷாங்கன் தெரிவித்துள்ளார்.

பெரும்போக விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சில தினங்களில் இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து குடலைப்பருவ நெற்பயிர்கள் வெள்ளத்துள் மூழ்கி இருந்தால் அவைகள் அழிந்துவிடும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

# எம்.பிக்கள் தாக்கப்பட்டமை ஜனநாயக விரோதச் செயல்

## மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

நுவரெலியா, நவ.26

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கிய சம்பவமானது கண்டிக்கத்தக்க - ஜனநாயக விரோதச் செயலாகும். இந்தச் செயலானது சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்பாக ஏற்பட்டிருந்த தவறான கருத்துகளுக்கு மேலும்வலுவூட்டுவதாக அமைந்துள்ளது என்று மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கே.கே.பியதாஸ தெரிவித்தார். மத்திய மாகாண சபை எதிர்கட்சி தலைவரின் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி வரவு - செலவுத்திட்ட உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தபோதும் சபாநாயகரின் முன்னிலையில் எதிர்க் கட்சியினரை ஆளும்தரப்பினர் தாக்கியமை ஜனநாயகத்தின் தாய்வீடான நாடாளுமன்றத்திற்கு சர்வதேச மட்டத்தில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் செயலை எந்தவொரு ஜனநாயகவாதியும் ஏற்றுக்கொள்ளமாட்டார். எனவே, நாம் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார். (ச)

# நாடாளுமன்றத்து மோதல் காட்சி பொதுநலவாய அமைப்பையும் எட்டியது

கொழும்பு,நவ.26

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதற்கு முன்னரும் நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்றச் சங்கத்தின் பொதுச் செயலாளர் காலாநிதி வில்லியம் எப்.ஷிஜா வுக்கு முறைப்பாடு ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில்உள்ள விடயங்களை ஆராய்ந்து உரிய தரப்பினர் மற்றும் நிறுவனங்களின் கவனத்துக்கு கொண்டு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாடாளுமன்ற மோதல் குறித்து, ஐ.நா. பொதுச் செயலாளர் தொடர்ந்து பொதுநலவாய நாடுகளுக்கு இப்போது முறையிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

''வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் வெளிப்புற நுழைவாயிலில் பாதுகாப்புத் தரப்பினரைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை சோதனைக்கு உட்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. இதன் போது அவர்களிடம் இருந்த ஆவணங்கள் சில கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட எந்தவொரு ஆவணமும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை. வரவு - செலவுத் திட்டம் வாசிக்கப்படும் போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஆளுங்கட்சி உறுப்பினர்களே தாக்கினர்'' என்றுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக ஜெனீவாவிலுள்ள சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் மற்றும் பிரிட்டனில் பொதுநல வாய நாடாளுமன்ற சங்கத்திடம் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், மனித உரிமை விடயங்களுக்குப் பொறுப்பானவருமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அதையடுத்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-சி)

## தொடங்கொட பிரதேச சபை பட்ஜெட் இரண்டாவது முறையும் தோற்கடிப்பு

கொழும்பு,நவ..26

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்திற்கு உட்பட்ட களுத்துறை - தொடங்கொட பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது முறையாகவும் நேற்றுமுன்தினம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் வரவு- செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்த காரணத்தினால் அது தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று களுத்துறை - தொடங்கொட பிரதேச சபையின் தலைவர் ஜகத் கீர்த்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

13 உறுப்பினர்கள் அடங்கிய தொடங்கொட பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எட்டு உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று உறுப்பினர் களும் சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவரும் பிரதேச சபையின் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் ''சக்கரம்'' கலை, இலக்கிய, ஆன்மிக காலாண்டிதழின் முதலாவது இதழ் வெளியீட்டு விழாவில் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கத்திடமிருந்து இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் க.கணபதிப்பிள்ளை சிறப்புப் பிரதி பெறுகின்றார். (236)

## போலிக் கடவுச் சீட்டுகள் தயாரித்த மூவர் கைது

கொழும்பு,நவ.26

போலிக் கடவுச்சீட்டுகளை தயாரித்து விற்பனை செய்த மூவரை கொழும்பு இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஒரு கடவுச் சீட்டைத் தயாரிப்பதற்காக 12 லட்சம் ரூபா வரை பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது என்று இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் முகத்துவாரம் மற்றும் பொல்கஹவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களிடமிருந்து பத்து போலி கடவுச் சீட்டுகளும் போலி விசாக்களும் மேலும் பல சான்றிதழ்களும் இலஞ்ச ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## டிப்பர் வாகனம் ஆற்றில் வீழ்ந்தது

கொழும்பு,நவ.26

தந்திரிமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகொட பகுதியிலுள்ள மல்வத்து ஓயாவுக்கு குறுக்கான பாலப் பகுதியில் மண் ஏற்றிவந்த டிப்பர் வாகனம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாதையைவிட்டு விலகி ஆற்றுக்குள் வீழ்ந்ததால் அதன் சாரதி ஆற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

காலி பகுதியைச் சேர்ந்த எம்.ஜீ.லால் சந்திர (வயது-68) என்னும் நபரே ஆற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார்.

வீதி புனரமைப்புக்கென கிறவல் மண் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இந்த டிப்பர் வாகனம், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் வீழ்ந்துள்ளது. (ச)

## பாலியல் இணையம் நடத்துவோரை கண்டறிய உதவி கோரும் பொலிஸ்

கொழும்பு,நவ.26

உள்ளூர் ஆண்களும் பெண்களும் தோன்றும் பாலியல் இணையத்தளங்களை இயக்குபவர்களைக் கண்டறிவதற்கு இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர் என்று பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் தெரிவித்தது.

ஆபாச இணையத்தளங்கள் பல வற்றை இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு தடை செய்துள்ள போதிலும் இத்தகைய இணையத்தளங்களை இயக்குபவர்கள் பொதுவாக வெளிநாடுகளிலிருந்து செயற்படுவதால் அவர்களை கண்டறிவதற்கான தொழில்நுட்பம் இந்த ஆணைக்குழுவிடம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

**ஈரவிழிகளுடன்**
**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் தம்பிஐயா
பொன்னம்பலம்
திதி: திருதியை
மண்ணில்
22 ★ 11 ★ 1932
விண்ணில்
26 ★ 11 ★ 2003

அன்புடனும் பாசத்துடனும் எம்மை அரவணைத்து
நல்வழிப்படுத்தி எங்களை வாழ வைத்த குடும்பத் தெய்வமே
நீங்கள் சிவபதமடைந்து எட்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் திருவுருவம் எங்கள் இதயங்களில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(10391)(2-6-9)

**6 ஆம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம்
11
09
1931



மறைவு
02
12
2005

அமரர் ஐயாத்துரை பூபாலசிங்கம்
26.11.2011

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எமது உள்ளத்தில் பூத்திருக்கும் அப்பாவே
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இல.11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு
20
03
1963



உதிர்வு
26
11
2008

அமரர் சாந்தி ஜெயசீலன்

எம் கண்முன்னே நிழலாடுது உங்கள்
நினைவுகள்
நிழலை நிஜமாக்க நீங்கள் மீண்டும் வருவீரோ
எங்கள் கண்ணீர்க் காணிக்கையை
உங்கள் பாதத்தில் வைத்து ஆத்மா
சாந்தி அடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.
எப்போதும் உங்கள் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்
வைரமுத்து
குலவீரசிங்கம்
(ஓய்வு பெற்ற புகையிரத
நிலைய அதிபர்)
தென்மராட்சி வலயக்
கல்வி அலுவலகத்தின்
வலயக் கல்விப்
பணிப்பாளர்
கு.பிரேமகாந்தன்
அவர்களின் அன்புத் தந்தையின் 31 ஆம் நாளினை
நினைவுகூருவதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் அவை,
(10632)(2-6-9)
யா/வரணி மகாவித்தியாலயம்,வரணி.

**வீடு விற்பனைக்கு**

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதியில் 1 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434
(10734)(6-3)

**காணி விற்பனைக்கு**

கைதடி, நுணாவில் வைரவர் கோயிலடிச் சந்தியில் கண்டி றோட்டுக்கு அண்மையாக இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

# கன்னியாகுமரிக் கடலில் காற்றழுத்தம்: தமிழகத்தில் பரவலாகத் தொடரும் மழை

சென்னை,நவ.26

கன்னியாகுமரிக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் தமிழகத்தின் அனேக பகுதிகளில் கன மழை மற்றும் பெய்யும் வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் ஏற்கனவே ஒரு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை நிலவி வருகிறது. இது மேலும் வலுவடைந்து மேற்கு நோக்கி நகரத் தொடங்கியிருப்பதால் கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.



தலைநகர் சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் விடிய விடிய கனமழை கொட்டித் தீர்த்தது. சென்னையில் விடாமல் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் நகரமே வெள்ளக் காடாகியுள்ளது. வீதிகள் பல மழை நீரில் மிதந்து வருகின்றன. பல வீதிகள் மேலும் மோசமடைந்துள்ளன.

இந்த மழை மேலும் வலுவடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதால், 13 மாவட்டங்களில் நேற்று பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

இதே போல புதுவை, காரைக்காலிலும் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.


இந்த நிலையில் குமரிக் கடல் பகுதியில், பாக் ஜல சந்தியில், புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மையத் தரப்பில் கூறுகையில், இந்த புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை வட மேற்குத் திசையில் நகர்ந்து வருகிறது. இதனால் தான் கனமழை பெய்து வருகிறது.

மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிப்பு கன மழை காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது.

சென்னையில் திருவான்மியூர், பெசன்ட் நகர், மடிப்பாக்கம், அம்பத்தூர், திருவொற்றியூர், சாந்தோம் உள்ளிட்ட பல பகுதிகளில் வீதிகள் மோசமாகச் சேதமடைந்துள்ளன. பல இடங்களில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது.

விருத்தாச்சலத்தில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாக அறுந்து விழுந்திருந்த மின் கம்பியை மிதித்ததால் உயிரிழந்தார். அவருடன் வந்த மாடுகளும் உயிரிழந்தன. (வ)



2ஜி ஊழலில் வலுவான ஆதாரங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள்

## கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்புடன் கட்டப்பட்டுள்ளது

### அப்துல் கலாம்

டில்லி, நவ.26

இந்தியாவின் தமிழ்நாடு மாவட்டத்தில் அமைந்துள்ள கூடங்குளம் அணுமின் நிலையம் உச்சக்கட்ட பாதுகாப்பு முன்னேற் பாடுகளுடனே அமைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற பேரிடர் அபாய குறைப்பு: வறுமை ஒழிப்புக்கான முக்கிய மாற்று வழி என்ற கருத் தரங்கில் உரையாற்றிய அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

முன்னதாக நவம்பர் மாத ஆரம்பத்தில் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு வருகை தந்திருந்தகலாம், அணு உலையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நிறைவான கருத்துகளைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அணு சக்தியே தூய்மையான மூலாதாரம் என்றும் அப்போது அவர் குறிப்பிட்டிருந்தார். ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலைய விபத்துக்குப் பின் அணு உலையின் பாதுகாப்பு குறித்து அதிகாரிகள் மக்களிடையே எவ்வித விழிப்புணர்ச்சியை அளித்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளவுமே தான், அங்கு சென்றதாகவும் கலாம் தெரிவித்தார்.

பாதுகாப்பு அம்சங்களின் அடிப்படையில், கூடங்குளம் அணுமின் நிலையம் உச்சபட்ச பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் முன்னேறிய தொழில்நுட்ப முறையிலேயே அணு உலை வடிவமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (வ)



150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளியில் ஜொலிக்கும் சென்னை உயர்நீதிமன்றக் கோபுரங்கள்.

## மாவோயிட்டு தலைவர் சுட்டுக்கொலை

மேற்கு வங்காளத்தில் மாவோயிஸ்டு முக்கிய தலைவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். மேற்கு வங்காள மாநிலத்தில் மாவோயிஸ்ட்டு முக்கிய தலைவர் கிஷென்ஜி மேற்கு மிட்னாப்பூர் மாவட்டம் புரிசோலே காட்டுப்பகுதியில், குஷ்போனி என்ற இடத்தில் முகாமிட்டு இருப்பதாக தீவிரவாதிகள் ஒழிப்பு பொலிஸ் படையினருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

உடனடியாக அந்தப் பகுதிக்கு நேற்று முன்தினம் பொலிஸார் விரைந்தனர். அப்போது பொலிஸ் படையினர் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.கிஷென் ஜிக்கு மாவோயிஸ்ட்டுத் தீவிரவாதிகள் 4 அடுக்கு பாதுகாப்புக் கொடுத்து இருந்தனர். இதனைப் பொலிஸார் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினர். (வ)

## சிதம்பரத்தை பதவி நீக்குமாறு பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்து

மதுரை, நவ. 26

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழலில் ப.சிதம்பரம் முக்கிய பங்கு வகித்துள்ளார் என்று வெளிப்படையாகத் தெரியவந்துள்ளதால், அவரை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து காங்கிரஸ் கட்சி நீக்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

மதுரையில் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழலில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் முக்கிய பங்கு வகித்துள்ளார் என்று வெளிப் படையாகத் தெரியவருகிறது. எனவே, அவர் தமிழகத்துக்கு வரும்போது, அவருக்கு எதிராக பா.ஜ.க. இளைஞரணி சார்பில் போராட்டங்கள் நடத்தப்படும். அமைச்சரவையிலிருந்து அவரை காங்கிரஸ் நீக்க வேண்டும். - என்றார்.

## படகு கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு

நாகை,நவ.26

நாகை மாவட்டத்துக்கு அருகில் கடல் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்து மீனவர் ஒருவர் பலியானார். நாகை மாவட்டம் வேளாங் கண்ணியை அடுத்த செறுதூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் என்பவர், மேலும் 3 மீனவர்களுடன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார். காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக கடல் சீற்றமாக இருந்ததால், அவர்களது படகு கவிழ்ந்தது. (வ)

## சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவரான இந்திய அமைச்சர் சரத் பவாருக்கு 'அறை'

இந்திய மத்திய அமைச்சரும் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவருமான சரத் பவார் மீது நபர் ஒருவர் நேற்று முன்தினம் தாக்கியுள்ளார்.

இந்திய தலைநகர் புதுடில்லியில் நடந்த நிகழ்வொன்றில் விவசாய நுகர்வோர் விவகார உணவு மற்றும் பொது விநியோக அமைச்சரான சரத் பவார் (வயது - 71) பங்குபற்றியபோது அவரின் கன்னத்தில் இந்தநபர் அறைந்தார்.

ஹர்வீந்தர் ராம் சிங் எனும் இந்நபரே, ஊழல் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் தொலைத் தொடர்புகள் அமைச்சர் சுக்ராம் மீதும் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினார் என்று நம்பப்படுகிறது.

சீக்கியரான அந்த இளைஞர், சீக்கியர்களின் ஆடையுடன் அணியும் சிறிய கத்தியொன்றையும் வைத்திருந்தார். தான் அமைச்சரை அறைவதற்காக திட்டமிட்டு அங்கு வந்தார் என்றும் அவர் கூறினார்.

இந்தத்தாக்குதலினால் அமைச்சர் சரத் பவார் நிலை தடுமாறினாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு நிகழ்வு நடைபெற்ற இடத்திலிருந்து வெளியேறிச் சென்றார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சரத் பவார், இது முட்டாள்தனமான நடவடிக்கை என்று கூறினார்.

அந்த இளைஞர் மீது வழக்குத் தொடரப்படுமா என்று கேட்டபோது, அந்த விவகாரத்தை பொலிஸார் கையாள்வர் என்று அவர் பதிலளித்தார்.(வ)

### பவாரை தாக்கியவருக்கு 14 நாள் நீதிமன்றக் காவல்

டில்லி, நவ.26

மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்குமாரை கன்னத்தில் அறைந்த ஹர்விந்தர் சிங்கை 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதிவரை அவரை காவலில் வைக்குமாறு மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட் ஜஸ்ஜீத் கௌர் உத்தர விட்டார். பவாரை கன்னத்தில் அடித்ததால் கோபத்தில் இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள், ஹர்விந்தர் சிங்கை நீதி மன்றத்தில் இருந்து வெளியே அழைத்துவரும் போது அவரைத் தாக்க முயன்றனர்.(வ)

## தலைவர்களின் பாதுகாப்பை அதிகரிக்க மத்திய அரசு முடிவு

### சரத்பவார் மீது தாக்குதல் எதிரொலி

டில்லி, நவ. 26

விலைவாசி உயர்வை கண்டித்து சரத்பவார் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்கதை ஆகிவிடுமோ என்று கருதி அரசியல்கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், மற்றும் முக்கியஸ்தர்களுக்கு பாதுகாப்பை அதிகரிப்பது பற்றி மத்திய உள்துறை ஆய்வு செய்து வருகிறது.

சரத்பவார் தாக்கப்பட்டது, அரசியல் கட்சித் தலைவர்களும் கடும் அதிர்ச்சியையும், கலக் கத்தையும் ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே ஊழலுக்கு எதிராக மக்களிடம் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விலைவாசி உயர்வை கண்டித்து சரத் பவார் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்கதை ஆகிவிடுமோ என்று மத்திய அரசு கருதுகிறது.

இதனால் அரசியல் கட்சித் தலைவர்கள், மத்திய மந்திரிகள், மற்றும் முக்கியஸ்தர்களுக்கு பாதுகாப்பை அதிகரிப்பது பற்றி மத்திய உள்துறை ஆய்வு செய்து வருகிறது. (வ)

# பணிப்பெண் என்ற போர்வையில் வீடுகளில் திருடிவந்த பெண் மாத்தளையில் கைது

கொழும்பு, நவ. 26

செல்வந்த வீடுகளில் பணிப்பெண்ணாக வேலைக்குச் சேர்ந்து சிறிதுகாலம் பணியாற்றிய பின் குறித்த வீடுகளிலிருந்து பணத்தை திருடிக் கொண்டு தலைமறைவாகும் கில்லாடிப் பெண்ணொருவரை மாத்தளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்துடன் அவரிடமிருந்து 3 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா பணத்தையும் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட பணத்தில் ஆயிரத்து 50 அமெரிக்க டொலர்களும் 250 குவைத்தினார்களும் இருந்தன. குறித்த பெண் நாட்டில் பல பாகங்களிலும் தன் கைவரிசையைக் காட்டியுள்ளார். இவரிடம் பணத்தையும் பொருள்களையும் பறிகொடுத்தவர்களின் புகாரின் பேரில் நீண்டகாலமாக இந்தப் பெண்ணை வலை வீசித் தேடிய பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

இவரை விசாரணைக்கு உட்படுத்திய பின் பலாங்கொடையில் உள்ள வீடொன்றின் கழிவறைக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பணமும் பிடிபட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டு நிறுவனமொன்றில் பணியாற்றும் உக்குவல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் திருடிய பணமே இவ்வாறு மீட்கப்பட்டது எனப் பொலிஸார் கூறினர்.

(வ-04)

## தவறிவிட்டது

கைதடி மத்தி, கைதடியை சேர்ந்த செல்லன் வீரசிங்கம் என்பவரது தே.அ.அ (621313096V) மற்றும் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரங்கள் என்பன கைதடிப் பகுதியில் 09.11.2011 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

செல்லன் வீரசிங்கம், கைதடி மத்தி, கைதடி.
T.P : 0774407938 (10861)(6.8)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

## ஐடியல் கேட்டின்

வழங்கும் அழகிய புதிய டிசைன்கள்






Vertical Blinds

கற்பகப் பிள்ளையார் கோயில் அருகில்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

T.P: 0773013239,0779947466

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை சத்யசாயி சேவா நிலையத் தினரின் பஜனை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. திருமதி இராஜேந்திரன் - ஜனதா
தம்பதியரின் அன்பு மகன்

### யதுட்ஷன்



யா/ ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவருக்கு கல்வியூட்டிய பாடசாலை அதிபர் - ஆசிரியர்களுக்கும் அன்னம் இன்ஸ்ரிரியூட் ஆசிரியர்களுக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

16, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

அப்பம்மா,
தாத்தா, அம்மம்மா

## சேவைநலன் பாராட்டு விழா

### செல்வி சந்திரகுமாரி கதிரவேலு

(ஆசிரியர், யா/நவாலி மகாவித்தியாலயம்)



எமது பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற தங்களின் உன்னத சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் நன்றிகளையும் கூறி மகிழ்வடைகின்றோம்.

அதிபர் , ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/நவாலி மகாவித்தியாலயம்

0809 3.6.25

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி யோகம்மா வேலாயுதபிள்ளை



குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து அன்புடனும் பண்புடனும் எமையெல்லாம் வாழ வைத்து வழிநடத்தி வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட எம் அருமை அப்பம்மாவே உமது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சீரடி சாயி நாதரை வேண்டுகிறோம்.

சீரடி சாயி மந்திர்
3141, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பா.ராகவன்
[பேரன்]

0807 3.6.25

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இணுவில் கிழக்கில் உள்ள மூக்கறையன் எல்லையும் வரலன் தோட்டமும் வீடும் (நிலப் பரப்பு 3½) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779745064 (10862)(6.8)

## திருமண சேவை

76 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 15¾ பாவமுடைய பெல்ஜியம் பிரஜாவுரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

67 இல் பிறந்த 8இல் செவ்வாய் உள்ள 45 கிரக பாவம் உடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மண மகள் தேவை.

75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 26½ பாவமுடைய BBA, MSc Accountant க்கு அரச பணி புரியும் மணமகள் தேவை.

தொடர்பு:
பாலகிருஷ்ணன் திருமண சேவை,
இல: 171/7, மனோன்மணி அம்மன் கோவிலடி, நல்லூர்.
TP: 0776070862
(10806)(6.8)

## கடை வாடகைக்கு

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் தியேட்டருக்கு அருகில் சிறிய கடையொன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0789132306

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்டபுறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து (புறொயிலர் 450/- மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம்சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Pure Breed Greatdane குட்டிகள் Certificate களுடன் விற்பனைக்கு உண்டு.
கட்டிபாம் சென்ரர்,
வட்டுக்கோட்டை, தொ.பே.0778996085

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Pure Breed German Shepherd குட்டிகள் Certificate களுடன் விற்பனைக்கு உண்டு.
நல்லூர் பாம்சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் வயோதிபரைப் பராமரிப்பதற்கு ஆள்தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்.
சம்பளம் மாதம் 10,000/= வழங்கப்படும்
தொடர்பு: 0779004204

## VAN விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
Toyota Town ACE 50 - xxxx
வான் உடன் விற்பனைக்கு
தொடர்பு: 0777319264

## VACANCIES

- Office Administator (Female)
  Degree Holder
  Computer Literacy
  Knowledge of Tamil & English a must
  Sinhala an added advantage
- Sales Personal ((Male/Female)
  (Permanant - Part time-Free large)
  Minimum Earnings 15K

Walk in Intervieus 27/11/2011 and 28/11/2011
(10.00 am to 4.00 pm)

ASHOKAVATIKA HOLIDAYS
No. 49, 51, Amman Road, Nallur, Jaffna.
0759682682, 0759360370

(10805)(6.8)

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 15.11.2011 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமான **தியாகராஜா ஸ்ரீதரன்** அவர்களின் துயர்பகிர்வு நிகழ்வு கொழும்பில் வசித்துவரும் அன்னாரின் சகோதரி ஸ்ரீஸ்வரி (பபி) யுடன் நாளை (28.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது நீர்வேலி மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

கஷ்டப்பட்டவர்கள் எல்லோருக்கும்
கேட்டபோது இல்லை என்று சொல்லாமல்
வாரி வழங்கிய வள்ளலே - உன்னை
நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே
நீங்காத துன்பம் பெருகுதே
அணைந்த தீபமாய் ஆகிப் போனாயோ
நம் அனைவரையும் அழ வைத்து அகன்ற தேனோ

இராச வீதி,
நீர்வேலி மேற்கு.

தண்டபாணி(பாணி)
(மைத்துனர்)
0771346040

## நீங்கா நினைவில்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.09.1909 மறைவு 07.12.2010

திதி: துதியை [26.11.2011]
அமரர் **வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**
(Rtd.P.W.D. OVERSER)



தோற்றம் 22.06.1922 மறைவு 15.12.2002

திதி: ஏகாதசி [6.12.2011]
அமரர் **சுப்பிரமணியம் தெய்வானைப் பிள்ளை**
(தங்கம்மா)

எங்கள் பாசத்துக்குரிய ஐயா, அம்மா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது
மறையா நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காகத் தினமும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உங்களின்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

புலோலி தெற்கு,
புலோலி, பருத்தித்துறை.

[சி/8159](3.6.25)

# எங்கள் பகுதியில் ஒரு குண்டு வீழ்ந்தாலும் சியோல் அதிபர் மாளிகை தரைமட்டமாகும்

## தென்கொரியாவுக்கு வடகொரியா மிரட்டல்

சியோல், நவ. 26

எங்கள் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில், ஒரு குண்டு வெடித்தால் கூட, தென் கொரிய அதிபரின் மாளிகையைத் தரை மட்டமாக்கிவிடுவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் இருந்து வருகின்ற நிலையில் கடந்தாண்டு நவம்பரில், யெயோன்பயோங் என்ற தீவில், வடகொரிய கடற்படை நடத்திய தாக்குதலில், தென்கொரியக் கப்பல்கள் இரண்டு மூழ்கடிக்கப்பட்டதுடன் தென்கொரியாவைச் சேர்ந்த இரண்டு கட்டுமானத் தொழிலாளர்கள் இறந்தனர். இந்தச் சம்பவத்தையடுத்து இரு தரப்புக்கும் இடையேயான உறவு, மேலும் மோசமடைந்தது.

இந்நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, தென்கொரிய கடற்படையினர், யெயான்பயோங் தீவுப் பகுதியில், நேற்று முன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர். இதற்கு, வடகொரியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வடகொரிய மக்கள் ராணுவத்தின் தலைமை அதிகாரி கூறுகையில், ''எங்கள் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில், தென்கொரிய ராணுவத்தினரின் ஒரு குண்டாவது வந்து விழுமானால், அதை நாங்கள் பொறுத்துக் கொள்ளமாட்டோம். இதற்குப் பதிலடியாகத் தென்கொரியாவில் உள்ள அதிபர் மாளிகையைத் தரைமட்டமாக்குவோம். கடல் நெருப்பு என்ற பெயரில், எங்களின் தாக்குதல் மிகவும் தீவிரமாக இருக்கும்'' என்று எச்சரித்துள்ளார்.

யெயோன்பயோங் தீவு, சர்ச்சைக்குரிய பகுதியில் அமைந்திருப்பதாகக் கூறி, இரு நாடுகளுமே அதற்கு உரிமை கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

# லிபியக் கிளர்ச்சியாளர்களால் 7,000 பேர் சிறை வைப்பு

## பான் கீ மூன் தெரிவிப்பு



திரிபோலி, நவ.26

லிபியாவின் முன்னாள் கிளர்ச்சியாளர்களால் சுமார் ஏழாயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

லிபியாவில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் இவர்கள் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெண்கள், ஆண்களின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் வயது வந்தவர்களுடன் சிறுவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறிய பான் கீ மூன் ,நிறத்தின் அடிப்படையில் சிலரை இலக்கு வைத்து துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறித்தும் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி உள்நாட்டு யுத்தம் நிலவிய காலப் பகுதியில் மும்மர் கடாபியின் ஆதரவுப் படையினர்கள் மற்றும் முன்னாள் கிளர்ச்சியாளர்களால் யுத்தக் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ந)

# அமைதிப் போராட்டங்களுக்கு மியன்மாரில் இனி அனுமதி

யாங்கூன் , நவ. 26

அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துவதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கும் சட்ட மசோதா மியன்மார் நாடாளுமன்றில் முதல் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மியன்மாரில் கடந்த 50 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட மக்கள் போராட்டங்கள் ராணுவ ஆட்சியாளர்களால் நசுக்கப்பட்டன.

மியன்மார் அரசின் இந்தப் போக்கைக் கண்டித்து, சர்வதேச நாடுகள் மியன்மாரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இதனையடுத்து உலக நாடுகளின் நடவடிக்கைக்குப் பயந்த மியன்மார் அரசு, சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இதன் ஒரு பகுதியாக போராட்டங்களை நடத்துவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கும் சட்ட மசோதாவை நாடாளுமன்றில் நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அயே மாவுங் கூறியதாவது;

பொதுமக்களைப் போராட்டம் நடத்த அனுமதிக்கும் மசோதா நாடாளுமன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, பொதுமக்கள் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தலாம். போராட்டம் நடத்துவதற்கு ஐந்து- நாள்களுக்கு முன், அரசிடம் முறையாக அனுமதி பெற வேண்டும். அதேநேரத்தில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மருத்துவமனைகளில் போராட்டம் நடத்த அனுமதி இல்லை. ஆனாலும், இந்த மசோதாவுக்கு அதிபர் தியென் சென்னிடம் இன்னும் ஒப்புதல் பெறவில்லை. அவர் கையெழுத்திட்டபின், இந்த மசோதா நடைமுறைக்குவரும். இவ்வாறு அயே மாவுங் கூறினார்.

# செயற்கைப் பனியை உருவாக்க ஆஸ்திரேலியா முயற்சி

சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் புவி வெப்பநிலை உயர்வு காரணமாக ஆஸ்திரேலிய மலைப்பகுதிகளில் பனிக்காலம் தாமதமாகிறது. இதனால் இயந்திரங்கள் மூலம் செயற்கையாகப் பனி உருவாக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆவுஸ்திரேவில் வெப்பம் அதிகம் இருப்பதால் செயற்கை பனி உருகி விடுகிறது. இதனால் புனிச் சறுக்கு போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இது பற்றி பனிச்சறுக்கு விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் கூறும் போது, புவி வெப்பநிலை உயர்வு, சுற்றுச் சூழல் பாதிப்பால் பனி உருவாவது தாமதமாகிறது. அனேகமாக டிசெம்பரில் தான் பனி உருவாகும் என்று தெரிகிறது. அதற்குப் பின்னரே போட்டிகள் நடத்த முடியும்.

எனவே, ஆஸ்திரேலியாவின் பனிச்சறுக்குப் போட்டிகள் நடக்கவுள்ள சரிவுப் பகுதியில் இயந்திரங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட பனி, திட்டு திட்டாகத் தெரிகின்றன என்றார். (ந)



வியட்நாம் வந்திருந்த இஸ்ரேல் அதிபர் ஷிமான்பயர்ஸை (இடது), அந்நாட்டு அதிபர் டுராங் டான்சாங்க், தலைநகர் ஹொனாய் நகர் அதிபர் மாளிகையில் வரவேற்றார்

# இராணுவ ஆட்சிக்கு எதிராக எகிப்தில் போராட்டம் நீடிப்பு

கெய்ரோ , நவ. 26

இராணுவ ஆட்சியாளரைப் பதவி விலகக்கோரி எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் மீண்டும் போராட்டம் நடத்தப்பட்டது. இதனையடுத்து போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் முப்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக நேற்றுமுன்தினம் இரவு பல்லாயிரக்கணக்கான மக்கள் தக்ரீர் சதுக்கத்தில் திரண்டார்கள். அந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் மீண்டும் கடும் மோதல் மூண்டது.

நீடித்துவரும் போராட்டங்களையடுத்து எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாக விருந்த நாடாளுமன்றத் தேர் தலை ஒத்திவைக்குமாறு உள்ளூர் அமைச்சர் மன்சூர் எல்- இசாவி அறிக்கையொன்றின் வாயிலாக இராணுவ நிர்வாகப் பேரவையைக் கேட்டுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இத்தகவலை நேற்று முன்தினம் அல்-ஜசீரா தொலைக்காட்சி வெளியிட்டது. எனினும், அமைச்சரின் தேர்தல் ஒத்திவைப்புக் கோரிக்கை உடனடியாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

பல தசாப்தங்களுக்குப் பின்னர், சுதந்திரமாக வாக்களிப்பதற்கான எகிப்திய முதல் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென ஏறகனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# மெக்சிக்கோவில் 17 சடலங்கள் மீட்பு

குலியாகேன் , நவ. 26

மெக்சிகோவில் இரண்டு வாகனங்களிலில் இருந்து கருகிய நிலையில் 17 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மெக்சிகோவின் அன்டோனியோ ரொசேல்ஸ் பகுதியில்,எரிந்த நிலையில் கிடந்த இரண்டு வாகனங்களில் 17 பேர் கருகிக் கிடந்தனர். இவர்களில் சிலரது கைகள் விலங்கிடப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் போதை கடத்தல் கும்பங்களுக்கிடையே நடந்த சண்டையின் காரணமாக நடந்துள்ளதாக, சினலோவா ஆளுநர் மரியோ லோபஸ் தெரிவித்துள்ளார். (ந)

# கடும் சூறைக் காற்றால் பறந்தது விமான நிலையக் கூரை

பீஜிங், நவ. 26

சீனாவில் வீசிய கடும் சூறை காற்றில், விமான நிலையத்தின் கூரை பறந்தது. எனினும், இந்தச் சம்பவத்தில் யாரும் பாதிக்கப்படவில்லை.

சீனாவின் பீஜிங் நகரில் கடும் சூறாவளிக் காற்று வீசியது. இதனால், பீஜிங் விமான நிலைய மூன்றாவது முனையத்தின் கூரை பறந்து ஓடுபாதையில் வீழ்ந்தது. இந்தச் சம்பவம் நடக்கும் போது, அந்தப் பகுதியில், விமானங்கள் எவையும் இல்லாததால் யாருக்கும் சேதம் இல்லை. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இதே, விமான நிலையத்தில், 200 சதுர மீற்றர் கூரை காற்றால் சேதமடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு முறை இந்தக் கூரை சேதமடைந்துள்ளதால் வேறு கூரை போடலாமா? என்பது குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். (ந)

# சோமாலிய தீவிரவாதிகளின் தளங்கள் மீது கென்ய போர் விமானங்கள் கடும் தாக்குதல்

மொகாதிசு , நவ. 26

சோமாலியாவில் உள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளின் மூன்று தளங்கள் மீது அடையாளம் காணப்படாத ஜெட் போர் விமானங்கள், நேற்றுமுன்தினம் உக்கிரத் தாக்குதலை மேற்கொண்டன. இந்தத் தீவிரவாதிகள்மீது அயல் நாடான கென்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது என சோமாலிய மக்களும் படையினரும் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

''படாடி நகரைச் சூழவுள்ள அல்-ஷபாப் இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தின் மூன்று தளங்கள் மீது ஜெட் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.அதனால் அதிர்ச்சியடைந்த நாம் நகரைவிட்டு ஓடினோம். தற்போது நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது'' எனத் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலை சோமாலிய அரச படைச் சிப்பாய் ஒருவர் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். எனினும், கென்ய விமானப்படையால்தான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் உறுதிப்படுத்தவில்லை.

இது குறித்து அல்-ஷபாப் குறிப்பிடுகையில், ''அந்த ஜெட் விமானங்கள் மூலம் ஏழு குண்டுகள் வீசப்பட்டன. எனினும், உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. இதற்கு முன்னரே எமது போராளிகள் இந்தப் பகுதியைவிட்டு வெளியேறிவிட்டார்கள்'' எனத் தெரி வித்தது. (ந)

# ஏமன் அதிபர் சலே பதவி விலக ஒப்புதல்

ரியாத் , நவ. 26

ஏமன் நாட்டில் கடந்த 33 ஆண்டுகளாக அதிபராக இருந்த அலி அப்துல்லா சலேக்கு எதிரான மக்களின் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், அவர் பதவிவிலக ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து, எதிர்க்கட்சி தலைவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ரியாத் அரண்மனையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் சவுதி மன்னர் அப்துல்லா முன்பாக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, அதிபர் பதவியில் இருந்து சலே உடனடியாக விலகி, பொறுப்புகளை துணை ஜனாதிபதி அப்ரப்பு மன்சூர் ஹாடியிடம் ஒப்படைத்தார்.

எனினும், எதிர்க்கட்சிகளும் இணைந்த பொதுவான அரசு அமையும் வரை அதிபர் பதவியில் சலே நீடிப்பார். இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த போராட்டக்காரர்கள் சலே முழுப் பொறுப்புகளையும் விட்டு ஒதுங்க வேண்டும், அவர் மீதான் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டுமெனக் கூறிப் போராட்டத்தைத் தொடர்கின்றனர். (ந)

உதயன்
26 நவம்பர் 2011 சனிக்கிழமை

# யாழ்.மத்தியஸ்தர் அணியுடனான ஆட்டத்தில் வென்றது சென்.ஜோன்ஸ் ஆசிரியர் அணி

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி பெற்றது.



நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் இடம்பெற்றது.

இரண்டு அணி வீரர்களும் தத்தமது அணி வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் களம் இறங்கியதால் முதல் பாதி ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரண்டு அணி வீரர்களும் மிகுந்த உற்சாகத்தோடு எதிர் அணி வீரர்களின் களத்தடுப்பையும் மீறி கோல் பரப்பினுள் நுழைந்தனர். எனினும் பின்கள வீரர்கள் இந்த முயற்சியை முறியடித்தனர். முதல் பாதி ஆட்டம் முடிவதற்கு 2 நிமிடம் இருக்கையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வீரன் வினோத் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அணியினர் தமது ஆட்டத்தைத் துரிதப்படுத்திக்கொண்டனர்.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 37 ஆவது நிமிடத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வீரன் எடிசன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப்போட்டார்.

இந்த வேளையில் மத்தியஸ்தர் அணிக்குத் தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனை அந்த அணி சரியாகப் பயன்படுத்திக் கோலாக்கிக் கொண்டது.

சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வீரன் வினோத் தனது அணிக்காக மூன்றாவது கோலைப் பெற்றுக்கொடுத்துத் தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆட்டமுடிவில் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இறுதியாட்டங்கள் செவ்வாயன்று

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி சங்கம் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு இடையே நடத்தி வரும் கிரிக்கெட், வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்துச் சங்கானை பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணியை எதிர்த்துச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (த-23)

# பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நீண்ட காலத்தின் பின் மீளமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்டிருந்த பேர் சூழ்நிலை காரணமாக செயலிழந்து போன யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தை மீளமைப்புச் செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதில் அந்தச் சங்கத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இந்தச் சங்கத்தின் தலைவராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரனும், உப தலைவர்களாக இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ.ஜேசுதாசன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஏ.கைலாயபிள்ளை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் என்.கேதீஸ்வரன் ஆகியோரும் தெரிவானார்கள்.

செயலாளராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸும், உப செயலாளராக சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் எம்.பேட்டி பனிஸ்ரரும், பொருளாளராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜாவும் உப பொருளாளராக ஆசிரிய ஆலோசகர் ஆர். ராஜசீலனும் தெரிவானதுடன் 15 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (த-23)

# இந்திய வீராங்கனை தோல்வி

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரின் ஏழாவது சுற்றில், இந்திய வீராங்கனை கொனேரு ஹம்பி தோல்வி அடைந்தார்.



அல்பேனியாவில் உள்ள திரானா நகரில், பெண்களுக்கான 34ஆவது உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதில் ''நடப்பு சம்பியன்'' ஹோயு இபான் (சீனா), ஹம்பி விளையாடுகின்றனர். இதன் ஏழாவது சுற்றில் ஹம்பி, கருப்பு நிற காய்களுடன் விளையாடினார். 97ஆவது நகர்த்தலின் போது, ஹம்ப தோல்வி அடைந்தார். ஏழு சுற்றுகளின் முடிவில் ஹம்பி 2-5 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளார். மீதமுள்ள மூன்று சுற்று போட்டிகளில் ஹம்ப வெற்றி பெறும் பட்சத்தில், தொடரை சமன் நிலை செய்து, 'ரை- சமநிலை' சுற்றில் விளையாடலாம். (த)

# உலக ஹொக்கித் தொடர் இந்தியாவில்

உலக ஹொக்கி லீக் தொடரில் சென்னை சார்பில், சென்னை சீட்டாஸ் அணி களமிறங்குகிறது. இந்திய ஹொக்கி கூட்டமைப்பு (ஐ.எச்.எப்.,) மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து, உலக ஹொக்கி லீக் எதிர்வரும் டிசம்பர் 17 முதல், ஜனவரி 22 வரை நடத்துகிறது. இதில் இந்தியா மற்றும் உலகில் இருந்து மொத்தம் 200 வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இத்தொடரில் பங்கேற்க மும்பை, சென்னை, டில்லி, ஐதராபாத், பெங்களூர், புனே, சண்டிகர், போபால், பஞ்சாப், ராஞ்சி மற்றும் ரூர் கெலா நகரங்கள் தேர்வு செய்யப் பட்டன. இதில் ஏலத்தில் எடுப்பதைப் பொறுத்து, எட்டு அணிகள் இத்தொடரில் பங்கேற்கும். (த)

# 6 ஆல் ஏமாற்றம்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக மும்பையில் நடைபெற்றுவரும் கடைசி டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றைய தினம் சச்சின் டெண்டுல்கர் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 67 ஓட்டங்களுடன் களத்திலிருந்த சச்சின் நேற்றையதினம் மேலதிகமாக 33 ஓட்டங்களைப் பெற்று, சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்வார் என்று ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், துரதிஷ்டவசமாக 94 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் அவர், ராம்போல் வீசிய பந்தில் டரன் சமியிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

உலக சாதனைக்கு 6 ஓட்டங்கள் மாத்திரமே சேர்க்கவேண்டிய நிலையில் சச்சின் ஆட்டமிழந்து சென்றமை ரசிகர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

சச்சின் டெண்டுல்கர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்களையும், ஒருநாள் போட்டிகளில் 48 சதங்களையும் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)



சச்சின்

# சம நிலை செய்தார் ஆனந்த்



மிக்கைல் டால் நினைவு செஸ் தொடரின், ஏழாவது சுற்று ஆட்டத்தை, உலக சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் சம நிலை செய்தார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில், நடக்கும் 6ஆவது மிக்கைல் டால் நினைவு செஸ் தொடரில், உலகின் பத்து முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர். இதன் முதல் ஆறு சுற்று போட்டியை சமநிலை செய்த ஆனந்த், ஏழாவது சுற்று போட்டியில் நோர்வேயின் மக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டார். இப்போட்டி 29 ஆவது நகர்த்தலின் போது சமநிலை ஆனது.(த)

# வென்றது பாகிஸ்தான்

அபுதாபியில் நேற்று இடம்பெற்ற இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

ஏற்கனவே டெஸ்ட், ஒரு நாள் தொடரை பாகிஸ்தானிடம் இலங்கை இழந்த நிலையில் நேற்றைய போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க, டில்ஷான் களமிறங்கினர். ஆட்டத்தின் முதலாவது பந்தை அகலப் பந்தாக வீசி பந்து வீச்சை ஆரம்பித்தார் உமர் குல். முதாலவது பந்து பரிமாற்றத்தில் அடக்கி வாசித்த இலங்கை அணி இரண்டாவது பந்து பரிமாற்றத்திலிருந்து அதிரடியைத் தொடங்கியது. டில்ஷான், தரங்க இருவரும் பாகிஸ்தானின் பந்து வீச்சை போட்டுத் தாக்கினர். ஒவ்வொரு பந்து பரிமாற்றத்துக்கும் இரண்டு நான்கு ஓட்டங்கள் பறந்தது. 3.2 பந்து பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தரங்க 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து நுழைந்த சந்திமால், டில்ஷானுடன் இணைந்து அதிரடியைத் தொடங்கினார். இலங்கையின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 28 பந்துகளிலேயே அணி 50 ஓட்டங்களைக் கடந்தது. இலங்கையின் அதிரடியாட்டத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தான் அணி 6 ஆவது பந்து பரிமாற்றத்திலேயே சுழற் பந்து வீச்சாளர் அஜ்மலை அறிமுகப்படுத்தியது. டில்ஷான் அதிரடியாக விளாசி 4 ஓட்டத்துடன் கணக்கை ஆரம்பித்தார். அடுத்த பந்திலேயே அஜ்மல் டில்ஷானை வெளியேற்றினார். அணி 61 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்ஷான் 15 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து நுழைந்த சங்கா 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பத்து பந்து பரிமாற்றங்களின் நிறைவில் அணி 3 இலக்குகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணியின் முக்கிய இலக்குகள் வீழ்த்தப்பட்டதால் அணி 71 பந்துகளில் 100 ஓட்டங்களை எட்டியது. மத்தியூஸ் மற்றும் சந்திமால் இணைந்து இலங்கை அணியை வலுவான பாதையில் அழைத்துச் சென்றனர். 4 ஆவது இலக்குக்காக 32 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மத்தியூஸ் ஆட்டமிழந்தார். மத்தியூஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 119 ஓட்டங்களுக்கு 4 ஆவது இலக்கை பறிகொடுத்தது.

பின்வரிசையில் நுழைந்த சாமர சில்வா, சந்திமாலுடன் ஆட்டத்தை தொடர்ந்தார். சிறப்பாக ஆடிய சந்திமால் 40 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தை கடந்தார். ஆரம்பத்தில் அதிரடியாக ஆடிய இலங்கை அணி பின்னர் மெதுவாக பாகிஸ்தானின் பந்து வீச்சுக்கு பணிந்தது. சமாரசில்வா 4 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கையின் இலக்குகள் சீராக இழக்கப்பட்டது. சிறப்பாக ஆடிய சந்திமால் 44 பந்துகளில் 6 நான்கு ஓட்டங்களுடன் 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க இலங்கையின் 6 ஆவது இலக்கு 138 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து நுழைந்த திஸ்ர பெரேரா ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும், மலிங்க ஒரு ஓட்டத்துடன் 19 ஆவது பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்து வெளியேற இலங்கையின் அதிரடி முடிவுக்கு வந்தது. இறுதியில் 19.3 பந்து பரிமாற்றங்களில் 141 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இறுதி 6 இலக்குகளும் 8 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் வீரர்களால் வீழ்த்தப்பட்டன. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஷீமா 30 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், குல் 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குளையும் சரித்தனர்.



பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்ட களம் புகுந்தது பாகிஸ்தான். மலிங்க வீசிய முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பகாட் அதிரடியாக மூன்று நான்கு ஓட்டங்கள் விளாசி கணக்கை தொடங்கினார். வேகமாக ஆடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கை இழந்தது. ஹபீஸ் 13 ஓட்டங்களுடன் திஸ்ஸர பெரேராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அணி 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறப்பாக ஆடிய பர்கத் 15 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டங்களுடன் அஜந்த மெண்டிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தர்ர். அடுத்து நுழைந்த உமர் அக்மல் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் டில்ஷானின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க 44 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது.

47 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்த பாகிஸ்தான் அணி நான்காவது இலக்குக்காக இணைந்த அஷாட் சபிக் அணித் தலைவர் மிஷ்பா இருவரும் அணியை சிறப்பாக முன்னேற்றிச் சென்றனர். அசாட் சபிக் மலிங்கவின் வேகத்தில் 33 ஓட்டங்களுடன் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து களம் புகுந்த அதிரடி வீரர் அப்ரிடி வாணவேடிக்கை காட்டினார். அப்ரிடி 15 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 22 ஓட்டங்களைப்பெற்றுபெர்ணான்டோவின் பந்தில் சங்கக்கராவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து சொய்ப் மலிக் களம்புகுந்தார். 19.3 ஓவர்களில் அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் ஆட்டமிழக்காமல் பெற்ற 48 ஓட்டங்களின் துணையுடன் 142 ஓட்டங்களை எடுத்து வெற்றியைத் தனதாக்கியது. இலங்கை அணியின் 4 இலக்குகளைச் சரித்த அசாஸ் சீமா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ந-15)








# அஸ்வின் அடித்தார் சதம் சமநிலை நோக்கி ஆட்டம்

இந்திய அணியை விட 189 ஓட்டங்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னிலையில் உள்ளது. முதலாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்ற 590 ஓட்டங்களுக்குப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அஸ்வினின் சதத்தின் உதவியுடன் 482 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத்தீவுகள் அணி விளையாடிவருகின்றது. முதலில் இடம் பெற்ற 2 டெஸ்ட் ஆட்டங்களிலும் இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியது. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மும்பையில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

டரன் பிராவோவின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 590 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி சார்பில் துடுப்பாட்டத்தில் டரன் பிராவோ 166, கிரிக் எட்வேட்ஸ் 86, கிரன் பவல் 81, பிறத்வெயிட் 68, பரத் 62, சாமுவேல்ஸ் 61 ஓட்டங்களைக் குவித்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவு வரை 281 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கம்பீர் 55, சேவாக் 37, டிராவிட் 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். சச்சின் 67, லக்ஸ்மன் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே லக்ஸ்மன் மேலதிக ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சிறப்பாக சச்சின், ஹோக்லி ஜோடி துடுப்பெடுத்தாடியது. சதத்தில் சதம் கடப்பார் என்று எதிர்பார்க்கப்பட் சச்சின் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து நுழைந்த டோனியும் 8 ஓட்டங்களுடன் வெளியேற இந்தியாவின் ஆட்டம் தடுமாறத் தொடங்கியது. 331 ஓட்டங்களுக்கு அணி 6 இலக்குகளை இழந்திருந்தது. இதன் பின்னர் ஜோடி சேர்ந்த அஸ்வின், ஹோக்லி அணியை மீட்டனர். இந்த ஜோடி அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. சிறப்பாக ஆடிய ஹோக்லி தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

7 ஆவது இலக்குக்காக 97 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹோக்லி 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் நுழைந்த பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத போதும் அஸ்வின் தனித்து நின்று போராடி தனது மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலாவது சதத்தை விளாசினார். இறுதியில் 118 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 15 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 103 ஓட்டங்களுடன் அஸ்வின் ஆட்டமிழக்க இந்திய அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 482 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக ராம்போல், சாமுவேல்ஸ் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

108 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடங்கியது. இருப்பினும் இந்திய அணியின் சிறப்பான பந்து வீச்சினால் 6 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. பரத் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த கிரிக் எட்வேட்ஸ் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 30 ஓட்டங்களுக்கு இரண்டாவது இலக்கை இழந்தது.

இதன் பின்னர் இணைந்த பாரத் வெயிட், டரன் பிராவோ ஜோடி நேற்றைய ஆட்டநேர முடிவு வரை மேலதிக இலக்கு இழப்பின்றி துடுப்பெடுத்தாடியது. நேற்றைய ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பிறத் வெயிட் 34, டரன் பிராவோ 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இரண்டு இலக்குகளையும் ஒஜா வீழ்த்தினார். இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும்.

(ந-15)


இந்திய அணித்தலைவர் டோனியின் இலக்கை சரித்த மகிழ்ச்சியில் மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் சமி

# VACANCY

The swiss Agency for Development and Cooperation (SDC )the representing agency of the swiss Goverment is implemeting several post - conflict and post - Tsunami programmes in srilanka. Its main aim is to enhance human security in srilanka.

SDC in Jaffna inviting applications from professionally qualified persons for the following post.

## Accountant - Jaffna Field Office

The ideal candidate has an Accounting Degree and or professional qualification from a recognised accounting body such as Chartered / Management Accountancy with five years of experience working in a similar capacity in an International Organisation.

**You are going to:**

.*Maintain and update computerised accounting system including preparation of budgets, cash flows, fund transfers and pay roll.
*Finalise accounts on a monthly basis.
*Maintain project accounts and monitoring of project payments
*payments, monitoring of petty cash and perparing bank reconciliation statement.
*Liaise with Bank, Auditors and partners.

**We expect from you:**

*High level of fluency in English.
*Working knowledge of Tamil and Sinhalese.
*Strong organisation skills, ability to interact affectively with international and national personnel.
*working experience with accounting software will have a distinct advantage.
*Excellent computer skills in MS word, Excel and Outlook.
* Ability to work independently and as part of a team.

Appointment will be on an one year contract basis, renew able
Your place of work will be in Jaffna, SDC field office
Attractive and negotiable salary with medical benefits awaits the right candidate.
Application with a motivation letter indicating
*Your home address and contact number
*Salary expectation
*First possible date to start posting
Together with your complete CV should be mailed/ delivered within 10 days to:

**Swiss Agency for Development and Cooperation,**
**SDC- 138/4, kynsey Road, Colombo 8**
**FAX 94112688348,**
**E-mail Colombo@sdc.net / Web.WWW.Swisscoop.lk**
**only short listed candidates will be contacted**

# குடாநாட்டில் மின்தடை

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வீதிகளில் அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்கள் இடமாற்றப்படவுள்ளன. இதனால் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் மின்தடை ஏற்படும் என யாழ். பிரதேச பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், ஆகிய இடங்களில் 28,1,3 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தில் 28, 30, 1 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு, ஈவினை பிரதேசங்களில் 29, 2 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின் தடைப்பட்டிருக்கும்.

இணுவில் மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம் ஆகிய பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதேவேளை- குடாநாட்டில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக பல இடங்களில் மின் கம்பிகள் அறுந்துள்ளதால் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாகத் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (323)

## தவறிவிட்டது

NPWM 7319 என்னும் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு கொடிகாமத் துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடை யில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் 0779174425, 0754169358 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனை

புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 450 ரூபாயும் கல்பேட், ஊர் சேவல் என்பன பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:
தாசன் பாம், 158/5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல TILE ஸ்தாபனத்துக்கு. Female Accounts Assistant, & Show room Sales rep தேவை. யாழ்.நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி: மே/பா உதயன், விளம்பர இல:-4200
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி.Suren@Metrohomes.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன்
பாலசிங்கம் காண்டீபன்
அவர்களின் பாசமிகு
தாயார்
**திருமதி**
**பாலசிங்கம்**
**நாகரத்தினம்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்,** ஓம் சாந்தி!
**(HNDA - DAY, -2005)**

## மரண அறிவித்தல்

*திருமதி குட்டித்தம்பி அன்னலட்சுமி (குஞ்சு)*



உரும்பிராயை பிறப்பிடமாகவும், வேம்பன் வீதி, (ஒஸ்கா) உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி அன்ன லட்சுமி நேற்று (25.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், சற்குணநாதன் (குணம்), இரவீந்திரன்(van-ரவி), திகழ்மதி(பபா), குணசிங்கம்(அப்பன்), அகிலன் ஆகியோரது பாசமிகு தாயும், சுபத்திரா, சற்குணநாதன்(ராசா), துளசி, மலர்(துளசி), சிவனேஸ்வரி(குஞ்சு), தயாநிதி(தயா), ஆகியோரின் மாமியும், சாதுளன், நீலா, சாந்திபா, இராம்குமார், சாமரன், கௌசல்யா, சுதர்சன், கஜீபன், பிறிந்தா, கனீஸ்குமார், கேதீஸ்குமார், றொசாந்தன், அனோஜன், அருண், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சந்தோஸ், சைலேஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பன்வீதி(ஒஸ்கா),
உரும்பிராய் தெற்கு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இலவச மருத்துவ முகாம்(புங்குடுதீவு) விளம்பரம்

சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவை (SLCRP)இன் மனிதாபிமானச் செயற்பாடுகள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் யாழ்.மாவட்டப் பிரிவு இலவச மருத்துவ முகாம் ஒன்றை நாளை 27.11.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவில் நடத்தவுள்ளது.

மு.ப 9.00 - 12.00 - புங்குடுதீவு மகாவித்தியாலயம்
பி.ப.2.00 - 4.00 - புங்குடுதீவு கமலாம்பிகை மகாவித்தியாலயம்

**சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவை**
**யாழ்.மாவட்டம்**

## ஈசன் திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மண மக்கள், டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், வர்த்தகர் உட்பட அனைத்து மண மக்களும் எம்மிடம் உண்டு. நேரடியாகவும், தபால் மூலமும் தொடர்பு கொள்ளவும்.
தெல்லிப்பளை வீதி, வட்டுவடக்கு, வட்டுக்கோட்டை.
Email- esanthirumana servai@gmail.com
T.P- 0773618507.
0217900924. Fax-0212223734

## தவறிவிட்டது

பொன்னுத்துரை றஜீவன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 762263980V வாகன அனுமதிப்பத்திரம் என்பன நேற்று 25.11.2011 திருநெல்வேலிக்கும் டிப்போவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0774618716, 0776279571, புனித செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

**சமைத்த உணவு விநியோகம், சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை, வாகன சுத்திகரிப்பு சேவை, அழுக்குத் துணி சலவை சேவை, காகிதாதிகள் மற்றும் மின்சார நீர் விநியோகப் பொருள்கள் வழங்கல்**

### சேவைகளுக்கான பெறுகைகள்- 2012

நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் எமது பணிமனையில் கிடைக்கும் கேள்விப்பத்திர படிவத்தினைப் பூர்த்தி செய்து ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக குறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 02.12.2011 வரையான காலப்பகுதியில் 9 மணி தொடக்கம் 15 மணிவரை (12.30 - தொடக்கம் 13 மணி தவிர்ந்த) நேரங்களில் 572/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கேள்விகள் 05.12.2011ஆம் திகதி மு.ப 10 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இப் பணிமனையின் மேலதிக பிராந்தியப் பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது அலுவலக நேரத்தில் தொலைபேசி இலக்கம் 0212222278 (Ext.21) ஊடாக அறிந்து கொள்ளமுடியும்

**தலைவர்: திணைக்கள பெறுகைகள் குழு மாகாண சுகாதார சேவைகள்.**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2012ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு, பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குதவற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரிதவிர) | மாத வாடகை (வற் வரிதவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| | சுன்னாகம் பத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 2000 | 30000 | 900,0000 | |
| | கருவாட்டுக் கடை இல.3 | 750 | 7500 | 44550 | 250 |
| | கருவாட்டுக் கடை இல.4 | 750 | 7500 | 44550 | 250 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| | மருதனார் மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000 | 30000 | 13100000 | |
| | மல்வம் சந்தை | 500 | 5000 | 49500 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 2011.11.28- 2011.12.01 பி.ப 2 மணிவரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2011.12.02 நண்பகல் 12 மணிவரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் 2011.12.02 பி.ப 2 மணிவரை

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2011.11.10ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும் எமது தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2011.11.25

**தி.பிரகாஷ்,**
தவிசாளர், வலிதெற்கு, பிரதேச சபை,
சுன்னாகம்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக்கப்பட்டு நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட இடமளிக்கப்படாத நிலையில், நாட்டில் ஜனநாயகமும் உயிர்பெறாது; உங்களுடைய வரவு-செலவுத்திட்டமும் வெற்றியடையாது.

நீதித்துறையில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் அல்லது அவரது உறவினர்கள், வேறு அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிக்கமுடியாது. ஆனால், இன்று அப்படி அல்ல.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அப்பலோ வைத்தியசாலை உட்பட மூன்று நிறுவனங்களில் அவர்கள் உயர் பதவிகளைப் பெற்றுள்ளனர். மற்றும் ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியின் மகன் வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான தனிப்பட்ட நன்மைகளைப் பெறுவதற்காக நீதித்துறையினர் அரசியல்வாதிகளின் அடிவருடிகளாகச் செயல்படும் இழிநிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, அரசியல்வாதிகளுக்கும், அரசின் ஆதரவாளர்களுக்கும் விசேட சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றன.

அரசு சார்பானவர்களையும், அரசையும் மகிழ்ச்சிப்படுத்துவதற்காகப் பொலிஸார் மிகவும் கீழ்த்தரமாகவும், கேவலமாகவும் நடந்துகொள்கின்றனர். இங்கு நாம் பேசும்போது நீதித்துறை தொடர்பாகப் பேசக்கூடாது என்று ஆளுங்கட்சியினர் கூச்சல் போடுகின்றனர். நீதிமன்றங்களில் நடக்கும் பாரதூரமான விடயங்களை இங்கு கூறமுடியாவிட்டால், வேறு எங்கே நாம் பேசுவது?

காலஞ்சென்ற பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர ஜனாதிபதியின் உயர் ஆலோசகர். அவர் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டார். அவருடைய கொலையுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் துமிந்த சில்வா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுடன் நெருங்கியவர்.

போதைப்பொருள் கடத்தலும், மதுபாவனையும் அதிகரித்துள்ளது என்றும் பாதாள கும்பலின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன என்றும் பிரதமரே இந்தச் சபையில் கூறினார். அரசியல்வாதிகளின் அனுசரணையுடன்தானே இவை அரங்கேறுகின்றன.

இதுமட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையான காணிகள் அரசியல்வாதிகளின் நண்பர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயம் காணி அமைச்சருக்கே தெரியாது.

எம்பிலிப்பிட்டியவில் ரூபா 40 கோடி பெறுமதியான காணியும், சொத்துகளும் அரசின் ஆதரவாளர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளன.

இது ஒரு முடிச்சு மாபியாக்களின் வரவு-செலவுத்திட்டம். ஒருபோதும் இது வெற்றி அளிக்காது - என்றார் மங்கள.

(உ-சி)

## கார்த்திகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சினைகளையும் கொண்டிருக்கமாட்டாது.

தமிழ் மக்களை மீட்பதற்கான போர் எனக்கூறி தெருவுக்கு கொண்டுவரப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்னும் தெருக்களிலேயே வாழ்கின்றார்கள். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்படுகின்றன; அவர்களுடைய கலாசாரம் சீரழிக்கப்படுகிறது; அவர்களின் மொழியும் அவமதிக்கப்படுகின்றது.

இன்று சிறையிலே வாடுகின்ற ஒவ்வொரு தமிழ் இளைஞனின் எதிர்காலமும் நம்பிக்கையீனங்களுடனேயே போகின்றது. அவர்களின் குடும்பங்கள் வாழமுடியாமல் தவிக்கின்றன.

போர் முடிந்து கிட்டத்தட்ட 3 வருடங்களை எட்டிப்பிடிக்கும் நிலையில், எத்தனையோ பேர் சிறையிலுள்ளார்கள். எத்தனையோ பேர் காணாமல் போயுள்ளார்கள். எத்தனையோ பேர் சரணடைந்தார்கள். எத்தனையோ பேர் அரசியல் கைதிகளாக உள்ளார்கள்? இதுவரை புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளவர்கள் எத்தனைபேர் என்ற உண்மைகள் இன்னும் வெளிவரவில்லை.

தங்களுடைய அப்பாவின் வருகைக்காக எத்தனையோ குழந்தைகள் கண்ணீருடன் காத்திருக்கிறார்கள். தங்களுடைய குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ எத்தனையோ இளைஞர்கள் ஏங்கிக் கிடக்கிறார்கள். எப்போது விடுதலை பெறுவோம் என்ற பெருமூச்சுடனும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் வாழ்கிறார்கள்.

ஆசியாவின் ஆச்சரியமாக இந்த நாட்டை மாற்றுவோம் என்று கூறியபடி எல்லா இனமும் இங்கு ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்று காட்டமுனையும் அரசு, ஏன் இந்த முன்னாள் போராளிகள் மீது பாரபட்சம் காட்டுகிறது? வெளியே வந்த போராளிகளுக்கு வேலையில்லை; அடிக்கடி இராணுவத் தொந்தரவு; நிம்மதியில்லாத வாழ்க்கை.

இவை தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கெல்லாம் இந்த நாட்டில் எப்போது விடிவு கிடைக்கப்போகிறது? சிறையிலுள்ள சரணடைந்த போராளிகளின் விவரங்களையாவது இந்த ஆசியாவின் ஆச்சரியமான ஜனநாயக நாடு வெளியிடுமா?

வெறும் அபிவிருத்திக் கோஷங்களையும், திறப்புவிழாக்களையும் நடத்துவதால் தமிழினம் நிம்மதியுடன் வாழ்வதாகக் காட்டிக்கொள்ள முடியாது என்ற உண்மை ஊடகங்களுக்கே இப்போது புலப்படத் தொடங்கியுள்ளது. வெள்ளைக் கொடியோடு வந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இன்றுவரை அரசு வெளியிடவில்லை.

தமிழர்களின் கலாசார சின்னங்கள் அழிக்கப்பட்டு அவர்களின் பூர்வீக மண்ணின் அடையாளமே இல்லாமல் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. எல்லாளனுடன் போரிட்ட துட்டகைமுனு எல்லாளனுக்கு வணக்கம் தெரிவித்து சமாதி கட்டினான். இது அக்கால சிங்கள மக்களின் உயர்ந்த பண்பாட்டைக் காட்டுகின்றது.

ஆனால், இன்று போரிலே மடிந்த தங்கள் வீரர்களுக்கு பூவைக்க முடியாமல் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தமிழர்களின் ஒரேயொரு பெருவிழாவான மாவீரர் தினம் கூட கோயில்களில் மணியடித்து பூஜை செய்வதற்கு - ஆண்டவனுக்கே தடையான நாளாக அறிவிக்கப்படுகிறது.

ஓர் இனத்தின் உணர்வுகளைப் புரிந்து, வாழ்வியல் உரிமைகளைப் புரிந்து, அவர்களின் இனத்துவத்தை மதித்து நடக்காதவரைக்கும் யாரும் நிம்மதியோடு இந்த மண்ணில் வாழமுடியாது என்ற உண்மை வெளிப்பட ஆரம்பித்துள்ளது.

ஆறாத காயங்களோடு வாழும் தமிழ் மக்களைப் பார்த்து காயங்களைக் கிளற வேண்டாம் என்று கூறுவதன்மூலம் ஒரு தீர்வை எட்டமுடியுமா?

2006 ஆம் ஆண்டுமுதல் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இராணுவப்பிடிக்குள்ளிருந்த யாழ்ப்பாண மண்ணில் காணாமற்போன ஆயிரக்கணக்கான இளைஞர்களின் கதி என்ன என்று இன்னும் வெளிவரவில்லை. தாய் தந்தையருக்கு முன்னால், மனைவிக்கு முன்னால் பகிரங்கமாகக் கடத்திச் செல்லப்பட்டவர்களின் நிலை என்ன? இன்னும் தங்கள் பிள்ளைகளைத் தேடியலையும் இவர்களின் கண்ணீருக்கு இந்த ஜனநாயக நாட்டில் என்ன கிடைக்கப்போகிறது?

கிழக்குத் தீமோரின் வரலாற்றையும், தென் சூடானின் பிரசவத்தையும், எகிப்திலும் லிபியாவிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டிய காலம் வந்துள்ளது.

மாவீரர் துயிலும் இல்லங்களும் நினைவுச் சின்னங்களும் அடியோடு அழிக்கப்பட்டாலும் தமிழர் மனங்களில் நினைவுகளை இல்லாமல் செய்யமுடியுமா? கற்களும் செங்கற்களும் மக்களின் குரல்களைக் கொன்றுவிடுமா? - என்றார் சிறிதரன்.

(உ-சி)

## மாத்தறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 மீனவர்கள் உட்பட 12 பேர் பலியாகி உள்ளனர். உயிரிழந்த மீனவர்களில் ஐவரின் சடலம் மாத்தறை கடற்கரையில் நேற்று மீட்கப்பட்டது. மேலும் பல மீனவர்களின் படகுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

மாத்தறை மாவட்டத்தில் திடீரென வீசிய மினி சூறாவளியால் 1000 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்தோடு வீதிகளில் நின்ற மரங்கள் முறிந்து வீழ்ந்ததாலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. தொடர்ந்தும் சீரற்ற கால நிலை நீடிப்பதால் இழப்புகள் இன்னும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது -என்றார்.

(ங)

## ரிதிவெடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமைச் சேர்ந்த சி.ஜெகநாதன் (வயது-24) என்ற இளைஞரே இவ்வாறு இடதுகாலில் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(த-78)

## அனலைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் தெரிவித்தார். கடந்தமாதம் 2ஆம் திகதி ஊர்காற்றுறை பிரதேச சபையின் துணைத் தலைவர் 3 பேரினால் கடுமையாக தாக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பி யின் முன்னாள் உறுப்பினர் காண்டீபனும் அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் இவர்களை விடுவிக்க வேண்டாம் என்று கோரியும் அனலைதீவு மக்களால் கையொப்பம் இடப்பட்ட முறைபாடு ஒன்று ஊர்காற்றுறை பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டிருந்தது.

கடந்தமாதம் 16 ஆம் திகதி நீதிமன்றம் இவர்களுக்கு பிணை வழங்கியிருந்தது. ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையிலும், 20 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் அனலைதீவை விட்டு வெளியே செல்லக்கூடாது மற்றும் ஊர்காற்றுறை பொலிஸ் நிலையத்தில் வாரத்தில் இருநாள்கள் கையொப்பம் இடவேண்டும் என்னும் நிபந்தனைகளுடனேயே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஈ.பி.டி.பியின் மேற்படி முன்னாள் உறுபினரின் வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து அனலைதீவு மூன்றாம் வட்டாரத்தில் உள்ள அவரது வீட்டில் தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது எந்த விதமான ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்று பொலிஸரால் தெரிவிக்கப்பட்டது.

எனினும்மேற்படிவீட்டில்இருந்துஇரண்டு கிரனேட்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டதாக பிரதேச மக்கள் கூறினர். ஆயினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (உ-15)

## சிறுபான்மையினரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குப் பதிலளித்திருக்கும் ரவி கருணாநாயக்க, "இல்லை. அது முழுப் பொய். உண்மையில், அளவுக்கதிகமான உதவிகளைச் செய்யப்போய் நாம் கஷ்டத்தில் விழுந்தோம்.

சிறுபான்மையினரைப் பாதுகாக்கப்போய் எமது கட்சிக்கு பெரும்பான்மையினரும் இல்லாமற்போயினர்.

கொழும்பு மாநகரசபையில் மனோ கணேசனின் ஆதரவு தேவையில்லையா? என்று கேட்கப்பட்டதற்குப் பதிலளித்துள்ள ரவி கருணாநாயக்க "அவர் ஆதரவு தெரிவிக்க விரும்பினால் தெரிவிக்கலாம். ஆனால், மண்டியிட்டு கேட்கவேண்டிய அவசியம் எமக்கில்லை" என்றார். (உ-சி)

## ஆலய மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை விதிக்கப்பட்டது. ஆனால் அந்தணர்கள் பூசை செய்யும் ஆலயங்களில் பூசை இடம்பெறாவிட்டால் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய கட்டாய நிலைமை தோன்றுமெனச் சுட்டிக்காட்டப்பட்டதால் அவற்றில் பூசை செய்வதற்கு படையினர் அனுமதி வழங்கினர் என்றும், எனினும் மணி ஒலி எழுப்புவதற்கு அந்தந்த ஆலயங்களில் தடை நீள்கிறது என்றும் மக்கள் கூறினர்.

இதேவேளை, அந்தணர்கள் அல்லாதவர்கள் பூசை செய்யும் ஆலயங்களில் இந்த மூன்று தினங்களும் பூசை வழிபாடுகளோ, அல்லது மணியோசை எழுப்புதலோ இடம்பெறக் கூடாதெனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் மற்றும் மாவீரர் நாளையொட்டியே இராணுவத்தினர் இந்தத் தடைகளை விதித்துள்ளனர் என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

## இன்று பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்திருந்ததுடன், ரோந்து நடவடிக்கைகளிலும் சிறு சிறு குழுக்களாக இராணுவத்தினர் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

நவம்பர் 26 இல் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தை அந்த அமைப்பினர் சிறப்பாக கொண்டாடுவது வழமை. அந்தவகையில் இம்முறையும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்பதாலேயே வடபகுதியில் திடீர் என பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கிறீஸ் பூத விவகாரம் அடங்கிய பின்னர் தளர்ந்திருந்த படையினரின் சோதனை நடவடிக்கைகள் பிரபாகரனின் பிறந்ததினம், மாவீரர் நாள் என்பவற்றால் மீண்டும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதனால் பொது மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ங)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்கள் உறவினர்கள் வீட்டில் தற்காலிக விசாவில் வசிக்க வாய்ப்புள்ள இலங்கை மற்றும் ஆப்கான் அகதிகள் 27 பேர் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆண்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் புகலிடம்கோரியோர், நன்நடத்தை, குடும்பம் மற்றும் உறவினர்கள் திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அகதிகள் விடுவிக்கப்படுகின்றனர் என ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிரிஸ் பொவென் தெரிவித்துள்ளார்.


ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அருளிய
ஸஹஜ் சமாதி தியானம்
மந்திரம் மூலம் செய்யப்படும்
எளிமையான அதி சக்தி வாய்ந்த
தியானம்
இன்று ஆரம்பம்
நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் 3 மணிக்கு
தொலை பேசி: 0779434879,0777740593

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம்
26
05
1979

மறைவு
26
11
2007
அமரர்
தங்கராசா தயாரூபன்
காலத்தின் வேகத்தில் கரைந்துபோன நாள்கள்
ஒன்றுகூடி ஆண்டுகள் நான்கு ஆனது
ஞாலத்தில் பாசத்திருவுருவாய் வந்த எம்மிடமிருந்து
பறிக்கப்பட்டு காலதேவன் காலடி சென்றமை
இன்றும் நெஞ்சில் ஆறாத காயங்களாய்
இருக்கின்றன,நாளும் உள்ளத்தில் உன் நினைவுகளே
கனவுகளாய் இருப்பதை அறிவியோ நீ!
புத்தூர் கிழக்கு,
குமாரசாமி வீதி.
குடும்பத்தினர்.

# வன்னி மாணவர் உடலில் குண்டுச் சிதறலை அகற்றுவதற்கு உடன் நடவடிக்கை அவசியம்

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து

கொழும்பு,நவ.26

வன்னியில் யுத்தத்தால் காயமடைந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரின் உடல்களில் இன்னும் ஷெல், மோட்டார் குண்டுகளின் சிதறல்கள் மற்றும் துப்பாக்கிக் குண்டுகள் இருக்கின்றன. அவற்றை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் இடம்பெயர்ந்த நிலையில் உள்ள மக்களும், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களும் தற்போது பெய்துவரும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல், வன்னியில் யுத்தக் காலத்தின்போது காயமடைந்த பலர் உள்ளனர். அவர்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உடல்களில் இன்னும் தோட்டாக்குண்டுகளும், ஷெல் மற்றும் மோட்டார் குண்டுகளின் சிதறல்களும் உள்ளன.

பாடசாலை மாணவர்கள் இவற்றைத் தங்களின் உடல்களில் தாங்கிக்கொண்டு பெரும் அவஸ்தைப்படுகின்றனர். அவர்களால் கல்வியில் கவனஞ்செலுத்த முடியாதுள்ளது. இவற்றை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

அரசு இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு தகவல் திரட்டுவதே சிறந்தது என்றும் சிவசக்தி ஆனந்தன் மேலும் கூறினார்.

இந்த விடயத்தில் நான் தலையிட்டு தகவல்களைத் திரட்டத் தயார் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் கூறினார்.

SHAM ROCK Academy
27.11.2011 ஞாயிறு
மீண்டும் வழமை போல்
வகுப்புகள் நடை பெறும்.
நிர்வாகி.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும்
உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள்,
விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகளுக்கான
இலவச ஆங்கில வகுப்பு
26.11.2011 சனி : பிரிவு 1 : மதியம் 12.30-2.00
01.12.2011 வியாழன் : பிரிவு 2 : 9-11 பிரிவு 3 : 4.30-5.30
அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்
டிப்ளோமா பயிற்சிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# யாழ். பல்கலையில் மாவீரர் நிகழ்வா? பறந்து வந்து பார்த்துத் திரும்பியது பொலிஸ்

யாழ்ப்பாணம்,நவ.26

மாவீரர் தினத்தை யொட்டி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மௌன அஞ்சலி செலுத்திவருகின்றனர் என்ற தகவலால் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று சிறிது பரபரப்பு ஏற்பட்டது. கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். எனினும் எந்த அசம்பாவிதங்களும் இல்லாததால் பொலிஸார் அமைதியாகத் திரும்பினர்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு மற்றும் வளாகத்திலுள்ள மண்டபங்கள், விரிவுரை அறைகளைச் சென்று பார்த்த பொலிஸார் வழமைக்கு மாறான எந்த நிகழ்வும் இல்லாததால் அமைதியாகத் திரும்பினர். பல்கலைக் கழகத்துக்குள் பொலிஸார் குவிக்கப்பட்டும் சூழலில் இராணுவத்தினர் தயார் நிலையில் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டும் இருந்ததால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பதற்றம் நீடித்தது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முற்பகல் கூடிய மாணவர்களில் ஒரு பகுதியினர் தமிழினத்தின் விடுதலைக்காக போராடி வீரச்சாவடைந்த போராளிகளுக்காகவும், போரில் மரணமடைந்த மக்களுக்காகவும் மௌன அஞ்சலியைச் செலுத்தினர் என்பதே பரவிய தகவல்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திடம் கேட்ட போது:-

''பல்கலைக் கழகத்தினுள் நிலைமையை அவதானிப்பதற்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் என்னிடம் அனுமதியைக் கேட்டார். அதற்கான அனுமதியை வழங்கினேன். பல்கலைக்கழகத்தின் நிலைமையை அவதானித்து விட்டு அவர்கள் சென்று விட்டனர்'' என்றார்.

பல்கலைக் கழகத்தைச் சோதனையிட வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரைக் கேட்டபேது, பல்கலைக் கழகத்தில் பிரச்சினை நடப்பதாக அங்கிருந்து தகவல் ஒன்று கிடைத்தது. அங்கு சென்று சோதனை செய்தபோது பிரச்சினை எதுவும் இடம் பெறவில்லை எனத் தெரியவந்தது. நாம் அங்கு யாரையும் தாக்கவும் இல்லை; கைது செய்யவும் இல்லை ''- என்றார். (உ-14)

# மழை, மண்சரிவு பேரிடர்களின்போது அவசர உதவி வழங்க ஜனாதிபதி பணிப்பு

வெள்ளம், சூறாவளி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களின்போது தேவைப்படும் அவசர உதவிகளுக்காக பாதுகாப்புப் பிரிவினரின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ தேசிய சபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற இடர் முகாமைத்துவ தேசிய சபையின் 7ஆவது கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக எதிர்காலத்தில் ஏற்படும் மண்சரிவுமற்றும்வெள்ள அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளுமாறும், இடர் முகாமைத்துவ தேசிய சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேடல் மற்றும் மீட்புப் பிரிவை விரைவில் நியமிக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அனர்த்த நேரங்களில் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்குக் காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவேண்டும். அதேபோன்று, மண்சரிவினால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான நட்டஈட்டுத்தொகைகளை வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை தேவை என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான பந்துல குணவர்தன, பீலிக்ஸ் பெரேரா, பஸில் ராஜபக்ஷ, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.மொஹமட் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

யாழ் நகரில் வெளிநாடு செல்ல இருக்கும்
மாணவர்களுக்கான
விஷேட ஆங்கில பாடநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
முதல் 10 மாணவர்களுக்கு 25% கழிவு
City & Guilds பரீட்சைகள் (A1,A2- B1,B2- C1,C2)
• UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது
• சான்றிதழுக்கு கால எல்லை இல்லை
• நம்பிக்கைக்குறிய சர்வதேச பரீட்சை
• ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
• எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கு A1 Exam
Student Visa மூலம் UK செல்பவர்களுக்கு B1 & B2 Exam
IELTS
GENERAL /ACADEMIC
Full Time & Part Time
Diploma in English
> ஒவ்வொறு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
> இரண்டே மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்
> பாடநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன
City & Guilds அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்
LONDON METROPOLITAN COLLEGE
No:197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
LONDON METROPOLITAN COLLEGE
Tel: 021 222 7230, 021 753 8395

NALRAVI
SPOKEN ENGLISH
பயிற்சி நெறியைப் பற்றி:
• 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
• முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
• விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
• வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
• ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்
ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்
யாருக்காக:
• 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
• பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்
வகுப்பு நேரங்கள்:
BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்

NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond
Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004
Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.